பக்கங்கள் : பதினெட்டு

Regi... ...ewspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 26 திங்கட்கிழமை (09.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :164

## சிவராமைக் கருணாவே நேரடியாகக் கொன்றார்?

கொழும்பு,மே9

ஊடகவியலாளர் சிவராமை கருணாவே தனது கைகளால் சுட்டுக் கொன்றிருக்கலாம் என்ற தகவலை ஊடகவியலாளர் டி.பி.எஸ்.ஜெயராஜ் வெளியிட்டிருக்கின்றார்.

'கருணாவே நேரடியாக தராக்கி சிவராமைக் கொன்றாரா?' - என்ற தலைப்பில் 'த சண்டே லீடர்' பத்திரிகையில் தாம் வரைந்த கட்டுரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

சிவராமைக் கடத்தியவர்கள் அவரை சித்திரவதை செய்தார்கள் என்பதற்கோ விசாரணைக்கு உட்படுத்தினார்கள் என்பதற்கோ தடயம் ஏதுமில்லை. கடத்தப்பட்டு ஒரு சில மணித்தியாலங்களில் அவர் கொல்லப்பட்டுவிட்டார்.

சிவராமைக் கடத்தியவர்களின் எண்ணம் அவரை விசாரணைக்கு உட்படுத்தாமல் வெறுமனே கொல்வது மட்டுமாயின் அவரைத் தாங்கள் கடத்திய இடத்திலேயே சாவகாசமாகச் சுட்டுவிட்டுச் (18ஆம் பக்கம் பார்க்க)

## கணனிக் கல்வி ஆசிரியர் சனியிரவு தெஹிவளையில் சுட்டுக் கொலை!

கொழும்பு,மே9

கணனிக் கல்வி 'ரியூஷன்' ஆசிரியரான தமிழ் இளைஞர் ஒருவர் கொழும்பு தெஹிவளையில் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9.10 மணியளவில் தெஹிவளை இரண்டாவது ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

கொல்லப்பட்டவர் நடராஜா ஜீவானந்தம் (வயது - 25) என்று அடையாளம் காணப்பட்டார்.

சம்பவதினம் தெஹிவளை இரண்டாவது ஒழுங்கையில் இவர் சென்றுகொண்டிருந்த சமயம் இவரைப் (18ஆம் பக்கம் பார்க்க)

### அமைதி முயற்சிகளில்

# வெறும் வாய்ப்பேச்சை விடுத்து இனி செயலுக்குப் போவோம்!

## ஜே.வி.பி. அமைச்சர்களை வைத்துக்கொண்டு ஜனாதிபதி குமாரதுங்க நேற்று அறிவிப்பு

அநுராதபுரம்,மே9

**'அமைதி முயற்சிகள் விடயத்தில் வெறும் வாய்ப்பேச்சில் அர்த்தமில்லை. இனி அவற்றை விடுத்து செயலுக்குப் போவோம்'.**

**- இவ்வாறு அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

**தமது கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. அமைச்சர்களையும் பக்கத்தில் வைத்துக்கொண்டே இவ்வாறு பகிரங்கமாக அறிவித்தார் அவர்.**

'நாட்டில் அமைதி முயற்சிகளுக்கான தீர்வுகளை வெறும் வார்த்தைகளுக்குள் மட்டும் நாம் வரையறுப்பதில் அர்த்தமில்லை. நாட்டைப் பிரிக்காமல் - தாரைவார்க்காமல் - மேற்கொள்ளப்படும் அமைதி முயற்சிகளுக்கும் தீர்வுக்கும் ஆதரவளிக்கவேண்டியது அனைவரினதும் கடமை ஆகும்.

உறுதியான தீர்வு கிடைக்காது என்று கூறிக்கூறி தீர்வுகாண்பதற்கான முயற்சிகளை தள்ளிப்போடுவது அர்த்தமற்ற செயற்பாடாகும்' - என்றும் அவர் கூறினார்.

பத்தாயிரம் குளங்களைப் புனரமைப்பதற்கான அரசின் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை அனுராதபுரம் கஹட்டகஸ்திகிலிய (18ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் புலிகளின் நிலைமீது மீண்டும் துப்பாக்கிச் சூடு!

மூதூர்,மே9

மூதூர் கட்டைபறிச்சானில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முன்னணிக் காவலரண் மீது நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரவு 9.45 மணியளவில் தமது காவலரண் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்று புலிகள் தமது முறைப்பாட்டில் தெரிவித்தனர்.

கட்டைபறிச்சானில் இராணுவக் கட்டுப்பாட் (18ஆம் பக்கம் பார்க்க)

## கொல்லப்பட்ட இருவரும் புலிகளின் உறுப்பினர்கள்

வாழைச்சேனை ஓமடியாமடு பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்ட இருவரும் தமது போராளிகள் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

களுவன்கேணியைச் சேர்ந்த லெப்டினன் நிலவரசன் எனப்படும் இராசலிங்கம் சங்கர், வளத்தாப்பிட்டியைச் சேர்ந்த கப்டன் சுபன் எனப்படும் அரசரத்தினம் விக்கினேஸ்வரன் ஆகியோரே அவர்கள் என விடுதலைப் புலிகள் தரப்புச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இவர்கள் தேசவிரோதிகளால் படுகொலை (18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடைய விமானத்தளத்துக்கு மின்னியல் வான் பாதுகாப்பு வசதி!

கொழும்பு,மே9

கிளிநொச்சி, இரணைமடுவில் தமிழீழ விடுதலைப் புலிகள் தாம் அமைத்திருக்கும் விமானத்தளத்துக்கு மின்னியல் (எலக்ட்ரோனிக்) வான் பாதுகாப்பு வசதிகளைப் பொருத்தியிருக்கின்றனர்.

அப்பகுதியூடாக இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர்கள் பறந்து சென்றபோது இது ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கின்றது.

பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ், வாராந்த பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான தனது கட்டுரையில் இந்த விடயத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

இந்தவகை வசதி பொருத்தப்பட்டுள்ள பிரதேசத்தை வேறு அநாமதேய விமானங்களோ, எதிரிகளின் வான் கலங்களோ நெருங்கினால் அங்குள்ள கருவிகள் தாமாகவே இயங்கி அந்த வான் கலங்களை நோக்கித் தம்வசமுள்ள நிலத்திலிருந்து வானுக்குச் செலுத்தும் - ஏவுகணைகளால் இலக்குவைக்கும். தேவைப்பட்டால் தானாகவே இயங்கி அந்த வான் கலங்களை அழிக்கும்.

இந்த வசதியை - வான் வழிப்பாதுகாப்பு (18ஆம் பக்கம் பார்க்க)

## பள்ளிமுனை கிணற்றிலிருந்து ஜி-3 ரக துப்பாக்கிகள் 5 மீட்பு!

கொழும்பு.மே9

மன்னார் பள்ளிமுனையில் கிணறொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகளும் ஒரு தொகை ரவைகளும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை மன்னார் பொலீஸாருக்குக் கிடைத்த தகவலொன்றை அடுத்தே பள்ளிமுனைப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த இந்தப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

பொதிசெய்யப்பட்ட நிலையில் ஜி-3 ரக துப்பாக்கிகள் ஐந்து. அதற்குரிய ரவைகள் 906 என்பன கிணற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டன எனப் பொலீஸார் கூறினர்.

இந்திய இராணுவம் இலங்கையில் இருந்த காலத்தில் அது தமிழ் ஆயுதக் குழுவொன்றுக்கு இந்த ரக ஆயுதங்களை வழங்கியிருந்தது. அவற்றில் சிலவே மேற்படி கிணற்றில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தினருக்கே இந்திய இராணுவம் இந்த ரக ஆயுதங்களைக் கொடுத்திருந்தது. அந்த இயக்கத்தினர் தப்பிச் சென்றபோது இந்த ஆயுதங்களை மறைத்து (18ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளிடம் விமானங்கள்:

## இந்தியாவின் கருத்துகளால் தமிழ்ச்செல்வன் அதிர்ச்சி!

கிளிநொச்சி,மே9

விடுதலைப் புலிகள் விமானங்களை வைத்திருப்பது கவலை தருவதாக இருக்கிறது என்று இந்தியா தெரிவித்துள்ள கருத்து அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸியின் தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

தமது சுயபாதுகாப்புக்காகவே இராணுவக் கட்டமைப்புகளைத் தமிழ் மக்கள் சுயமாக ஏற்படுத்தி வைத்திருக்கின்றார்கள் என்றும் இதனால், இந்தியாவுக்கோ வேறு எந்த நாட்டுக்குமோ அச்சுறுத்தல் ஏதும் இல்லை என்றும் - அவர் கூறினார்.

50 வருடங்களாகத் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்தார்கள். அவர்கள் ஆயுதங்களை ஏந்தியிருப்பது நிர்ப்பந்தம் காரணமாகவே. தமது சுய பாதுகாப்புக்காகவே அவர்கள் இராணுவக் கட்டமைப்புகளைக் கொண்டிருக்கிறார்கள். (18ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதம் முடிவுக்கு!

மட்டக்களப்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் மூவர் கடந்த 3 நாள்களாக மேற்கொண்டு வந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுக் காலையுடன் முடிவுக்கு வந்தது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களை நேரில் வந்து சந்திக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த 3 நாள்களாக விடுதலைப் புலி உறுப்பினர்கள் 6 பேர் உட்பட 9 கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்களில் 5 பேர் கூரைக்குமேல் ஏறி அமர்ந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு கொழும்பிலிருந்து மட்டக்களப்பு திரும்பிய நாடாளுமன்ற உறுப் (18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



வீடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்' கவிதைத் தொகுதி அறிமுகவிழா நேற்றுமுன்தினம் பிரான்ஸில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கலைஞர் ரகுநாதன் பொதுச் சுடரேற்றுவதை முதலாவது படத்திலும், 'புலிகளின் குரல்' நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் நூலை வெளியீட்டுவைப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

# புதுவையின் கவிதை நூல் பிரான்ஸ் நாட்டில் அறிமுகம்

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தின துரையின் 'பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சு களும்' கவிதைத் தொகுதி அறிமுகவிழா நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு பிரான்ஸின் தலைநக பாரிசில் உள்ள லாசப்பல் மாரியம் மன் கோ கல்யாண மண்டபத்தில் நடை பெற்றது.

கவிஞ கணேசன் தலைமையில் நடை பெற்ற இ நிகழ்வில் கலைஞர் ரகுநாதன் பொதுச் சுடரேற்றினார். இவ்விழாவில் கவிஞர் கி.பி.அரவிந்தன், ரீ.ரீ.என்.தொலைக்காட்சியைச் சேர்ந்த சிவா சின்னப்பொடி உட்படப் பலர் உரையாற்றினர்.

'புலிகளின் குரல்' வானொலிப் பொறுப்பா ளர் தமிழன்பன் நூலை வெளியிட்டுவைத்தார். பத்துக் கவிஞர்கள் இணைந்து கவிஞர் புதுவை இரத்தினதுரையின் தொகுப்பிலுள்ள கவிதை கள் சிலவற்றைக் கவிதா நிகழ்வாக்கினர்.

கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், விடுதலை விரும்பிகள் எனப் பல தரப்பினரும் பெருவாரியாகக் கூடி நிகழ்ச்சியைச் சிறப்பித் தனர்.

(த)

# நுணாவில் பகுதியில் சனியன்று குடும்பஸ்தர் அடித்துக் கொலை!

யாழ்ப்பாணம்,மே9

கைதடி நுணாவில் பகுதியில் நேற்றுமுன் தினம் மாலை இரண்டு பேருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கொலையில் முடிந்தது.

அதேயிடத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான கந்தையா தவச்செல்வம்(வயது 42) என்ற குடும் பஸ்தரே கொலைசெய்யப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு விசாரணை களை நடத்தினார்.

சம்பவதினம் இராசரத்தினம் சிவரூபன் என்ப வர் தனது வீட்டுக்கு வந்து கணவரை அடித் துத் தாக்கினார் என்றும் -

மயக்கமடைந்த கணவர் சாவகச்சேரி ஆஸ் பத்திரியில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ். ஆஸ் பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டபோது அங்கு மரணமானார் என்றும் -

இறந்தவரின் மனைவி யோகரஞ்சினி மரண விசாரணையில் தெரிவித்தார்.

இருவருக்கும் இடையில் காணிப்பிரச்சினை ஒன்று நிலவிவந்தது என்றும் -

அதன் எதிரொலியாகவே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது என்றும் - விசாரணையில் தெரிவிக் கப்பட்டது.

சாட்சியங்களைப் பதிவுசெய்த பதில் நீதி வான் கொலை எனத் தீர்ப்பளித்ததுடன் சந்தேக நபரான இராசரத்தினம் சிவரூபனை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் கும்படி உத்தரவிட்டார்.

(3)

# வடமராட்சியில் டெங்குக் காய்ச்சல்!

செம்பியன்பற்று,மே9

வடமராட்சிப் பகுதியில் டெங்குக் காய்ச் சல் மிகவும் வேகமாகப் பரவிவருகிறது. இந்த டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பலர் தின மும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவிலும் நோயாளர் விடுதியி லும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத் தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.(த-36)

# சிவராம் கொலையைக் கண்டித்து தமிழ்க் காங்கிரஸ் தீர்மானம்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், பத் திரிகையாளர் டி.சிவராமின் கொலையை வன் மையாகக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி யிருக்கின்றது.

யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெரு வில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற் றுக்காலை கட்சித் தலைவர் அ.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற ஒன்றுகூடலின்போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஒன்றுகூடலில் நிறைவேற்றப்பட்ட தீர் மானங்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட செய் திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மூத்த பத்திரிகையாளர் தர்மரட்ணம் சிவரா மின் கொடூரக் கொலையை வன்மையாகக் கண்டிக்கிறது.

இக்கொலை பத்திரிகைச் சுதந்திரத்துக்கு ஒரு சாவுமணியாகும். தமிழ் இனத்திற்கும் ஒரு பேரிழப்பாகும். ஒரு சர்வதேச விசாரணைக் குழு வின் விசாரணையின் மூலம்தான் கொலையின் மர்மத்தைக் கண்டுபிடிக்கமுடியும்.

சுனாமியால் வடக்கு - கிழக்கிற்கு ஏற்பட்ட பேரழிவை வடக்கு - கிழக்கிலே 60 வீத நிலப்பரப்பைத் தம்வசம் வைத்திருக்கும் விடு தலைப் புலிகளுடன் அரசாங்கம் சேர்ந்து ஒரு பொதுக்கட்டமைப்பை அமைப்பதன் மூலம் தான் நிவர்த்தி செய்யமுடியும்.

வடக்கு - கிழக்கிலே வறியவர்களுக்கு (யுத் தத்தால் குடும்பத் தலைவரை இழந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள்) கொடுக்கப்பட்ட உலர் உணவு நிவாரணம் தற்போது நிறுத்தப்பட்டுள் ளது. வறியவர்களை இனங்கண்டு மீண்டும் உலர் உணவு நிவாரணத்தை வழங்கும்படி தமிழ்க் காங்கிரஸ் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறது. - என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(த)

# சிற்றூர்திச் சாரதிகளுக்கு சங்கச் சான்றிதழ் அவசியம்

யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் கள் சங்கத்தில் பதிவுசெய்த சிற்றூர்திகளில் கடமையாற்றும் சாரதிகளுக்கு அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரம் பரிசீலிக்கப்பட்டு சங் கத் தலைமைச் செயலகத்தால் சாரத்தியம் செய் வதற்குரிய அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படு கின்றது.

இன்று திங்கட்கிழமை தொடக்கம் யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங் களின் தலைமைச் செயலகத்தினால் வழங்கப் பட்ட தகைமைச் சான்றிதழ் இல்லாதோர் சாரத் தியக் கடமையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார் கள் என சங்கத்தின் தலைவர் கெங்காதரன் அறிவித்துள்ளார்.

(த-12)

# ஆபாசப் படம் பார்த்த இளைஞர்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம்,மே9

கைதடிப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் ஆபா சப் படம் பார்த்துக்கொண்டிருந்த 9 இளைஞர் களும் கலாசாரம் பேணும் குழுவினரிடம் வச மாக மாட்டிக்கொண்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இவர்களிடமிருந்து ஆபாசப்பட சீ.டிகள் மற்றும் வீடியோ கசட்டு கள் கலாசாரம் பேணும் குழுவினரால் பறிமுதல் செய்யப்பட்டு எரிக்கப்பட்டன.

அவர்கள் 9 பேரும் கடுமையாக எச்ச ரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

(த-7)

# 'வற்' வரியை உடனடியாக அகற்றுக! இன்றேல் கடைகளுக்கு மூடுவிழா!!

## அத்தியாவசிய பொருள் இறக்குமதியாளர் போர்க்கொடி

கொழும்பு,மே9

மதிப்புக் கூட்டப்பட்ட வரியை உடனடியாக நிதியமைச்சர் அகற்றவேண்டும் இல்லையெனில் நாடுமுழுவதிலும்முள்ள தங்கள் கடைகளை மூடி விடப்போவதாக அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர்கள் எச்சரிக்கை விடுத் துள்ளார்கள்.

நிதியமைச்சரிடமிருந்து பத்து நாள்களுக் குள் சாதகமான பதில் கிடைக்காவிடில் நாடு முழுவதிலுமுள்ள தங்கள் கடைகளை மூடிவிடப் போவதாக அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

சீனி, பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்கா யம், கருவாடு, பால்மா, மரக்கறிகள் மற்றும் மிளகாய் போன்ற 90 வீதமான பொருள்களின் இறக்குமதியில் இந்தச் சங்கத்தின் உறுப்பினர் கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தங்கள் கோரிக் கைக்கு விரைவாக நடவடிக்கை எடுக்காமல் போனால் கடும் நடவடிக்கையில் இறங்கப் போவதாக இச்சங்கத்தினர் நிதியமைச்சருக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

கடந்த நிதி வருடத்துக்கான முழு விற் பனைவரியாக ஒரு வீதத்தை அறவிடும்படியும் இந்த வருடத்துக்கான வரியில் சலுகை காட்டு மாறும் அவர்கள் கோரியுள்ளனர். கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 'வற்' வரியினால் இறக்குமதிசெய்யப்படும் சகல பொருள்களினதும் இறுதிச் செலவுகள் அதிக ரித்து விடுவதாக தெரியவந்துள்ள இவர்கள் சங்கப் பகுதியினரிடம் ஏற்கனவே செலுத்தி யுள்ள 5வீத 'வற்' வரியை மீளப் பெற அனு மதிக்கப்படாமையினால் தாங்கள் இரட்டை வரிக் குட்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ள னர். இதுமுற்றிலும் நடைமுறை சாத்தியமற் றது; நியாயமற்றது என்றும் தெரிவித்துள்ள னர்.

(ப)



தென்னிலங்கையின் முக அண்ணப் பிளவு, உதட்டுப் பிளவு சங்கமும் யாழ். றோட்டறிக் கழ கமும் இணைந்து யாழ். ஆஸ்பத்திரியில் நடத்தவுள்ள அண்ணப்பிளவு சத்திரசிகிச்சைக்காக நேற்று முன்தினம் நோயாளர்களை யாழ். ஆஸ்பத்திரியில் வைத்துத் தேர்ந்தெடுத்தனர்.

தென்னிலங்கை அண்ணப் பிளவு, உதட்டுப் பிளவு சங்கத்தின் தலைவரும் வைத்திய கலாநிதி யுமான டி.கே.டயஸ் அதன் செயலாளர் சாந்தினி எக்கநாயக்க, பேராதனைப் பல்கலைக்கழகத் தின் பல் வைத்திய சிறுவர் பிரிவின் தலைவர் வி.விஜயகுமார், றோட்டறிக் கழக நிர்வாகத்தினர் மற்றும் யாழ். ஆஸ்பத்திரியின் பற்சிகிச்சைப் பிரிவு வைத்தியக் குழுவினர் ஆகியோர் நோயாளர் களை தேர்ந்தெடுத்த பின்னர் எடுத்துக்கொண்ட படம் இது. *(படம் : பிரபா)*

# பல்திறன் விருத்தி தொழில் மையம் மருதங்கேணியில் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,மே9

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணிப் பகுதி யில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக் களின் நன்மைகருதி, உலகக் கனேடியப் பல் கலைக்கழகச் சேவை நிறுவனத்தின் நிதியுதவி யுடன் பல்திறன் விருத்தி தொழிற்பயிற்சிக்கூட மையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாக அனுசரணையின் கீழ் நிர்வகிக்கப்பட்டுவரும் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபி விருத்தி நிறுவனத்தால் இந்த மையம் திறந்து வைக்கப்பட்டது.

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபி விருத்தி நிறுவனப் பணிப்பாளர் செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உலக கனேடியப் பல்கலைக்கழக நிறுவன நிறைவேற் றுப் பணிப்பாளர் போல் டேவிட்சன், தொழிற் பயிற்சி மையத்தின் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்துவைக்க பயிற்சிக்கூட மண் பத்தினை திட்டமிடல் செயலகத்தைச் சேர்ந்த லாலா ரஞ்சன் வைபவரீதியாகத் திறந்துவைத் தார்.

நிகழ்வில் உலகக் கனேடிய பல்கலைக் கழக நிறுவன வடமாகாணப் பணிப்பாளர் ஜெய ராசசிங்கம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபி விருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டப் பணிப்பா ளர் சி.வின்சன், உலகக் கனேடியப் பல்கலைக் கழக நிறுவன வன்னி இணைப்பாளர் சத்திய சீலன், வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன் ஆகியோர் சிறப்புரை யாற்றினர்.

(3-203)

# மியன்மாரில் தொடர் குண்டு வெடிப்புகள்

## 60 இற்கும் மேற்பட்டோர் பலி!

ரங்கூன்,மே9

மியன்மாரில் இடம்பெற்ற நான்கு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்றும் இருநூறிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மியன்மார் தலைநகர் யங்கோனில் ஒரேசமயத்தில் இந்தக் குண்டு வெடிப்புகள் இடம்பெற்றதெனத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகரில் உள்ள டாகோன் வர்த்தகக் கட்டடத்தில் வைத்த குண்டு வெடித்து கட்டடம் இடிந்து வீழ்ந்த அந்த இடிபாடுகளுக்குள் சிக்கி 200 பேர் படுகாயமடைந்தனர்; 20 பேர் உயிரிழந்தனர் என்றும் -

இதேபோன்று தலைநகரில் இருந்து சுமார் 13 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மற்றுமொரு வர்த்தகக் கட்டடமொன்றில் வைக்கப்பட்ட குண்டு ஒன்று வெடித்துச் சிதறியதில் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்த 40 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இன்றும் மீட்புப்பணிகள் நடந்த வண்ணமுள்ளன. அதனால், எத்தனைபேர் உயிரிழந்தனர் என உறுதியாக தெரியவில்லையென இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அடுத்தடுத்து நடத்தப்பட்ட இந்தக் குண்டுத் தாக்குதல்களினால் யங்கோன் நகரே பெரும பீதியில் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

காயமடைந்த பொது மக்கள் யங்கோன் நகர பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)


குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடம்.

# ஈராக் அதிகாரி சுட்டுக் கொலை!

பக்தாத்,மே9

ஈராக் புதிய அமைச்சரவையின் போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி சோபாயாஸ் நேற்று துப்பாக்கிதாரியொருவ... டுக்கொல்லப்பட்டார் என ஈராக் ... தெரிவித்தனர்.

போக்குவரத்து அமைச்சின் செயற்றிட்டங்களின் செயலாளர் நாயகமான சோபாயாஸ் தலைநகர் பக்தாத்தின் தென்பகுதியில் காரில் சென்றுகொண்டிருக்கும்போதே சுட்டுக்கொல்லப்பட்டார். இத்தாக்குதலில் அவரது கார்ச் சாரதியும் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் நிலைமை மிக மோசமாகிக் கொண்டிருக்கிறது எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

உலக அரங்கில்

## எகிப்து முஸ்லிம் அமைப்பு உறுப்பினர்கள் கைது!

லண்டன்,மே9

எகிப்து அரசுக்கு எதிரான முஸ்லிம் அமைப்பான எஸ்ஸாம் அல்-ஏரியன் அமைப்பைச் சேர்ந்த மூன்று முக்கிய உறுப்பினர்களை எகிப்துப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

அரசுக்கு எதிராக நாடுமுழுவதும் எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தி 48 மணிநேரத்திற்குள் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். எஸ்ஸாம் அல் - ஏரியன் அமைப்பின் மிகமுக்கிய உறுப்பினர்களையே எகிப்துப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர் எனத தெரிவிக்கப்படுகின்றது. (எ-க)

# பிரிட்டன் புதிய அமைச்சரவையின் உறுப்பினர்கள் விவரம் அறிவிப்பு

பிரிட்டனில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளைப்பெற்று வெற்றிபெற்ற தொழிற்கட்சியின் புதிய அமைச்சரவை உறுப்பினர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

பிரிட்டன் மக்கள் சபையில் 645 தொகுதிகளில் 355 இடங்களைக் கைப்பற்றி தொழிற்கட்சி வெற்றிபெற்றதைத் தொடர்ந்து தொழிற்கட்சித் தலைவர் ரோனி பிளேயர் மூன்றாவது முறையாகவும் பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் ரோனி பிளேயர் தனது புதிய அமைச்சரவையை அறிவித்துள்ளார்.

பிரிட்டன் புதிய அமைச்சரவையில் பாதுகாப்பு, சுகாதாரம் ஆகிய அமைச்சர்களைத் தவிர ஏனைய அமைச்சர்களுக்கு அதே அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதமருக்கு அடுத்த வாரிசாகக் கருதப்படும் நிதியமைச்சர் கோல்டன் பிரௌன் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜெக் ஸ்டரா ஆகியோருக்கு மீண்டும் அதே பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் -

பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த போட்ரிகா ஹெயிட் சுகாதாரத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் -

டேவிட் மிலிபெண்ட், டெஸ் பிரௌன், ஜோன ஹசட்டர் ஆகிய மூன்று புதியவர்களும் தற்போதைய அமைச்சரவையில் பதவிவாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரிட்டனின் பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி 199 இடங்களையும் லிபரல் ஜனநாயகக் கட்சி 62 இடங்களையும் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரதமர் ரோனி பிளேயர் அடுத்த வாரம் ரஷ்யா செல்லவுள்ளார் என்றும் -

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நடக்கும் இரண்டாம் உலகப் போரின் 60 ஆவது ஆணடு வெற்றிவிழாவில் இவர் கலந்துகொள்ளவுள்ளார் எனறும் - பிரிட்டன் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பெனாரஸில் சுதந்திரமான தேர்தல் நடைபெறவேண்டும்

## அமெரிக்க ஜனாதிபதி கோரிக்கை

லண்டன்,மே9

பெனாரஸில் சுதந்திரமான தேர்தல் நடைபெறவேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ டபிள்யூ புஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

லத்திரியா தலைநகரில், லத்தியொ, லித்துவேனியா, எஸ்கோனியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டு செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே புஷ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

ஐரோப்பாவில் சர்வாதிகார ஆட்சியைக் கொணடுள்ள கடைசி நாடு பெனாரஸ் ஆகும்.

அடுத்த ஆண்டு பெனாரஸில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமாக நடைபெறவேண்டும் என அமெரிக்கா விரும்புகிறது.

அந்தத் தேர்தல் திறந்த மற்றும் சுதந்திரமான முறையில் வாக்களிப்பதற்கான உரிமையை மக்களுக்கு வழங்கவேண்டும் என்று அவர் கூறினார்.

ஆனால், அமெரிக்காவும் அதன் அயல்நாடுகளும் போய்ஜிக் நாடுகளும் உள்விவகாரத்தில் தலையிடுவது குறித்து ரஷ்யா ஆதரவைப் பெற பெனாரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

தொடர்ந்து பதவியிலிருப்பதற்காக மொஸ்கோவுடன் எந்தவித ரகசிய உறவும் வைத்திருக்கவில்லையென பெனாரஸ் ஜனாதிபதி அலெக்ஸாண்டர் காசிம்கோ தெரிவித்தார். (எ-க)

# ஆஸ்திரேலிய விமான விபத்தில் 18 பயணிகள் பரிதாப மரணம்!

லண்டன்,மே9

தென் ஆஸ்திரேலியாவில் பயணிகளை ஏற்றிச்சென்ற விமானமொன்று விபத்துக்குள்ளானதில் 15 பயணிகள் பரிதாபமாக உயிரிழந்தனர் என ஆஸ்திரேலிய விமானநிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

பயர்சயில் மெட்ரோலினர் எனப்படும் இந்த விமானம் தென் குவின்லாந்தில் இருந்து பமாகா எனும் இடத்துக்குச் செல்லும் வழியில் நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தில் 13 பயணிகளும் இரு விமானிகளும் உள்ளூர் பெண் பொலீஸ் அதிகாரியொருவரும் பயணித்தனர் என்றும் -

அவர்கள் அனைவரும் விபத்தில் உயிரிழந்தனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

1967 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற விமான விபத்தின் பின்னர் ஏற்பட்ட மோசமான விமான விபத்து இதுவென அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-க)

# பெருவில் பயணிகள் பஸ் விபத்து: 40 பேர் உயிரிழப்பு; 18 பேர் காயம்!

லிமா,மே 9

பெருவின் பின்தங்கிய பிரதேசமான தென் அன்தெஸ்ஸில் மலைப்பாதையில் பயணிகள் பஸ் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் 40 பொதுமக்கள் உயிரிழந்தனர். 18 போ படுகாயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றதெனப் பொலீஸார் தெரிவித்தனர்.

விபத்துக்கான காரணம் குறித்து பெரு பொலஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர் என்றும் - காயமடைந்தவர்கள் பம்பா பொது மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-க)


ஈராக், பக்தாத் நகரில் பாடசாலை ஒன்றின் அருகே நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் காயமடைந்த மாணவி ஒருவரை மீட்புப் பணியாளர்கள் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

# மாவீரன் நெப்போலியன் மரணத்திற்கு குடல் புற்றுநோயே காரணம்

## சுவிற்ஸர்லாந்து மருத்துவர் தெரிவிப்பு

பெர்லின்,மே9

பிரான்ஸை ஆண்ட மாவீரன் நெப்போலியன் மரணமடைய குடல் புற்றுநோயே காரணம் என சுவிற்ஸர்லாந்து மருத்துவர்கள் தெரிவிததுள்ளனர்.

மாவீரன் நெப்போலியனின் மரணத்தில் பல்வேறு மர்மங்கள் நிலவிவந்தன. அவர் விஷமருந்தி தற்கொலை செய்துகொண்டார் என ஒருசாரர் தெரிவித்தனர். இந்நிலையில் சுவிற்ஸர்லாந்து மருத்துவக்குழுவொன்று மாவீரன் நெப்போலியனின் மரணம் குறித்து ஆராய்ச்சியொன்றை மேற்கொண்டதையடுத்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் 1815ஆம் ஆண்டு நடந்த வாட்டர்லு போரில் தோல்வியடைந்த நெப்போலியன் செண்ட் ஹெலினா தீவில் சிறைவைக்கப்பட்டார்.

சிறைவைக்கப்பட்டு ஆறு ஆண்டுகளின் பின்னர் அவர் மரணித்தார். சிறையிலிருந்த காலங்களில் அவர் பயன்படுத்திய 12 கோடி உடைகளை சுவிற்ஸர்லாந்து மருத்துவர்கள் ஆராய்ந்தனர் என்றும் -

கடைசிக் காலங்களில் அவருடைய இடுப்பின் சுற்றளவும், எடையும் குறைந்திருந்தது. இடுப்பின் அளவு 5 அங்குலம் திடீரென குறைந்ததன் மூலம் அவருக்கு குடல் புற்றுநோய் இருந்தது தெரியவந்துள்ளது என்றும் -

நெப்போலியன் சிறையிலிருந்த காலங்களில் நெப்போலியனைப் பரிசோதித்த மருத்துவர்களும் அவரது வயிற்றில் கட்டி இருப்பதைத் தெரிவித்துள்ளனர். அத்துடன், அக்காலத்தில் அவருக்கு இரத்தப் போக்கு இருந்தது என்றும் அவர் கூறினார் என ஆராய்ச்சி நடத்திய மருததுவக்குழு தெரிவித்துள்ளது. (எ-க)

# 2ஆம் உலகப்போரில் பெரும்பங்காற்றிய சோவியத் படையினருக்கு புடின் பாராட்டு

மொஸ்கோ,மே9

இரண்டாம் உலகப் போரின்போது பேரண்டஸ் கடல் முதல் காகசஸ் பகுதிவரையிலான பதினொரு ஐரோப்பிய நாடுகளின் நிலப்பரப்பை நாசிப்பிடியில் இருந்து விடுவிக்க பெரும்பங்காற்றிய சோவியத் படைகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பாராட்டுத் தெரிவித்தார்.

மொஸ்கோவில் உள்ள சோவியத் படையினர் நினைவிடம் ஒன்றில் உரையாற்றியபோதே புடின் மேற்கண்டவாறு பாராட்டுத் தெரிவிததார்.

மேலும், பாசிசத்திற்கு எதிரான அந்த யுத்தத்தில் உலக சரித்திரத்தில் இதுவரைக் கணடிராத அளவுக்கு மக்கள் பெருமளவு தியாகம் செய்துள்ளனர்.

நாசிப்படைகள் கிழக்குப் பக்க யுத்தத்தின் போதுதான் பேரடி வாங்கியது. அங்குதான் அவர்களின் படைப்பலம் முறியடிக்கப்படத் தொடங்கியது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது கிழக்கு ஐரோப்பாவில்தான்.

இந்த யுத்தத்தின்போது சுமார் 90 லட்சம் சோவியத் படையினர் உயிர் நீததுள்ளனர் என்று அவர் கூறினார். (எ-க)

07.05.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300246709 இலிருந்து 300263083 வரை

சீட்டிழுப்பு இல. 1604

07 09 57 67

சுப்பர் எண் 15

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.28,29,450/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 28,29,450/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 21 | 5,000/- | 1,05,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 429 | 1,000/- | 4,29,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,400 | 500/- | 7,00,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 21,260 | 40/- | 8,50,400/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,072 | 20/- | 4,01,440/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,02,199 | 10/- | 30,21,990/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 80,07,830/-

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 36,36,600/-

தொடர் இல. 200283227 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2005 மே 11 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

300258051-9-37
300260363-6-48
300249420-4-61
300255313-6-08
300258632-8-84

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,செயின்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

**தூரிகை**

நுண்கலை, மனையியல் பயிலகம்

*புதிய பிரிவுகளுக்கான அனுமதி*

உடையமைத்தல், சாறி / சல்வார் வேலைப் பாடுகள் Hairstyle, கேக் ஐசிங், துணி வர்ணமிடல், மணப்பெண் ஒப்பனை, பூ வேலைப் பயிற்சி.

★ மேற்படி பயிற்சிகளில் 3 அல்லது மேற் பட்டவற்றில் கலந்துகொள்வோருக்கு முக ஒப்பனை அல்லது கைப்பணி பயிற்சி கட்டணமின்றி பயிற்றுவிக்கப்படும்.

★ வெளிநாடு செல்வோரும் ஏனையோரும் கலந்து பயன்பெறலாம்.

★ பயிற்சி முடிவில் தகுதிச் சான்றிதழ் வழங் கப்படும்.

கூடுதல் விவரங்களை எமது அலுவலகங்களில் பெற்று உடன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

தேவை: **பணியாளர்**

எமது கல்வியங்காடு கிளை நிறுவனத்திற்கு அலுவலகப் பணியாளர் தேவை. இன்று (09-05-2005) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

(சி42737) (24-18-17)

செங்குந்த வீதி, கல்வியங்காடு.

ம.ம.வி. வீதி, நெல்லியடி.

## 31ஆம் நாள் நினைவலைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 1949 - 03 - 21



மறைவு 2005 - 04 - 09

### அமரர் நாகலிங்கம் பாலகுமார்

கடந்த 09-04-2005 அன்று சிவபதமடைந்த எம் குடும்பத் தலைவர் அமரர் நாகலிங்கம் பாலகுமார் அவர்களின் மரணச்செய்திகேட்டு ஆறுதல்கூறி உதவிகள் புரிந்த அனைவருக்கும் நன்றிகள் தெரிவிப்பதுடன், அன்னாரின் இல்லத்தில் இன்று (09-05-2005) திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கலைவாணி மில் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்* (45128)(46-18-17-24)

தகவல்:
**மனைவி, மகன்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெயசுதா அம்பிகைபாகன்



தாவடி தெற்கு, கொக்குவிலைச் சேர்ந்த திருமதி ஜெயசுதா அம்பிகைபாகன் அவர்கள் 06.05.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயராசா - பரமேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் அம்பிகைபாகன் (ஆசிரியர் தியாகராசா ம.வி.காரைநகர்) அவர்களின் அன்பு மனைவியும் மயிலோடை, அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற நாகராசா, திருமதி பரமேஸ்வரி நாகராசா ஆகியோரின் அன்பு மருமகளும் ஜெகதீஸ்வரன் (டென்மார்க்), ஜெயக்குமார் (சுவிஸ்), ஜெயசீலன் (கனடா), ஜெயரஜனி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவராணி (டென்மார்க்), தட்சாயினி, அனுஷா (கனடா), மதியாபரணம் (பிரான்ஸ்), சிவபாதசுந்தரம் (பிரான்ஸ்), அம்பிகாவதி, சிங்கராஜா, மதியழகன், மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் நிதுஷா, நிபிவிதா, நிகாஷ் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-05-2005) திங்கட் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சுதாபவனம்'*
*தாவடி தெற்கு,*
*தாவடி.* (45148)(24-18-17)

தகவல்:
பெற்றோர் (ஜெயராசா பரமேஸ்வரி),
கணவன், சகோதரர்கள்.

### கனகரத்தினம் இந்திரகுமார்

(மயூரேசன் கடை உரிமையாளர் - நவீன சந்தை, யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த கனகரத்தினம் இந்திரகுமார் நேற்று (08-05-2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் பத்மினியின் (கல்விக் கோட்டம், கோப்பாய்) அன்புக் கணவரும் மயூரேசனின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் கனகம்மாவின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08-05-2005 ஞாயிற்றுக்கிழமை (நேற்றையதினம்) அவரின் இல்லத்தில் நடைபெற்று, நீர்வேலி தெற்கு இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி.*
(45142) (24-18-17)

தகவல்:
இ.பத்மினி
(தங்கா - மனைவி).

### திருமதி ஆறுமுகம் கண்மணி

காரைநகர், கோவளத்தைச் சேர்ந்த திருமதி ஆறுமுகம் கண்மணி (கண்மணி மாமி) நேற்று (08-05-2005) ஞாயிற்றுக்கிழமை கிளிநொசசியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் பராக்கிரமதேவி, சிறிஸ்கந்தராசா, இராசம்மா, காலஞ்சென்ற தங்கமுத்து மற்றும் ஞானசவுந்தரி ஆகியோரின் அன்புத் தாயாரும் கந்தையா, கனகலச்சுமி, கந்தசாமி, சண்முகராசா, விஸ்வலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-05-2005) திங்கட் கிழமை கிளிநொச்சியில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காரைநகர்.*
(45146) (24-18-17)

தகவல்:
செ.சண்முகராசா
(மருமகன்).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 26 01 1938



மறைவு 09 04 2005

### அமரர் செல்லையா திருநாவுக்கரசு

கடந்த 09.04.2005 சனிக்கிழமை அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் செல்லையா திருநாவுக்கரசு அவர்களின் சபிண்டீகரண வீட்டுக்கிரியைகள் இன்று (09.05.2005) திங்கட் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் மேற்படி கிரியையிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின் றோம்.

இல. 05, முதலியார் ஒழுங்கை,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம். T.P.: 222 2467

குடும்பத்தினர்.

(45139) (54-45-18)

### ஜி.சீ.ஈ. வகுப்பு ஆரம்பிக்க அனுமதி

வலி.தென்மேற்கு,மே9

பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தில் இவ்வருடம் முதன்முறையாக ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இந்த வித்தியாலயம் அண்மையில் தரம் இரண்டிற்கு தரம் உயர்த்தப்பட்டதையடுத்து இங்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் வகுப்பு ஆரம்பிக்கப் பட்டிருப்பதாக வித்தியாலய அதிபர் வே. சிவசுந்தரம் தெரிவித்தார். (எ-135)

### சுவர் விழுந்து கைதிகள் காயம்

கொழும்பு,மே9

வெலிக்கடைச் சிறைச்சாலைச் சுவர் ஒன்று சரிந்து வீழ்ந்ததால் விளக்க மறியலில் உள்ள கைதிகள் மூவர் காயமுற்றனர்.

கடந்த வாரம் பெய்த கடும் மழையையடுத்து இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. காயமடைந்த கைதிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

விழுந்துபோன சிறைச்சாலைச் சுவர் மீளக்கட்டப்பட்டு வருகின்றது. (ப)

நூற்றாண்டு நிறைவு 1904

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

நூற்றாண்டு நிறைவைக் குறிக்கும் மாபெரும் கல்விக்கண்காட்சி

பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களுடன் இக்கண்காட்சியை அணிசெய் நிறுவனங்களாக

★ யாழ்ப்பாண மின்னகத்தின் LG-அபான்ஸ் காட்சிக் கூடம்
★ அன்னை நாகாபூட் சிற்றியின் நீல்கமால் - பிளாஸ்ரிக் தளபாடக் காட்சிக் கூடம்
★ குறிஞ்சி ஸ்தாபனத்தின் பஜாஜ் - மோட்டார் சைக்கிள் காட்சிக் கூடம்
★ IIS-கணனி நிறுவனத்தின் காட்சிக் கூடம் ★ யாழ். CD-City- இன் காட்சிக்கூடம்

இன்னும் பல காட்சிக் கூடங்கள். இங்கு - சிறப்புத் தள்ளுபடி விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம்.
சிறுவர்களுக்குப் பெருவிருந்தாக ★மெரிக்கோரவுண்ட் ★பாதாள கிணற்றில் மோட்டார் சைக்கிள் சவாரி

காலம்: 2005 - மே 12 ஆம், 13 ஆம், 14 ஆம் நாள்
இடம்: பாடசாலை வளாகம்

(C-42720)(50-14)

விளம்பர அனுசரணை:
சக்தி இரும்பகம்
சங்கத்தானை. சாவகச்சேரி.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# நியாயமான சந்தேகம்

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளைக் கவனிப்பதற்கு விடுதலைப் புலிகளோடு சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதில் தனது அரசு உறுதியாக இருப்பதாக அரசுத் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடிக்கடி 'வாய்ப்பந்தல்' போட்டு வந்தாலும் - ஏன், அப்படித் தாம் கூறுகின்ற விடயத்தில் அவர் உளமாரப் பற்றுறுதியாக இருந்தாலும் - கூட, பொதுக்கட்டமைப்பு உருவாவது இன்னும் சந்தேகத்துக்குரியதாகவே இருந்துவருகிறது.

தனது அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் பொதுக்கட்டமைப்பு முயற்சியில் அரசுத் தலைவி உறுதியாக இருந்தாலும் அந்த முயற்சி சாத்தியமாவது சந்தேகத்துக்குரியதாகவே மாறியிருக்கின்றது.

இதற்கு முக்கிய காரணம், 'திறந்த காசோலைக்குக் கையெழுத்திட்டுக் கொடுத்ததுபோல' பொதுக் கட்டமைப்பு முயற்சி தொடர்பான விடயத்தில் அரசு இழுத்த இழுப்புக்கெல்லாம் விட்டுக் கொடுத்து, இயன்றளவுக்குக் கீழிறங்கி வந்த விடுதலைப் புலிகளுக்கு, இப்போது இவ்விடயத்தில் அரசுத் தலைவியின் போக்குக்குறித்துப் பலத்த சந்தேகம் ஏற்பட்டிருப்பதேயாகும்.

'ரொய்ட்டர்' நிறுவனத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வழங்கிய செவ்வி இவ்விடயத்தில் புலிகளின் சந்தேகத்தைத் துலாம்பரமாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் முக்கிய கூட்டம் ஒன்று அடுத்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் (16ஆம், 17ஆம் திகதிகளில்) கண்டியில் நடைபெறவிருக்கிறது.

அதற்கு முன்னர் புலிகளோடு பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விடயத்தில் இணக்கப்பாடு ஒன்றுக்கு வந்துவிட ஜனாதிபதி துடியாய்த்துடிக்கின்றார். அதன் நோக்கம், ஆழிப்பேரலையால் பாதிப்புற்றோருக்கு உரிய நிவாரண மற்றும் மீள் கட்டுமாண வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதல்ல. கண்டிக் கூட்டத்துக்கு முன்னர் புலிகளுடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தால்தான் அந்தக் கூட்டத்தின் மூலம் சர்வதேச சமூகத்திடம் - உதவும் நாடுகளிடம் - அதிக உச்ச நிதி உதவிக்கான உறுதி மொழியைப் பெறமுடியும் என ஜனாதிபதி நம்புகின்றமைதான். பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் விடயத்தில் இதுவரை ஏனோதானோ போக்குடன் செயற்பட்ட ஜனாதிபதி, 'சுடுகின்றது மடியைப் பிடி' என்ற பாங்கில் இப்போது அந்தரப்படுவது - அவசரப்படுவது - அத்தகைய சந்தேகத்தைத்தான் புலிகளுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது.


"மனிதாபிமான உதவி விடயத்தில் தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் அரசின் செயற்பாட்டில் முற்றுமுழுதாக நம்பிக்கை இழந்துவிட்டனர். உதவி வழங்கும் நாடுகளால் உறுதியளிக்கப் பட்ட நிதியைப் பெறுவதற்காகவே ஜனாதிபதி புதிது புதிதாகக் கதைகளைக் கூறிவருகின்றார். பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டாலும் அது சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டு, உதவிகள் மக்களுக்குச் சென்றடைவதற்கு ஜனாதிபதி உளப்பூர்வமாகச் செயற்படுவாரா என்ற சந்தேகம் தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. தற்போது நடக்கும் சம்பவங்களைப் பார்த்தால், சர்வதேசத்தின் பார்வையைத் தனது பக்கம் திருப்பி அதன் மூலம் கிடைக்கும் நிதியை எடுப்பதற்கான செயற்பாடுகளிலேயே அரசு ஈடுபடுவதாகக் கருதவேண்டியுள்ளது.

"ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்களைப் புனரமைப்புச் செய்வதற்காக உறுதியளிக்கப்பட்ட நிதியைப் பகிர்ந்து கொள்வதிலும் இழுபறி நிலையிலேயே அரசு உள்ளது" - என்று தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருப்பது கவனிக்கத்தக்கது.

பொதுக்கட்டமைப்பு உருவானாலும் அது பயன் தரத்தக்க வகையில் செயற்படுமா எனச் சந்தேகம் எழுப்புவதோடு அவர் நின்றுவிடவில்லை.

"தமிழ் புத்திஜீவிகளும் ஊடகவியலாளர்களும் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். இது யுத்த நிறுத்த உடன்படிக்கையையும், சமாதான முயற்சிகளையும் பெரிதும் ஆட்டம் காணும் நிலைக்குக் கொண்டுவந்துள்ளது. இப்போதுள்ள நிலையில் தமிழ் மக்களை மீண்டும் ஆயுதம் ஏந்தச் சொல்லி கொழும்பு கேட்கின்றதா என்ற பெரிய கேள்வி எழுந்துள்ளது. இதில் முடிவு எடுக்கவேண்டிய பொறுப்பு கொழும்பிடம்தான் உள்ளது" - என்று தமிழ்ச்செல்வன் எச்சரிக்கும் விபரீத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இத்தகைய சூழலில் பொதுக்கட்டமைப்பு இணக்கமும், அந்தப் பொதுக்கட்டமைப்பு இயல்பாகச் செயற்படுவதும் பெரிதும் சந்தேகத்துக்குரியனவாகியிருக்கின்றன.





சில நாள்களுக்கு முன் யாழ் நகரை மற்றொரு புறக்கோட்டை என்று வர்ணித்தார்கள். இப்போது யாழ்ப்பாணம் முழுவதுமே திறந்த சந்தையாகிவிட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. இங்கு விற்கவோ, வாங்கவோ முடியாத பொருள்கள் எதுவுமே இல்லை. கொழும்பில் இருந்தும் தென்னிலங்கையின் இதர பகுதிகளில் இருந்தும்தான் வியாபாரிகள் யாழ்ப்பாணத்தை நம்பிவருகிறார்கள் என்பதல்ல. இப்போது வெளிநாடுகளில் இருந்தும் கூட நடைபாதை வியாபாரிகளை இந்தக் குட்டி நகரம் ஈர்க்கத் தொடங்கிவிட்டது. இங்கே நீங்கள் படத்தில் காண்பவர்கள் ஹொங்கொங்கைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கைக்கடிகாரங்களை விற்பதற்காக இங்கு வந்திருக்கிறார்கள்.

'பளபளக்கும்' கைக்கடிகாரங்களை கொண்டு நகரிலும் நகருக்கு வெளியிலும் இவர்கள் தெருக்களில் சுற்றுவதைக் காணமுடிகின்றது. கைக்கடிகாரங்களை விற்பதில் சாதுரியம் படைத்த இவர்களைச் சுற்றி மக்கள் கூட்டம். இவர்கள் மட்டுமன்றி ஜப்பானியர்கள், தாய்வான் நாட்டவர்களும் வியாபார நோக்கத்துக்காக இப்போது யாழ்ப்பாணத்துக்கு வரத்தொடங்கிவிட்டனர். (படங்கள்: பிரபா)

# சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் பெற்றோர் மீது சட்ட நடவடிக்கை

## யாழ். மேலதிக நீதிவான் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 9

சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் பெற்றோர் மீதும் பாதுகாவலர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு எச்சரித்துள்ளார் யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்.

நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் நடைபெற்ற சிறுவர் இல்லப் பொறுப்பாளர்களுடனான சந்திப்பு ஒன்றிலேயே நீதிவான் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் நீதிவான் மேலும் தெரிவித்ததாவது:-

பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிப் பெற்றோர் அக்கறை கொள்ளாது அவர்களை வேலைக்கு அமர்த்துகின்றனர். இத்தகைய பெற்றோர்கள், பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளிலோ அல்லது வேறு ஒழுக்கச் செயற்பாடுகளிலோ எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுப்பதில்லை. இதனால், பாதிக்கப்படுவது எங்களது எதிர்காலச் சமுதாயமே.

சிறுவர்களை 18 வயது வரையாவது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும். அதன் பின்னர் அவர்களுக்குச் சுயதொழில் ஊக்குவிப்பை வழங்கலாம்.

எந்தப் பெற்றோரும் இது எனது பிள்ளைதானே நான் என்னவென்றாலும் செய்யலாம் என்று நினைக்கக்கூடாது. இதனால், பெற்றோர் பிள்ளைகள் மீது வைத்துள்ள உரிமைகள் கூட சட்டத்தின் மூலம் பறிக்கப்படும்.

வேலைக்கு அமர்த்தப்படும் பிள்ளைகள் இனங்காணப்படுமிடத்து அவர்கள் நீதிமன்றத்தின் ஊடக சிறுவர் இல்லங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவர். நீதிமன்று அவர்களுக்கு ஒரு மெய்ப்பாதுகாவலராக இருக்கும்.

வீதிகளில் நின்று சிறுசிறு வியாபாரங்கள் செய்யும் பிள்ளைகளையும் சிறுவர் இல்லங்களில் ஒப்படைக்கவேண்டும். இதற்கான அறிக்கைகளை நன்னடத்தை அதிகாரிகள் தயாரிப்பார்கள். அதன்படி செயற்படவேண்டும்.

தாய், தந்தையரின் பொறுப்பற்ற தன்மை, அக்கறையீனம் என்பனவே பிள்ளைகளின் எதிர்காலத்தைச் சீரழிக்கின்றன. இவ்வாறான பெற்றோர்கள் பின்னர் பிள்ளைகள் மீது பழிசுமத்தி விடுகின்றனர்.

சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதை எந்தப் பொதுமகனாவது அறிந்தால் அவர்கள் தொடர்பான விவரங்களை அந்தந்தப் பிரிவு நன்னடத்தை அதிகாரிகளுடனோ அல்லது இலக்கம் 30, யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கிவரும் மாவட்டச் சிறுவர் பாதுகாப்பு குழுவிடமோ தெரிவிக்கலாம் - என்றார்.

தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் சிறுவர் இல்லங்களை நன்னடத்தை உத்தியோகத்தர்கள் அடிக்கடி சென்று பார்வையிடுவார்கள். இவ்வாறான நடவடிக்கை நடைமுறைக்கு வரும்போது சிறுவர் இல்லங்களில் துஷ்பிரயோகங்கள் ஏற்பட வாய்ப்பிராது என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்கள் தவறுகள் செய்யும் பட்சத்தில் அவர்களை இல்லங்களில் இருந்து வெளியேற்றுவதை விடுத்து அதற்கான மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் - என்றும் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

(எ-203)

# ஆசிரியர் சேவை தரம் I பதவி உயர்வுக்கு 10 வருடத்துக்குப் பின்னர் போட்டிப் பரீட்சை

அச்சுவேலி,மே9

"இலங்கை ஆசிரியர் சேவைத் தரம் வகுப்பு I இற்கு பதவி உயர்வு வழங்குவதற்கு போட்டிப் பரீட்சை மூலம் ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்களை கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின்படி, ஆசிரியர் சேவைத் தரம் 2ஆம் வகுப்பின் Iஆம் தரத்தில் ஐந்து வருடசேவையை பூர்த்திசெய்த - அரசாங்க பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் பொது அறிவு (100 புள்ளிகள் - 1½மணிநேரம்), இலங்கையின் கல்விக்கட்டமைப்பும் சமத்துவமான கல்வியும் (100 புள்ளிகள் -3 மணிநேரம்) நவீன கல்விப் பிரயோகங்கள் (100 புள்ளிகள்-3 மணிநேரம்) பிரயோக கல்வியும் உளவியலும் ஆலோசனைகளும் (100 புள்ளிகள் - 3 மணிநேரம்) ஆகிய நான்கு பாடங்களுக்கும் தோற்ற வேண்டும்.

இந்தப் பரீட்சையில் 200 புள்ளிகளுக்கு குறையாத புள்ளிகளைப் பெறுபவர் உயர் புள்ளி அடிப்படையில் வகுப்பு I இற்கு பதவி உயர்த்தப்படுவர்.

பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெறும் ஆசிரியர்கள் 250 ரூபாவை பரீட்சைக் கட்டணமாக அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டை பரீட்சை விண்ணப்பத்தில் அதற்குரிய கூட்டில் இணைக்கவேண்டும் என்றும் - விண்ணப்பங்களை, அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் சிபார்சுடன் இம்மாதம் 31ஆம் திகதிக்குமுன்னர் பதிவுத்தபால் மூலம் பத்திரமுல்லவில் உள்ள இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்று - அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் சேவை தரம் I இற்கு 1995 ஆம் ஆண்டு விண்ணப்பம் கோரப்பட்டு நடத்தப்பட்ட பரீட்சைக்குப் பின்னர், தற்போது விண்ணப்பம் கோரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## நாளை

சித்திரை 27
செவ்வாய்க்கிழமை
10.05.2005
திதி : துதியை
பிற்பகல் 03.31வரை
நட்சத்திரம் : ரோகிணி
முன்னிரவு 10.05 வரை
சுபநேரம் : 10.24 - 11.54
ராகுகாலம்: 2.54 - 04.24
(யாவும் பழைய நேரப்படி)

# திருநெல்வேலி பத்திரகாளி மீது பாடிய இசைத்தட்டு இன்று வெளியீடு

திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் மீது பாடப்பட்ட ''சிற்பிகள் நாயகி பாமாலை' பாகம் - I என்ற இசைத்தட்டு வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது. திருநெல்வேலியைச் சேர்ந்தவரும் 21 வருடங்களுக்கு மேலாக லண்டனில் வசித்துவருபவருமான பொறியியலாளர் சண்முகம் சண்முகபாலன் இந்த இசைத் தட்டிற்கான பாடல்களை இயற்றியதுடன் அவற்றைத் தானே பாடியும் உள்ளார்.

ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பகுதிகளுக்கான கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் ஆலயப் பிரதமகுரு பிரதிஷ்டா வித்துவஜோதி சிவஸ்ரீ க.மகாகணபதீஷ்வரக் குருக்கள் மங்கள விளக்கேற்றி ஆசியுரை வழங்குவார்.

தொடர்ந்து அகில இலங்கை விஸ்பப் பிரம்ம குல சங்கத்தின் பொருளாளர் இ. அச்சுதபாகனின் சிறப்புரை இடம்பெறும். பின்னர் இசைத்தட்டு வெளியிட்டு வைக்கப்படும். பொறியியலாளர் சண்முகம் சண்முகபாலன் இசைத்தட்டினை வெளியிட்டு, வெளியீட்டுரை நிகழ்த்துவார். இசைத்தட்டின் முதற்பிரதியை ஆலய பரிபாலன சபைத் தலைவர் வல்லிபுரம் செல்லத்துரை பெற்றுக்கொள்வார்.

இசைத்தட்டின் மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா வழங்குவார். நன்றியுரையை யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் த.அருண்குமார் நிகழ்த்துவார். (ம)

## உதயவாக்கு

பொருளுக்க மனிதன் அடிமை
பொருள் யாருக்கும் அடிமையில்லை.
- ஒரு வடமொழிக் கவிஞர்.

## அழகுக் கலை பயிற்சி வகுப்புகள்

குயின்ஸ் அழகுக்கலை நிலையத்தினால் நடத்தப்படும் முதல் பிரிவு வகுப்புகள் எதிர்வரும் 13-05-2005 வெள்ளி காலை 9.30 - 4.30 தொடர்ந்து 18-05-2005 புதன் வரையும் அடுத்த பிரிவு பயிற்சி 20-05-2005 தொடக்கம் 25-05-2005 வரை நடைபெறும்.

**குயின்ஸ் அழகுக் கலை நிலையம்**

167, குருசோல்ட் வீதி, யாழ்ப்பாணம் (மரியன்னை பேராலயத்தின் பின் பக்கம்) என்னும் முகவரியில் நடைபெறும்.

10 வகையான Facials இரண்டு நாள்கள் முதலாம் பிரிவு 13ஆம், 14ஆம் திகதிகளிலும் 2ஆம் பிரிவு 20ஆம், 21ஆம் திகதிகளிலும் நடைபெறும். **கட்டணம் 2000/-**

Diploma in Hair styling and Bridal Dressing மணப்பெண் அலங்காரம். இந்து, கிறிஸ்தவ, சிங்கள நவீன முறையிலான 5 வகை சிகையலங்காரம் மூன்று நாள்கள் முதலாம் பிரிவு 15, 16, 17ஆம் திகதிகளிலும் 2ஆம் பிரிவு 22, 23, 24ஆம் திகதிகளிலும் நடைபெறும். **கட்டணம் 2500/-**

Eye Browthreading, waxing முடி உதிர்தல் தடுத்தலுக்கான ஒயில் மசாஜ், வீட்டில் சிறப் தயாரிக்கும் முறை ஒரு நாள் 18ஆம் திகதியும் 2ஆம் பிரிவு 25ஆம் திகதியும் நடைபெறும்

**கட்டணம் 500/-** (45137) (46-16-17-24)

பங்குபற்றுபவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும். செய்முறை விளக்கத்துடன் பாடக்குறிப்பு வழங்கப்படும். பயில விரும்புவோர் மேலதிக விவரங்களுக்கு: அழகுக்கலை ஆசிரியர் செல்வி ப.குயின்ரா T.P:.0776159468 ஏனைய அழகுக்கலைப் பயிற்சிகளும் நடைபெறும்.

# சேவைநலன் பாராட்டுவிழா

வலி.தென்மேற்கு,மே9

பண்ணாகம் வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த ஏழு வருட காலம் அதிபராகக் கடமையாற்றிய க.இரத்தினேஸ்வன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது சேவையைக் கௌரவிக்கும் வகையில் பாடசாலைச் சமூகம் ஏற்பாடு செய்துள்ள சேவைநலன் பாராட்டுவிழா இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.ஹரிஹரிசக்தி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் , சங்கானைக் கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குவர். (எ-135)

## 8ஆவது ஆண்டின் நினைவழியா நினைவுகளில்



**வீரவேங்கை சந்திரசேகர்**

(வேலாயுதம் - வேல்மணி)

தாயின் மடியில் 16.10.1972 — தாயக வேள்வியில் 09-05-1997

(சூரியக்கதிர்- I நடவடிக்கையின்போது விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்தியவர்)

தனியாது போராடும் தலைவன் பாதையில்
தமிழீழம் நோக்கிய தளராத நடையில்
வரலாறு ஆனாய் ஆண்டுகள் எட்டென்ன
என்றுமே அழியாது உன் நினைவுகள்

*காளிகோயிலடி, தாவடி வடக்கு,*
*கொக்குவில்.* (45099) (24-16)

- குடும்பத்தினர்.

## SAAMSTECH இன் கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணிகளுக்கான

# பயிற்சியும் பணிநியமனமும்

SAAMSTECH இன் கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பப பிரிவுகளில் அலுவலர்களுக்கான பயிற்சிநெறி

பயிற்சி ஆரம்பத்திலேயே நியமனக்கடிதம் வழங்கப்பட்டுப் பயிற்சி முடிவில் பணி நியமனத்தின் முதல் வருடத்தில் ரூபா 6000/- உடனும் அதனைத் தொடர்ந்து திறமை மற்றும் செயற்பாட்டு அடிப்படையில் சம்பள உயர்வும் இருக்கும். வெளிமாவட்ட மாணவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் பணிநியமனம் வழங்கப்படும்.

**பயிற்சி ஆரம்பம் : 25.05.2005**

**பயிற்சிக் கட்டணம்: ரூபா 12,000/-**

**கல்வித்தகுதி : க.பொ.த. உயர்தரம் அல்லது பட்டம்**

**திறமை அடிப்படையில் முதலில் வரும் 40 பேர் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவர்**

**பணி நியமனம் : 05.09.2005**

வேலையில்லாப்பட்டதாரிகள், பல்கலைக்கழக அனுமதியினைத் தவற விட்டவர்கள், உயர்தரத்தில் சித்தியுடன் நல்ல வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தவும்.

**சுயமாகப் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிவரக்கோவை மற்றும் சான்றிதழுடன் நேரில் வரவும்.**

(45123)

பதிவுகளுக்கு மற்றும் வகுப்புகளுக்கு

# SAAMSTECH

**TEACHERS TRAINING COLLEGE**

841, HOSPITAL RD, CHUNDIKULI ,JAFFNA. 021-4591571



# ஆரோக்கியமாக வாழ்வதற்கு

எம்மத்தியில் காணப்படும் பெரும்பாலான நோய்களுக்கு திட்டமிடப்படாத உணவுப்பழக்கமும், உடற்பயிற்சி இன்மையுமே காரணம் என்பது அறிஞர்கள் கருத்து.

உடற்பயிற்சி யார் யாருக்கு அவசியம் ?



- உடல் பருத்தோர்
- ஆண்கள்
- பெண்கள்
- வயதுவந்தோர் என அனைவருக்கும் அவசியமானது.



*நீங்கள் தினமும் ஒரு மணி நேரத்தை உடற்பயிற்சிக்காக ஒதுக்கி எம்முடன் இணைந்து கொள்ளுங்கள். அதன் ஊடாக :*

- நோய் நொடியற்ற சந்தோசமான வாழ்க்கையைத் தொடங்குங்கள்.
- உடல் எடையைக் குறைத்து மனஅழுத்தத்தில் இருந்து விடுதலை பெறுங்கள்.

இயந்திரமயமான உங்கள் வாழ்க்கையில் இந்த ஒரு மணி நேரம் சந்தோசமாகவும் புத்துணர்ச்சி ஏற்படுத்துவதாகவும் அமையும் என நம்புகின்றோம்.

காலை 5.30 - மதியம் 12.30 ஆண்கள்
மதியம் 1.00 - மாலை 6.00 பெண்கள்
மாலை 6.00 - இரவு 10.00 ஆண்கள்



பகல் நேர மாதக் கட்டணம் 200 /=
மாணவர்களுக்கு 150/=
மட்டுமே

**Power Gym**
Body Care & Fitness Centre
Jaffna.

230/1. நாவலர் வீதி,
(ஆனைப்பந்தி சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

T.P: 021-2223298
077-306-8984

(C-42716)(53-16-11) (C-42716) (54-

## வேலையாள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் உடன் தேவை.

**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்**
54, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(சி-42733) (24-16-17)

## சுயதொழிற் பயிற்சிகள்

- ஸ்கிறீன் பிறிண்டிங்
- கொம்பியூட்டர்
- பொலிமர் இறப்பர் ஸ்ராம்

மேற்படி துறைகளில் பயிற்சிபெற்று வீட்டிலிருந்து கைநிறையச் சம்பாதிக்கக்கூடிய தொழிற்பயிற்சி இது. ஏற்கனவே பதிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். (45104) (24-16-17)

விவரங்களுக்கு:

**யசோ ஆட்கிறபிக்ஸ்**
35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால் அவியல்,
சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு, மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

(45130) (24-16-17)

**வேலணை வைத்திய கலாநிதி**
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில் 16 - 07 - 1984



அநியாய அழிப்பில் 26 - 03 - 2005

**செல்வன் அருள்ராசா சஞ்சயன் (ஜெனோ)**

*அன்புக்கோர் அண்ணனாய்*
*ஆசைக்கொரு தம்பியாய்*
*இன்முகத்துடன் இல்லத்தில் வாழ்ந்தாயடா*
*பேசாமல் சென்றாயோ பெற்றவர்கள் துடித்திட?*
*கூசாமல் உன் உயிரைக் கயவர்கள் அழித்தனரே!*
*உன் பாசமுகம் பார்த்து ஆண்டுகள் மூன்று ஆனதடா!*
*ஆறுமோ எம் துயரம் எம் ஆயுள் முடியும் வரை!*

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.05.2005) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் இந்நிகழ்வில் கலந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*த.அருள்ராசா,*
*முனிகோயிலடி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (45050) (24-16-17)

உன் நினைவால் வாடும்:
**அப்பா, அம்மா, அண்ணா, தங்கை.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம் 07 - 04 - 1930



மறைவு 08 - 04 - 2005

# பொன்னர் சின்னையா

எம் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து
பாசமலராய் வாழ்ந்து மறைந்தாலும்
உம் நினைவுத் துளிகள் என்றும்
எம் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும்

இன்று (09.05.2005) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*துரையப்பா அவனியூ,*
*சந்நிதி றோட்,*
*அச்சுவேலி.* (45114) (24-16-17)

அன்புடன்
**மனைவி, பிள்ளைகள்.**

## எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்

# முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் லக்கி ஸ்ரார், பல்கலை அணிகள் மோதும்

## மின்னொளியில் நாளை இரவு



யாழ்ப்பாணம்,மே9

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவுடன் 'உதயனின்' ஊடக அனுசரணையுடன் வலிகாமம் லீக் நடத்திவரும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளைமுதல் மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவந்த இச்சுற்றுப் போட்டி கால்இறுதி ஆட்டங்களுடன் நிறுத்தப் பட்டிருந்தது.

அரையிறுதி, இறுதி ஆட்டங்களை மின்னொளியில் நடத்துவதற்காக இடைநிறுத்தப் பட்ட ஆட்டங்கள் மீண்டும் நாளை ஆரம்பமாகின்றன.

நாளைமுதல் இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**நாளை (10-05-2005)**

* முதலாவது அரையிறுதி ஆட்டம் - வட்டக்கச்சி லக்கிஸ்ரார் வி.க. எதிர் யாழ்.பல்கலைக்கழக வி.க.
* 40 வயதுக்கு மேற்பட்டோர் ஆட்டம் - கிளிநொச்சி லீக் எதிர் யாழ்.லீக்.

**11-05-2005**

* அரையிறுதி ஆட்டம் - சென். மேரிஸ் வி.க. எதிர் மனோகரா வி.க.
* 40 வயதுக்கு மேற்பட்டோர் ஆட்டம் - பருத்தித்துறை லீக் எதிர் வலிகாமம் லீக்.

**12-05-2005**

* 3ஆம் இடத்துக்கான ஆட்டம்
* காட்சி உதைபந்தாட்டம்
* மகளிர் மட்டும் கலந்துகொள்ளும் ஆட்டம்.

**13-05-2005**

* விளையாட்டுக் கழகங்களின் இறுதியாட்டம்.
* 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான இறுதியாட்டம்.

(3-86)

விளையாட்டு

## தென்மராட்சியில் வலைபந்தாட்டம்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி நூற்றாண்டை யொட்டி யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயது பெண்கள் பிரிவு அணிகளுக்கி யிலான வலைபந்தாட்டச் சுற்றுப்போ இன்றும் நாளையும் கல்லூரி மைதான நடைபெறவுள்ளன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கொக்குவில் இந்துக் கல்லூரி, வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, மீசாலை வீரசிங்கம் ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றின் அணிகள் இந்த ஆட்டத்தில் பங்குபற்றுகின்றன. (3-117)

## 15,19 வயதினருக்கான சதுரங்கப் போட்டி

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 15,19 வயதுப்பிரிவினருக்கான சதுரங்கப் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (3-190)

# வலிகாமம் வலயப் பாடசாலைகளின் சதுரங்கப் போட்டி முடிவுகள்

வலிகாமம்,மே9

வலிகாமம் கல்விவலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றன.

15வயது, 19 வயது ஆகிய இரு பிரிவுகளாக இடம்பெற்ற சதுரங்கப் போட்டிகள் ஆண்களுக்குத் தனியாகவும் பெண்களுக்குத் தனியாகவும் நடைபெற்றன. இப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட முதல் இரு இடங்களைப் பெற்ற அணிகளும் மாவட்டமட்டப் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

சதுரங்கப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

**15 வயது பிரிவு**

**ஆண** - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், தந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

**19 வயது பிரிவு**

ஆண் - மல்லாகம் மகாவித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

**15 வயது பிரிவு**

**பெண்** - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

**19 வயது பிரிவு**

**பெண்** - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி. (3-152)

## யாழ்.மதுவரித் திணைக்களம் நடத்திய

# கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ்.ஆஸ்பத்திரி அணி சம்பியன்

## உதைபந்தாட்டத்தில் யாழ்.செயலக அணி வெற்றி

யாழ்ப்பாணம்,மே9

வடமாகாண மதுவரிஉத்தியோகத்தர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்டத் திணைக்களங்களுக்கு இடையில் நடத்திய துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை அணி 19 ஓட்டங்களால்வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தினை தனதாக்கிக்கொண்டது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அரியாலை ஐக்கிய சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை அணியை எதிர்த்து யாழ்.செயலக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.போதனா வைத்தியசாலை அணியினர் 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

இதில் ஜெயக்குமார் 18 ஓட்டங்களைத் தனது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் ரமணன் 4 ஓவர் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், பிரதீபன் 4 ஓவர் பந்து வீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், ஜெயராஜ் 4 ஓவர் பந்துவீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சுஜர்சன் 2 ஓவர் பந்துவீசி 5 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

74 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய யாழ்.செயலக அணியினர் 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

இதில் றொகுலன் 13 ஓட்டங்களையும் ஜெயராஜ் 6 ஓட்டங்களையும், பிரசாந் 8 ஓட்டங்களையும் பிரதீபன் நான்கு ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் குணகரன் 4 ஓவர் பந்துவீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சாந்திஜெயந்திரன் 3.4 ஓவர் பந்துவீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் வரதன் 4 ஓவர் பந்துவீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப்போட்டிக்கு நடுவர்களாக ஜே.ஜேக்கப், என்.இராஜலக்ஸ்மன் ஆகியோர் கடமையாற்றினர். இப்போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரனாக யாழ்போதனா வைத்தியசாலை அணி வீரன் என்.ஜெயக்குமார் தெரிவு செய்யப்பட்டார்.

**யாழ்.செயலக அணி வெற்றி**

மதுவரிஉத்தியோகத்தர் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.செயலக அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இந்த ஆட்டத்தில் வடபிராந்திய மதுவரித் திணைக்கள அணியை எதிர்த்து யாழ்.செயலக அணி மோதியது.

யாழ்.செயலக அணி 4:2 என்ற கோல் கணக்கில் மதுவரித் திணைக்கள அணியை வெற்றி கொண்டது.

யாழ்.செயலக அணி வீரர்களான ஜெயராஜ், அனுரகாந், முகுந்தன், சதஸ்குமார் தலா ஒரு கோலினை தமது அணிக்காக அடித்தனர்.

மதுவரித்திணைக்கள அணி சார்பாக இரண்டு கோலினை யோகலிங்கம் அடித்தார்.

இப்போட்டியில் சிறந்த விளையாட்டு வீரனாக யாழ்.செயலக அணியின் கோல்காப்பாளர் பாஸ்கரன் தெரிவுசெய்யப்பட்டார்.

இப்போட்டிக்கு ரி.விமலன், பி.யோகனந்தன் எஸ்.சசிகரன் ஆகியோர் மத்தியஸ்தராக கடமையாற்றினர். (3-190)

## சாவகச்சேரியில் உதைபந்தாட்டம்

தென்மராட்சி,மே9

சாவகச்சேரி இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயது ஆண்கள் பிரிவு உதைபந்தாட்ட அணிகளுக்கான சுற்றுப்போட்டிகள் நேற்றுமுன்தினம் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின.

முதல்நாள் நடைபெற்ற போட்டிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அணியையும்-

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மட்டுவில் கமலாசனி வித்தியாலய அணியையும் தோற்கடித்து கால் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. (3-117)

## யாழ்.கல்வி வலய உடற்பயிற்சிப் போட்டி

யாழ்ப்பாணம்,மே9

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கோண்டாவில் இராமகிருஸ்ணா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (3-190)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கிரிக்கெட் விளையாட வசதியில்லை

## ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

முல்லைத்தீவு,மே9

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடினப் பந்து (லெதர் போல்) கிரிக்கெட் விளையாட்டுக்கான மைதானம் மற்றும் அதற்கான உபகரணங்கள் ஆகியவற்றிற்கான வசதிகள் இன்மையால் இத்துறையை வளர்க்க முடியாதுள்ளதாகக் கிரிக்கெட் ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பல விளையாட்டுக் கழகங்களும், பாடசாலைகளும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் ஆர்வமாகப் பங்குபற்றி வருகின்றன. ஆனால், கடினப்பந்து கிரிக்கெட் விளையாடுவதற்கான மைதான வசதிகளும் உபகரண வசதிகளும் இல்லாமையால் மென்பந்து கிரிக்கெட்டிலேயே அனைவரும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், இந்த மாவட்டத்தில் கிரிக்கெட்டின் தரத்தை மேம்படுத்தமுடியாதுள்ளது. கடினப் பந்து மைதானத்தை அமைத்து தருமாறு முல்லை வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் உட்பட பல அமைப்புகளால், பல தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையே கௌரவ ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பிக்குமாறு முல்லை கல்வி வலயத்தைச் சேர்ந்த பல பாடசாலைகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டபோதும் மைதானம் மற்றும் உபகரண வசதியின்மையால் பல பாடசாலைகள் இப்போட்டியில் பங்குபற்ற விண்ணப்பிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் அக்கறைகொண்ட அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இம்மாவட்டத்திற்கு கடினப் பந்து கிரிக்கெட் மைதானம் அமைத்துக் கொடுக்க முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (3-353-410)

## பளைப் பிரதேச விளையாட்டுப் போட்டிகள்

# புலோப்பளை சென்.பீற்றேர்ஸ் வி.க. 213 புள்ளிகள் பெற்றுச் சம்பியனானது

தென்மராட்சி,மே9

பளைப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் புலோப்பளை சென்.பீற்றேர்ஸ் விளையாட்டுக்கழகம் ஆறு வெற்றிக் கேடயங்களைப் பெற்று சம்பியனானது.

புலோப்பளை சென்.பீற்றேர்ஸ் விளையாட்டுக்கழகம் 213 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும் பளை சோலை விளையாட்டுக்கழகம் 97 புள்ளிகளையும் மாசார் பராசக்தி விளையாட்டுக்கழகம் 66 புள்ளிகளையும் பெற்று முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றன.

சிறந்த விளையாட்டு வீரர்களாக புலோப்பளை சென்.பீற்றேர்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ராஜ் அஜந்தன், பளை சோலை விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த யாவரன் ஆகியோரும்-

சிறந்த வீராங்கனைகளாக சென்.பீற்றேர்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த டயாளினியும், மாசார் பராசக்தி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சுஜாதாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

குழுநிலைப்போட்டிகளில் சென்.பீற்றேர்ஸ் வி.க. பெண்கள் அணி வலைபந்தாட்டம், கரபந்தாட்டம், கபடி, எல்லே ஆகிய போட்டிகளிலும் -

ஆண்கள் பிரிவில் உதைபந்தாட்டத்திலும் முதலிடத்தினை பெற்று ஐந்து வெற்றிக்கேடயங்களையும் போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்று ஆறாவது வெற்றிக் கேடயத்தினையும் பெற்றுக்கொண்டது. (3-117)

# பாதிக்கப்பட்ட பல்கலை. மாணவருக்கு உதவிக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்.மே9

சுனாமி இயற்கையனர்த்தத்தால் பாதிக்கப் பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு உத விக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.மாவட்ட றீடோ அலுவலகத்தில் வைத்து இக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக றீடோ நிறுவன இணைப்பாளர் தி.ஜெயக் குமார் தெரிவித்தார்.

உலக கனேடிய பல்கலைக்கழகமும் றீடோ நிறுவனமும் இணைந்து இக்கொடுப்பனவை வழங்கவுள்ளன.

இதேவேளை -

இதுவரை உதவிபெறாத சுனாமியால் பாதிக் கப்பட்ட மாணவர்கள் தமது பெயர் விவரங் களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேட்டுள்ளது.

(8-185-202)


"உண்மையின் ஆவியார் நிறை உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்"
(யோவான் 16:13)

## தூய ஆவியார் பெருவிழா

### 15-05-2005

### யாழ். மரியன்னை பேராலய வளாகத்தில்

இந்தியாவிலிருந்து வருகைதரும்
கத்தோலிக்க புதுவாழ்வு செபக்குழுவைச் சேர்ந்த
**அருட்திரு. சகாய ஜான், சகோ. இருதயசாமி**
ஆகியோரின் வழிநடத்துதலில் வழிபாடுகள் நடைபெறும்.

**ஆயத்த வழிபாடுகள்**

11-05-2005 புதன்
12-05-2005 வியாழன்
13-05-2005 வெள்ளி
தினமும் மாலை 5.30 மணிமுதல் 7.30 மணிவரை

**திருவிழிப்பு ஆராதனை**

14-05-2005

சனி இரவு 8மணி முதல் ஞாயிறு அதிகாலை வரை
[ஞாயிறு அதிகாலை 4.30 மணிக்கு திருப்பலியுடன்
திருவிழிப்பு ஆராதனை நிறைவடையும்] தூய ஆவியின் அருட்பொழிவால் நிறைந்து வாழ்வின் கட்டுக்களிலிருந்து விடுதலைபெற்று மகிழ்வுடன் புதுவாழ்வு வாழ
நீங்களும் வாருங்கள்! மற்றவர்களையும் அழைத்து வாருங்கள்

13-05-2005 வெள்ளி காலை 9மணி முதல் ஒரு மணி வரை
கச்சேரி – நல்லூர் வீதியிலுள்ள புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில்
குணமாக்கல் வழிபாடும் நடைபெறும்.

(45023)(46-11-45)

இறை தியான குழுவினர். ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.


## கேள்வி அறிவித்தல்

### அரசாங்க அதிபர் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்

1. கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரினால் 25-05-2005 புதன்கிழமை காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப் படும்.
2. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்குக் கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்டுள்ள, ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோர் ஆவார்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தின ரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட, செய்யப்படுகின்ற வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தை மாகாணக் கட்டடங்கள் திணைக் கள பிரதம பொறியியலாளரிடம் சமர்ப்பித்து, தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். கேள்வி வைப்புப் பணத்தை **யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில்** செலுத்திப் பற்றுச்சீட் டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 20-05-2005 அன்று 3.00 மணி வரை நிறைவேற்று பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத (கேள்விப்பணம்) | ICTAD பதிவுதரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|
| 1. மத்திய மருந்தகம் நிர்மாணித்தல் – தெங்கன் கிணற்றடி, பருத்தித்துறை | 750/= | M -7 | 42,000/= |
| 2. அச்சுவேலி வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவு கட்டடம் நிர்மாணித்தல் கட்டம்– (II). | 1,000/= | M -6 | 72,000/= |

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், மாகாணக் கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடம் இருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ள லாம்.

**கே. கணேஸ்**
அரச அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**
09-05-2005 (C/42698)(46-11-46)

## 31ஆம் நாள் நினைவுகளில்



தோற்றம் 29 - 12 - 1956

மறைவு 09 - 04 - 2005

### வேலுப்பிள்ளை ஜெயச்சந்திரன்

09-04-2005 அன்று காலமான வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகன் ஜெயச்சந்திரனின் அஸ்தி அவரது தந்தையாரால் ராமேஸ்வரத்தில் இன்று (09-05-2005) திங்கட்கிழமை கரைக்கப்பட்டு நண்பகல் சென்னையில் உள்ள தந்தையின் இல்லத்தில் மதியபோசனம் நடைபெறும்.

தகவல்:-
தந்தை, தாய்,
சகோதரிகள், மருமக்கள்.

சென்னை. (44698)(46-11-45)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம் 02 - 06 - 1953

மறைவு 10 - 04 - 2005


### அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா

கடந்த 10-04-2005 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவன் சங்கரப்பிள்ளை வரதராசா அவர்களின் சபிண்டீகரண வீட்டுக்கிரியைகள் 10-05-2005 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் மேற்படி கிரியையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாய், மனைவி,
பிள்ளைகள்.

"சந்நிதி இல்லம்"
கைதடி வடக்கு, கைதடி. (45003)(46-11-45)

## எங்கள் நெஞ்சைவிட்டு நீங்காத 2ஆம் வருட நினைவஞ்சலி





**அமரர் நாகநாதர் நாகலிங்கம்** திதி: பிரதமை

**திருமதி நாகலிங்கம் அரவிந்தமலர்** திதி: ஷஷ்டி

02-11-1940 ← மலர்வு → 14-02-1951

02-05-2003 ← உதிர்வு → 07-05-2003

அன்போடும் பண்போடும் ஆதரவாய் வாழ்ந்திருந்தீர் எமையெல்லாம்
வளர்த்து ஆளாக்கிவிட்டு திடீரென்று மறைந்து விட்டீர்களே!
நெஞ்சோடு உம் நினைவு நித்தமும் உறவாட வைத்துச் சென்றீரோ?
உங்களது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

ஸ்ரீவிக்னேஸ்வரா வீதி,
அச்சுவேலி. (45082)(46-14-26)

- குடும்பத்தினர்.

# சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் நேரடி கண்காணிப்பில் காச நோயாளர்களுக்குச் சிகிச்சை

## யாழ்ப்பாணத்தில் அறிமுகம்

உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் காச நோயாளருக்கு நேரடிக் கண்காணிப்பின் கீழான சிகிச்சை தற்போது யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டிய அவசியமில்லை. நோயாளிகள் சுகாதார சேவை உத்தியோகத்தரின் நேரடிக் கண்காணிப்பில் தினமும் இரண்டு மருந்தினை உட்கொள்வார் பின் நான்கு மாதங்களிற்கு இரண்டு மருந்துகளை உட்கொள்வார். மேலும் இந்த நான்கு மருந்துகளும் சேர்ந்த தனி மருந்துகளும் தற்போது பாவனையில் வந்துள்ளன. இவற்றை கிரமமாக உட்கொள்ளுவதால் நோய் முற்றாக குணமடைந்துவிடும்.

குறுகியகால நேரடி அவதானிப்புச் சிகிச்சை முறையில் அடையாளம் காணப்படும் சகல காச நோயாளிகளும் தமது வதிவிடங்களிற்கு மிக அருகில் உள்ள சுகாதார நிலையத்திற்கு சிகிச்சை விவர அட்டை, மருந்துகளுடன் அனுப்பப்படுவர். நோயாளிக்கு அளிக்க வேண்டிய மருந்துவகைகள், மாத்திரை அளவு என்பன சிகிச்சை அட்டையில் குறிக்கப்பட்டிருக்கும் மருந்து உள்ளடக்கியுள்ள பாத்திரத்தில் நோயாளியின் பெயர் குறிக்கப்பட்டிருக்கும். நோயாளி தினமும் சிகிச்சை நிலையத்திற்கு வந்து சுகாதார உத்தியோகத்தர் முன்னிலையில் மருந்தினை உட்கொள்வர். நோயாளி மருந்தினை உட்கொண்டதும் அவரது சிகிச்சை அட்டையில் அடையாளம் இடப்படும். ஒரு நாளாவது மருந்து உட்கொள்ளவருகை தராவிடத்து அவரை வரவழைக்க உடன் முயற்சி எடுக்கப்படும். இத்தருணத்தில் திருக்குறளின் பொருட்பாலில் வள்ளுவர் கூறிய

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச்
செல்வான என்று அப்பால் நாற்கூற்றே மருந்து"

வாசகம் ஞாபகத்தில் வருகிறது. அதாவது நோயுற்றவன்

"நோய் தீர்க்கும் மருத்துவன்" நோயைப் போக்கவல்ல மருந்து நோயாளியைக் கண்காணிப்பவன் என்பனவையே சிகிச்சையில் அடங்குகின்றன.

காசநோய் தொற்றியவர்கள் நோய் அறிகுறிகள் காணப்படின் உடனடியாக சளிப்பரிசோதனை செய்வதற்காக யாழ்.மார்புநோய் சிகிச்சை நிலையத்தை அல்லது அருகில் உள்ள வைத்தியசாலையை நாடவேண்டும். காசநோய் தீர்க்கும் மருத்துவராக மாவட்டக் காசநோய்த் தடுப்பு அதிகாரி விளங்குவார். நோயைப் போக்கவல்ல மருந்துகளாக நான்கு வகையான மருந்துகள் முதன்மை பெற்று விளங்குகின்றன. உழைச்செல்வான் எனும் நோயாளியை கண்காணிப்பவர்களாக மருந்துகளை தினமும் வழங்கும் சுகாதார சேவையாளர்கள் விளங்குவார்கள். இருபது வருட ஆராய்ச்சியில் உலக சுகாதார நிறுவனம் விதந்துரைத்ததை இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களிற்கு முன்பே திருவள்ளுவர் ஒரு குறளில் விளக்கியுள்ளமை தமிழை பெருமை கொள்ளவைக்கின்றது. ஆனால் அதைத் தற்போது கடைப்பிடிப்பது எமது கடமையாகும்.

காசநோய் பற்றீரியாவினால் ஏற்படும் தொற்று நோயாகும், இது உடலில் எப்பாகத்தையும் தாக்கலாம். ஆனால், பொதுவாக சுவாசப்பையையே தாக்கும். இது நுரையீரல் காசநோய் என அழைக்கப்படுகின்றது. நுரையீரல் தவிர நிணநீர்கணு முள்ளந்தண்டு, மூளை மென்சவ்வு என்பவற்றிலும் காசநோய் ஏற்படலாம்.

இந்நோய்க்கிருமிகள் காற்றின் மூலமே தொற்றுகின்றது. காற்றோட்டம் குறைந்த இடங்களில் வாழ்ந்தால் நோய் தொற்றல் அதிகம் ஏற்படும். சூரியஒளி நோய்க்கிருமிகளை அழிக்கும். எனவே நன்கு சூரிய வெளிச்சம் படுமாயின் நோயக் கிருமிகள் அழிந்துவிடும். நோயாளிகள் இருமும்போதும், தும்மும்போதும் நோய்க்கிருமிகள் சளி, எச்சில் துணிக்கைகளுடன் சுவாசப்பையில் இருந்து வெளியேறிக் காற்றில் கலக்கின்றன. சுகதேகி ஒருவர் சுவாசிக்கும்போது இந்த நுண்கிருமி உள்ள காற்று உள்ளெடுக்கப்படுமானால் அவை சுவாசத்தொகுதியினூடே உட்செல்கின்றன. இந்நோய்க்கிருமிகள் உட்சென்றாலும் அனைவரும் நோயாளிகள் ஆகமாட்டார்கள். ஒருவரது நோய் எதிர்ப்புத்தன்மையிலும் உட்சென்ற நோய்க்கிருமிகளின் எண்ணிக்கையிலுமே நோய் உருவாகும் தன்மை தங்கி உள்ளது. நோய் எதிர்ப்புச்சக்தி பலமானதாக இருக்கும் போது ஒருவரில் நோய் அறிகுறிகள் தோன்றாமல் அவர் தொற்று ஏற்பட்ட நிலையில் வாழ்வார். அவரிடம் இருந்து மற்றவர்களுக்கு நோய்த்தொற்று ஏற்படாது. ஆனால், நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக உள்ளபோது நோய்க்கிருமியை அழிக்க உடற்கலங்களால் முடியாது போகும். ஆனால், நோய்க்கிருமிகள் பல்கிப்பெருகி சுவாசச் சிற்றறை மென்சவ்வுகளைச் சிதைத்து நோய் நிலையை உருவாக்கும். நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடையும் சந்தர்ப்பங்களாக போசாக்கு குறைபாடு, முதுமை அடைதல், அதிக மதுபானம் பாவித்தல், நீரிழிவு நோய் நிலை, புற்றுநோய் வேறு பக்ரீரியா, வைரஸ் தொற்றுகள் பிரிட்னிசலோன் போன்ற கட்டுப்பாடு இல்லாத பாவனை எயிட்ஸ்நோய் என்பன காணப்படுகின்றன. இத்தகையவர்களில் காச நோய்க்கிருமிகள் உட்சென்றதும் தொற்றுள்ள நிலையிலிருந்து நோய் நிலைக்கு மாற்றப்படுவர்.

காசநோயின் அறிகுறியாக மூன்று வாரங்களுக்கு மேலான தொடர்ச்சியான இருமல் காணப்படும். சளியுடன் இரத்தம் வெளியேறும். மார்பில் நோ காணப்படும். சுவாசிப்பதால் சிரமம் ஏற்படும் எளிதில் களைப்படைவார். உணவில் நாட்டமின்மை காணப்படும். மாலை நேரங்களில் மெல்லிய காய்ச்சல் காணப்படும். இரவு நேரத்தில் அதிகம் வியர்த்தல் ஏற்படும். அதிக சோர்வு காணப்படும். இந்நோய்க்குரிய அறிகுறிகள் ஒன்றோ அல்லது சிலவோ காணப்படும். உடனடியாகச் சிகிச்சை எடுப்பதால் பூரணமாகக் குணமடையலாம். ஆனால், மருந்துகள் எடுக்காவிடின் என்புகள் தோலுடன் போட்டியிட்டு தங்கள் இருப்பை வெளிக்காட்ட முனையும். இவை சிலவேளைகளில் உயிர்வாழும்




ஆவிகள் என தோற்றமளிக்கும். காசநோய் அறிகுறிகள் தென்பட்டால் யாழ்ப்பாண மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் சளிப்பரிசோதனை செய்து ஆலோசனையைப் பெறலாம். சளிப்பரிசோதனையே சிறந்ததும் நம்பிக்கையானதும் விரைவானதுமான மலிவானதுமான சோதனையாகும். மூன்று சளி மாதிரிகள் பரிசோதிக்கப்படும். காசநோய்க்கு பூரண சிகிச்சை அளிக்க சரியான மருந்துகள் உரிய அளவு தினமும் சரியான காலத்தில் எடுக்க வேண்டும்.

காசநோய் ஏற்கனவே வந்து சிகிச்சை பெற்றவர்களுக்கு மீளவும் வந்தால் அல்லது மருந்துகளை ஒழுங்காக எடுக்காவிடின் முதல் இரு மாதங்களுக்கு நான்கு மருந்துகளுடன் "ஸ்ரெப்ரோமைசீன்" ஊசியும் தினமும் அளிக்க வேண்டும் பின் நான்கு மருந்துகள் ஒரு மாதத்திற்கும் பின் மூன்று மருந்துகள் ஐந்து மாதங்களிற்கும் அளிக்கப்படும்.

மனிதன் ஒவ்வொரு நோயினைக் குணப்படுத்த புது மருந்தினை கண்டுபிடிக்கும் போது அம்மருந்திற்கும் பக்கவிளைவாக புதிய நோயையும் உருவாக்குகின்றன. அந்தவகையில் காசநோய்க்கான மருந்துகளும் விதிவிலக்கப்படும். மருந்துகளை உட்கொள்ளும் போது சிறுநீர், வியர்வை செந்நிறமாக காணப்படும். அதற்கு அச்சம் கொள்ளத்தேவையில்லை. கை, கால் விறைப்பு, மூட்டுக்களில் நோ காணப்படலாம் கண்சிவத்தல், உடல் சொறிவு ஏற்படலாம். மருந்துகள் உட்கொள்ளுமபோது சூடை போன்ற மீன்களையும் மாசிக் கருவாடு தகரத்தில் அடைத்த மீன்களையும் உட்கொள்ளக்கூடாது. ஒவ்வாமை சிறிது ஏற்படலாம். ஈரலழற்சி ஏற்படலாம். இதன்போது கண் மஞ்சள் நிறமாகும். இதன்போது மருந்துகளை உட்கொள்ளாது நிறுத்தி மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்திற்கு செல்லவேண்டும் காசநோய் ஏற்படாது தடுக்க நோயைப்பரப்புவோரைக் கண்டுபிடித்து அவர்களுக்கு சரியான சிகிச்சை பெறவைத்து தரப்படுத்தல் இன்றியமையாததாகும். நோயாளிக்கு சரியான சிகிச்சையைப் பெற அவரது குடும்பத்திற்கு உதவவேண்டும். அப்பகுதி சுகாதார சேவையாளர்களும் இதற்கு உதவவேண்டும். முற்றாக காசநோயைக் கட்டுப்படுத்தலாம். இருமும்போதும் தும்மும்போதும் மூக்கு வாய்ப்பகுதியை கைக்குட்டையால் மூடிக் கொள்ளவேண்டும். கண்ட கண்ட இடங்களில் சளி, எச்சில் துப்புவதைத் தவிர்த்தல் வேண்டும். நோயாளியின் சளியை கவனமாக சேகரித்து ஆழமாகப் புதைத்துவிடல் வேண்டும் அல்லது பழைய கடதாசியில் எடுத்து எரித்து விடல் வேண்டும். காற்றோட்டமான சூரிய ஒளிபடும் இடங்களில் வசிக்கவேண்டும்.

நோயாளியுடன் நெருக்கமாகப் பழகுபவர்கள் மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்தில் சளிப்பரிசோதனை செய்யவேண்டும். நெருக்கமான இடங்களில் வசிப்போர், தொழில் புரிவோர், இந்தியாவில் இருந்து மீண்டவர்கள் காசநோய் பற்றிய அறிகுறிகளுக்கு அவதானமாக இருக்கவேண்டும்.

காசநோயாளிகள் இடைநடுவில் மருந்துகள் கைவிட முக்கிய காரணம் மருந்துப் பாவனையின் பின் நோய் அறிகுறிகள் அற்றவுடன் நோய் முற்றாக மாறிவிட்டது என்ற தப்புக் கணக்காகும். இவ்வாறு மருந்துகளை இடையிடையே ஒழுங்கின்றிப் பாவித்தால் கிருமிகள் நுண்ணுயிர் கொல்லிகளுக்கு எதிர்ப்புத் தன்மை உடையதாக உருவாகிவிடும். மேலும் தனித்தனியே ஒவ்வொரு மருந்துகளைக் கொடுக்கும்போது நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெற்றுவிடும் என்பதால் ஒரே தடவை நான்கு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. இவை ஒவ்வொருவரின் உடல் நிறைக்கு ஏற்ப கொடுக்கப்படுகின்றன. இறுதியாக சாதாரண யாழ். வாசி எவ்வாறு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டானோ

**டாக்டர் சி.யமுனானந்தா**

அவ்வாறே காசநோய்க்கான சிகிச்சைக் கட்டமைப்பும் முற்றாகப் பாதிக்கப்பட்டது. யாழ். பண்ணையில் இருந்த மார்புநோய் வைத்தியசாலையும் சிகிச்சை நிலையமும் போர்க்களமாக மாறி பின் தரைமட்டமாகியது. தற்போது புதிய கட்டடத்துடன் மீளவும் செயற்படக் கூடிய நிலைமைக்குச் செல்லுகின்றது. ஆனால், மயிலிட்டி வைத்தியசாலை 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவ ஆக்கிரமிப்பில் இடம்பெயரத் தொடங்கி கோப்பாய், சாவகச்சேரி மீண்டும் கோப்பாய் என வசதி வாழ்க்கை வாழ்ந்து வருகின்றது. காசநோய்க்கான சிகிச்சை தற்போது சமுதாய மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதால் அதற்கென கட்டாயம் வைத்தியசாலை அவசியம் இல்லை எனக் கருதமுடியாது. சில நோயாளிகளை வைத்தியசாலையில் வைத்தே சிகிச்சை செய்யவேண்டும். ஒரு சமூகத்தின் நுரையீரல்கள் என மார்பு நோய்.வைத்தியசாலைகளைக் கூறலாம். அச்சமூகம் நலமாக சுவாசிப்பதற்கு மார்புநோய் வைத்தியசாலை இன்றியமையாதது என்றால் மிகையில்லை. ஆயின், நுரையீரல் இருக்குமிடம் நெஞ்சறை போன்று மார்புநோய் வைத்தியசாலையும் உரிய இடத்தில் அமைத்தல் நன்று. ★

# புற்றுநோய் பற்றிய சில துளிகள்

**புற்றுநோய் என்றால் என்ன?**

இது உடற் கலங்கள், உடலில் கட்டுப்பாட்டுக்கு அப்பால் தன்னிச்சையாக, அசாதாரண முறையில் பெருக்கமடைவதால் ஏற்படும் வளர்ச்சிகள் (கட்டிகள்) எனக் கொள்ளலாம். இது உடலின் எப்பகுதியிலும் ஏற்படலாம்.

**இலங்கையில் புற்றுநோய்....**

இலங்கையில் புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. ஒரு வருடத்தில் சுமார் 12,000 புதிய புற்றுநோயாளர்கள் இனம் காணப்படுகின்றார்கள். பெரும்பாலானோர் பிந்திய நிலையிலே வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்களில் வாய், தொண்டைப் புற்றுநோய் அதிக அளவில் ஏற்படுகின்றது. பெண்களில் மார்பகப் புற்றுநோய் அதிக அளவில் ஏற்படுகின்றது.

**புற்றுநோய்க்குரிய எச்சரிக்கை அறிகுறிகள்**

★ நீண்ட காலம் நிலைத்திருக்கும் இருமல் அல்லது குரல் வித்தியாசம்.

★ குணமடையாத புண்.

★ உடம்பில் கட்டு, தழும்பு அல்லது உண்ணி ஏற்படுதல் அல்லது பல காலமாக இருந்து திடீரென வளர்ச்சியடைதல்.

★ மார்பகங்களில் அல்லது வேறு இடங்களில் ஏற்படும் கட்டிகள் அல்லது தடிப்புகள்.

★ பெண் யோனி வழியில் இருந்து அசாதாரணமாக இரத்தம் அல்லது வெள்ளைப் போக்கு ஏற்படுதல் அல்லது மாதவிடாய் நின்ற பின்பும் இரத்தப் போக்கு ஏற்படுதல்.

★ மலசலம் கழிக்கும் பழக்கத்தில் ஏற்படும் வித்தியாசம் அல்லது மலத்தோடு இரத்தம் வெளிவருதல்.

★ அதிக காலமாக நீடித்திருக்கும் அஜீரணம் (சமிபாடின்மை) அல்லது விழுங்குவதில் உள்ள கஷ்டம்.

பிரதானமாக வாயில் புற்றுநோய் ஏற்பட முன்பு கண்ணால் பார்க்கக்கூடிய பல வித்தியாசங்கள் ஏற்படுகின்றன.

★ உயர்ந்து தென்படும் அகற்றமுடியாத வெண்ணிற அல்லது செந்நிற தழும்பு ஏற்படுதல்.

★ செந்நிறமாகப் படர்ந்த பகுதி ஏற்படுதல்.

★ நீண்டகாலமாகக் குணமடையாத நோவில்லாத புண்.

★ நாவை மடிப்பதற்குச் சிரமம் ஏற்படுதல்.

எவரும் வாயை கண்ணாடியில் பார்த்து இவற்றைத் தெரிந்துகொள்ளலாம்.

மேற்கூறிய எச்சரிக்கை அறிகுறிகள் வேறும் பல நோய்களில் ஏற்படலாம். எனவே, நீங்கள் வைத்தியரிடம் சென்று புற்றுநோய் தான் என அறிவதால் இதனை ஆரம்பநிலையில் கண்டறிய வாய்ப்புள்ளது.

**புற்றுநோய்க்கான காரணிகள்**

புற்றுநோய்க்கான சரியான காரணிகள் எவையென இன்னமும் கூறமுடியாதுள்ளது. எனினும், புற்றுநோய் ஆனது வாழ்க்கை முறை, பரம்பரை மற்றும் சுற்றாடல் காரணிகளின் கூட்டுத் தாக்கத்தின் விளைவாகவே ஏற்படுகின்றது எனக் கருதப்படுகின்றது.


வைத்திய கலாநிதி
ந.ஜெயகுமாரன்
புற்றுநோய் வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.


எனினும், பல பாதகமான காரணிகள் புற்றுநோய் ஏற்படுவதற்குத் துணையாகவுள்ளன என இனங்காணப்பட்டுள்ளது.

**பாதகமான காரணிகள்**

★ புகையிலை பாவித்தல்

இதனைப் புகைப்பதினாலோ, அப்புகையை அருகில் இருந்து உள்வாங்குவதாலோ அல்லது இதனைப் பாக்கு, சுண்ணாம்பு உடன் உட்கொள்ளுவதாலோ பாதிப்பு ஏற்படலாம்.

★ குடிவகை

இதன் எரிவுத் தாக்கத்தால் வாய், களப் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது. அத்துடன் இதனால், ஈரல் பாதிப்படைந்து ஈற்றில் ஈரல் புற்றுநோய் ஏற்படலாம்.

★ உணவுப் பழக்கம்

சூடான, உறைப்பு நிறைந்த உணவு, கொழுப்புக்கூடிய உணவு, நார்த்தன்மை குறைந்த உணவு, செயற்கையாக நிறமூட்டப்பட்ட உணவு மற்றும் கிருமிநாசினி செறிந்த உணவு உட்கொள்ளவதால் எம்மில் புற்றுநோய் ஏற்படும் அபாயம் அதிகரிக்கின்றது. இதைத் தவிர்க்க நீங்கள் நிறைய மஞ்சள் பழவகைகள், கரட், பீற்றூட் மற்றும் பச்சை இலைவகைகளை நாளதோறும் உட்கொண்டால் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கலாம்.

★ வாய்ச் சுகாதாரம் இன்மை

பாதிப்படைந்த பற்கள், கூரியபற்கள்,வாய் உள்ளக மேலணியைத் தொடர்ந்து உறுத்துவதால் புற்றுநோய் ஏற்படலாம்.

★ இரசாயனப் பதார்த்தங்கள்

அதிக காலம் இவற்றைக் கையாண்டு வேலை செய்வோர்க்கு குறிப்பாக, இரத்தப் புற்றுநோய் மற்றும் சிறுநீர்ப்பைப் புற்றுநோய், என்பன ஏற்பட வாய்ப்பு அதிகம் உள்ளது.

★ பெண்கள் மாதவிடாய் நின்ற பின்பு ஓமோன்களைப் பாவிப்பதால் மார்பகப் புற்றுநோய் ஏற்படவாய்ப்பு உள்ளது.

★ சூரியனில் இருந்துவரும் 'யூவி' கதிர்கள் மற்றும் ஓசோன் படலத்தின் உடைவால் பூமியை அடையும் பாதகமான சூரியக்கதிர்கள்.

தோல் புற்றுநோயை ஏற்படுத்த வாய்ப்புண்டு. இது பிரதானமாக வெள்ளை இனத்தவரில் அல்லது அல்பினோவில் ஏற்படும்.

★ அணுக்கதிர்தாக்கம்

அணு ஆலை, கதிர் உற்பத்தி இயந்திரம் என்பனவற்றில் ஏற்படும் கசிவு மற்றும் அணுவாயுதப் பரீட்சை அல்லது அணுஆயுதம பாவிப்பால் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

★ நெருங்கிய உறவினர்கள்:

ஒரு சில புற்றுநோய்கள் உதாரணமாக மார்பகப் புற்றுநோய், குடல் புற்றுநோய் மற்றும் இரத்தப் புற்றுநோய் என்பன பரம்பரை அலகுகளால் கடத்தப்படுகின்றன.

★ நல்ல உடற்பயிற்சி இன்மை

மேற்கூறியவாறு உங்கள் பழக்கவழக்கங்களை மாற்றி பாதககாரணிகளில் இருந்து முடியுமானவரை உங்களை விலக்கிக் கொள்வதன்மூலம் உங்களைப் புற்றுநோய் அணுகாது பாருங்கள். புற்றுநோய்க்கான குணங்குறிகள் ஏற்படும் பட்சத்தில் வைத்தியரை உடன் சந்தித்து ஆரம்பநிலையில் உங்களுக்கான சிறந்த புற்றுநோய்ச் சிகிச்சையை குணமடையும் நோக்கில் மேற்கொள்ள ஒத்துழையுங்கள். ★

# யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை அதிபர் உயர்திரு.கனகசபாபதி இரத்தினேஸ்வரன் அவர்களின் சேவைநலன் பாராட்டுவிழா சிறப்பிதழ்

## சமூகத்தை இணைத்துப் பாடசாலையை மேம்படுத்தியவர்

திரு.க. இரத்தினேஸ்வரன் அவர்கள் கடந்த எட்டு வருடங்களாக ஆளுமை மிக்க அதிபராக பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவரின் சேவையினைப் பாராட்டி வெளிவரும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகிறேன்.

இவருடைய பதவிக்காலத்தில் பெற்றோர், பழையமாணவர் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினை இணைத்துப் பல வளர்ச்சிகளைப் பாடசாலையில் ஏற்படுத்தியுள்ளார். கல்விப் பெறுபேறுகளும் இவருடைய காலத்தில் சிறப்பாக இருந்தமை பாராட்டிற்குரியது.

பல்வேறு சமய சமூக நிறுவனங்களில் சிறப்பாகப் பணியாற்றி வரும் திரு.க. இரத்தினேஸ்வரன் அவர்கள் ஓய்வுக்காலத்தில் மேலும் பல சேவைகளைச் செய்வதற்கு அவருக்கு நல்ல மன உறுதியையும் தேக ஆரோக்கியத்தினையும் வழங்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ப.விக்னேஸ்வரன்
வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம், மருதனார்மடம், சுன்னாகம்.

## இன்முகத்துடன் இறுதிவரை சகல துறைகளையும் கனகச்சிதமாக வளர்த்தெடுத்தவர்

வலிகாமம் வலயத்தில் நிர்வாகத்தில் சிறந்த இறைவனுக்குகந்த அதிபர்களில் பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலையின் அதிபர் திரு.க. இரத்தினேஸ்வரன் மிக மிக முக்கியமானவர். பாடசாலையின் புறத் தேவைகள் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாமல் மாணவரின் உயர்வு நோக்கி நிர்வாகத்தை ஒருமுகப்படுத்தியவர். சங்கானைக் கோட்டத்து அதிபர் சங்கத்தில் செயலாளராக இருந்து தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களைக் கச்சிதமாகச் செய்து முடித்தவர். அது மாத்திரமல்ல அக்கோட்டத்தின் அத்தனை அதிபர்களாலும் அன்பு செய்யப்பட்டவர். அவரது அகத்தின் தூய்மை அவரது கண்களிலும் வார்த்தைகளிலும் தெரிகின்றன, அன்பான நல்ல மனிதர் என முழு உள்ளத்துடன் நினைவு கூருகின்றேன். அவரது ஓய்வுக்காலம் அவரது சேவைகளைச் சமூகத்தில் தொடரும் காலமாக அமையவும் அவரது உள்ளத்து எண்ணங்கள் யாவும் இனிதே நிறைவுறவும் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**திருமதி R.இருதயநாதன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.**

## இலட்சிய நாயகன்

எமது பாடசாலையில் நல்லதிபராக இலட்சியக் கல்விப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள முன்னாள் அதிபர் உயர்திரு. கனகசபாபதி இரத்தினேஸ்வரன் அவர்கள் தன்னலம் அற்ற சோர்வுபெறாத கண்துஞ்சாத கல்விச் சமூகச் சேவையாளன் ஆவார். இவரின் கல்விப் பணியில் கல்விச் சமூகம் இன்று உயர்வுபெற்றுள்ளது. இவரது கல்விப் பணியை மகிழ்ந்து பாராட்டுவதுடன், அவர் மேலும் பல நிறைவுகள் பெற்று உற்றார், உறவுகளுடன் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என வாழ்த்தி நிறைவுசெய்கின்**திரு.க.ஹரிஹரசக்தி(Sp.Trd.B.A.P.G.D.I.P.I.N.Ed.)**
அதிபர், யா/பண்ணாகம் வடக்கு அமி.த.க.பாடசாலை,
காலையடி, பண்டத்தரிப்பு.

மலர் அமைப்பு: வலி.தென்மேற்குச் செய்தியாளர்



திரு.கனகசபாபதி இரத்தினேஸ்வரன்

- உதவி ஆசிரியர் (1966–1977) – நுவரெலியா சென்லியனாட்ஸ் தமிழ் வித்தியாலயம்
- ஆசிரிய பயிற்சி (1978–1979) – கொழும்புத்துறை பயிற்சிக் கலாசாலை
- உதவி ஆசிரியர் (1980–1992) –நுவரெலியா சென்லியனாட்ஸ் தமிழ் வித்தியாலயம்
- உதவி ஆசிரியர், பகுதித் தலைவர் (1992–1998) – யாழ்.வட்டு இந்துக்கல்லூரி ஆரம்பப் பிரிவு
- அதிபர் சேவை (1998–2005) – யாழ்.பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலை
- அதிபர் சேவை நிறைவு – 23-03-2005

## தமது பணியை இறைபணியாகச் செய்த எங்கள் அதிபர்

எங்கள் பாடசாலையில் எட்டுவருட காலமாகத் தமது பணியை இறைபணியாகமேற்கொண்டு பாடசாலையைப் பலவழிகளிலும்முன்னேற்றிய எங்கள் அன்புக்குரிய அதிபர்திரு.க.இரத்தினேஸ்வரன் அவர்கள்பூமியில் இந்திரன் போல் வாழ்ந்து இன்பமுற்று சிந்தையில் நினைப்பதெல்லாம் கிடைக்கப்பெற்று மானிடப் பிறவியின் பயனை அடையவேண்டுமென்று வாழ்த்துபவர் கள்..

**பணிப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**காலையடி மறுமலர்ச்சி மன்றம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

## ஆன்மீகம் மூலம் தமது சேவையை வளம்படுத்தியவர்

மதிப்பிற்குரிய இரத்தினேஸ்வரன் பாடசாலை அதிபராக இருந்த காலத்தில் அந்தக் கிராமத்தின் முன்னேற்றத்திற்காகவும் பாடசாலை வளர்ச்சிக்காகவும் அரிய பல செயல்கள் செய்து வந்தவர். நான் அறிந்த காலம் தொட்டு பல அதிபர்கள் பாடசாலையில் பணிபுரிந்த காலத்தை விட இப்பொழுது ஓய்வுபெறும் அதிபரின் காலத்தில் பாடசாலை வளர்ச்சி உன்னத நிலை அடைந்துள்ளது. அதுமட்டுமல்லாமல், ஆன்மீகத் தொண்டு, பொதுத்தொண்டு என்று பல சேவைகள் செய்து மக்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர் அவர். கல்வியையும் ஒழுக்கத்தையும் ஆன்மீகப் பாதையில் செலுத்தி நமக்கு வழிகாட்டியாக இருந்தவர். காயத்திரி தேவியின் அருளாசியுடன் அறுபத்துநான்கு கலைகளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க! வளமுடன் வாழ்க வையகம்!

சுவாமி ஸ்ரீ ராஜ்குமார்
**ஸ்ரீ காயத்திரி காமபீட பீடாதிபதி, 86, பலாலி வீதி, திருநெல்வேலி.**

## எமது நெஞ்சைவிட்டகலாத உயர்ந்த எண்ணங்கள் உடையவர்

திரு.க.இரத்தினேஸ்வரன் பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் அதிபராக இருந்து ஓய்வு பெற்றுக்கொள்கின்றார்.இவரது ஓய்வு இந்தப்பாடசாலைக்கு மட்டுமன்றி சங்கானைக்கோட்டத்திற்கே பெரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பாடசாலையின் பௌதிக வள அபிவிருத்தி என்றும் இவரது பெயரை நினைவுபடுத்தி நிற்கும். மேலும் இவர் சங்கானைக்கோட்ட அதிபர் சங்கச் செயலாளராக பதவி வகித்துக் கோட்டத்தின் கல்வி வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றியுள்ளார். 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களது கல்வி மேம்பாட்டிலும் கோட்டத்தின் சைவ கலாசார மேம்பாட்டு விழாவிலும் ஆசிரியர் தின நிகழ்வுகளிலும் இவரது சேவை என்றும் மறக்க முடியாதவை. இந்தப் பெருந்தகை நேரத்தை சிரமத்தை, பணத்தை துஞ்சமென மதித்து சங்கானைக்கோட்டத்தின் கல்வி வளர்ச்சியில் மாணவர் நலனில் காட்டிய அக்கறை என்றும் எமது நெஞ்சை விட்டகலாது பசுமையான நினைவுகளாக இருக்கும்.

திரு.நா. சண்முகசுந்தரம்
கோட்டக்கல்விப்பணிப்பாளர், சங்கானைக்கல்விக்கோட்டம்.

## சமூகத்திற்கு ஓர் ஏணியாகத் திகழ்ந்தவர்

திருவாளர் க.இரத்தினேஸ்வரன் அவர்கள்"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கணமாக அமைந்து நல்லாசிரியனாய் பணிசெய்து அதிபராய் பதவியுயர்வு பெற்று மாணவ சமுதாயத்தின் உயர்ச்சிக்கு வழிவகுத்தவர். வழிகாட்டிய உத்தமர்.

மாணவர்களின் மனஇருள் நீக்கி அறிவொளியூட்டியவர். அன்பாலும் பண்பாலும் அரவணைப்பாலும் சமூகத்தைப் பாடசாலையுடன் இணைத்து வலுவூட்டி அதனைப் பௌதிக வசதிகளாலும் கல்வி அடைவாலும் உயர்வடையச்செய்து கல்விப் புலத்தில் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ அயராது உழைத்தவர். இவர் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ வாழ்த்துகின்றேன்.

சி.மாதவகுமாரன்
ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை,வலிகாமம், மருதனார்மடம்.


SHARP
be sharp



SHARP SF-1118
அச்சுப் பிரதி இயந்திரம்

அதி சிறப்புடன் அமைந்த செயற்பாடு...



SHARP SF–1118 பிரதி இயந்திரம் முன்னணி மிக்கSHARP தொழினுட்பத்துடனும், நீங்கள் எதிர் பார்க்கும் அதி சிறந்த செயற்பாட்டுடனும் உங்களிடத்திற்கு வருகிறது.

- நிமிடத்திற்கு 18 பிரதிகள்
- இரண்டு வழிகளில் தாள் செலுத்தும் வசதி
- பயன்படுத்தக்கூடிய தாளின் அளவுகள் A3-A5
- உண்மையான பத்திரத்தை போன்ற பிரதி

ஏக முகவர்
அலுவலக இயந்திரங்கள்
பிரவுன் அன்ட் கம்பனி லிமிட்டெட்

உடனடி அழைப்புகளுக்கு: டிலோரன்ஸ்-0777-570205

யாழ்ப்பாண கிளை :இல.89,ஸ்டான்லி வீதி,யாழ்ப்பாணம். தொ:பேசி : 021-2225150 மட்டக்களப்பு கிளை :இல.42/1 திருகோணமலை வீதி,மட்டக்களப்பு. தொ:பேசி : 065-2226385

வவுனியா கிளை :இல.8 முதலாம் குறுக்குத்தெரு,வவுனியா. தொ:பேசி : 024-2220081 அம்பாறை கிளை :பிரவுன்ஸ் சந்தி, அம்பாறை தொ:பேசி : 063-2224633

Tradlanka Advertising

# இலங்கைத்தீவு ஆரியருக்குச் சொந்தமானதல்ல திராவிட இனத்தவரான தமிழர்களுக்கே உரியது

## தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்

ஸ்ரீலங்காவின் அரச பௌத்த சாசனமான மகா வம்சம் கூறுவது போல், இலங்கைத் தீவு ஆரியருக்குச் சொந்தமானது அல்ல. மாறாக ஆதிக் குடிகளாகிய திராவிட இனத்தவர்களான தமிழர்களுக்கே இந்த இலங்கைத் தீவு சொந்தமானது. விஜயன் வழி வந்தவர்களே இந்த ஆரியர்கள்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன்.

தமிழீழ வரலாற்றுத் தேர்வில் சித்தியெய்திய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி ம.வியில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பேசும் போதே கல்விக்கழகப் பொறுப்பாளர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா அரசானது திட்டமிட்டு வரலாறுகளை திரிவுபடுத்துவதுடன் தமிழ்ப் பாடநூல்களைத் தமக்குச் சாதகமாகப் பல தவறுகளுடன் அச்சிட்டு தமிழ் மாணவர்களுக்கு அதனை வழங்கி வருகிறது. இந்த நிலையில் உண்மை வரலாறுகளை தெரிந்துகொள்ள முடியாத சூழல தமிழ் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே தமிழ் மாணவர்களின் நிலையினைக் கருத்திற்கொண்டு அவர்கள் உண்மை வரலாற்றைத் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் தமிழ் உயர் கல்வியியலாளர்களின் உதவியுடன் தமிழீழ கல்விக்கழகம் பல வரலாற்று நூல்களை உண்மையான வரலாற்றுடன் அச்சிட்டு மாணவர்களுக்கு வழங்கிவருகிறது.

ஸ்ரீலங்கா அரசு அன்றில் இருந்து இன்று வரை தமிழ் மாணவர்களைப் புறக்கணித்துச் செயற்பட்டுவருவதுடன், வடக்கு - கிழக்கு மாணவர்களின் கல்வி நிலையிலும் அசமந்தப் போக்கையே காட்டிவருகின்றது. அந்த நிலை இன்றைய சமாதானச் சூழ்நிலையிலும் வடக்கு - கிழக்கில் அரசினால் கடைப்பிடிக்கப்பட்டு வருவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

தமிழ்ப் பாடசாலைகளுக்கென அரசின் பணிப்பிற்கிணங்க கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்படும் புத்தகங்களில் பல வரலாற்று உண்மைகள் திரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் நிறைய எழுத்துப் பிழைகளுடனும் அந்தப் புத்தகங்கள் மாணவர்களின் கைகளை வந்து சேர்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு எழுத்துப்பிழைகள், கருத்துப் பிழைகள் மலிந்த வரலாற்றுப் பாடப் புத்தகங்களை தமிழ மாணவர்களுக்கு அரசு திட்டமிட்டு அச்சிட்டு வழங்கிவருகிறது. இவ்வாறான புத்தகங்கள் மாணவர்களை சென்றடையாமல் தடுப்பது பற்றியும் நாம் சிந்திக்கவேண்டியுள்ளது.

இலங்கைத் தீவு ஆரியர்களுக்கு சொந்தமானது அல்ல என்ற உண்மை தமிழ் மாணவர்களுக்கு விளங்கப்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர்கள் வரலாற்றின் உண்மைகளை மாணவர்களுக்கு தெளிவுபடுத்துவதுடன், நூல்களிலே காணப்படும் பிழைகளை மாணவர்களுக்கு சுட்டிக்காட்டி உண்மைத் தன்மைகளையும் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும் - என்றார்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் ஏற்றிவைக்க, ஜோசப் அடிகளார் கல்விக்கழகக் கொடியினை ஏற்றிவைத்தார். அரங்க நிகழவில் வாழ்த்துரைகளை தமிழீழத் தேர்வு ஆணையாளர் க.சரவணபவான், முல்லைத்தீவு வலயக கல்விப் பணிப்பாளர் அ.அரியரட்ணம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் ஆகியோர் நிகழ்த்தி மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தனர்.

இதில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உயர் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

(எ)





தமிழீழ வரலாற்றுத் தேர்வுப் பரிசளிப்பில் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் உரைநிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட கல்வி மேம்பாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் கல்வித் திணைக்கள அலுவலர்களை இரண்டாவது படத்திலும், தேர்வில் சித்தி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்கப்படுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# மூலிகை உற்பத்தியாளர் சங்கம் முல்லைத்தீவில் அங்குரார்ப்பணம்

முல்லைத்தீவு,மே 9

முல்லைத்தீவு மாவட்டத்தில் மூலிகை உற்பத்தியை விருத்திசெய்யும் நோக்கில் தமிழீழ சுகாதாரப் பிரிவினால் முல்லை மாவட்ட மூலிகை உற்பத்தியாளர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

மூலிகைச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்தல் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை முல்லை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் இடம்பெற்றது.

தமிழீழ சுகாதார வைத்திய அதிகாரி விக்கிரமன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, முல்லை மாவட்டத்திலுள்ள சுதேச வைத்தியர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த மூலிகைச் சங்கத்தின் தலைவராக க.வன்னியசிங்கமும், செயலாளராக எஸ்.சுந்தரமூர்த்தியும், உபதலைவராக எஸ்வடிவேலும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் எஸ். பத்மநாதன், சிவலட்சுமி, செல்வி யசோதா மற்றும் செல்வி சுஜீபா ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

(எ-410)

# தமிழீழ பொருண்மியத்தின் மேம்பாட்டுக்கென ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டது

பரந்தன்,மே 9

தமிழீழத்தில் பொருண்மியம் தன்னிறைவாக மேம்பாடடைந்த நிலையில் இருப்பதற்கு வழிசெய்யும் வகையில், ஆலோசனைக்குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நடுவப்பணியகக் கேட்போர் கூடத்தில் நடைபெறறது.

இதில் பொருண்மிய நிறுவனத்தின் தேசியக் கொள்கைத் திட்டமிடல் குறித்து ஆராயப்பட்டது. யாழ். பல்கலைக்கழக விவசாயப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் இராசதுரை, பேராசிரியர் நவரட்ணராஜா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபதி.இராசநாயகம், மாவட்டப் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.தயா, குணரட்ணசிங்கம், பூநகரி பிரதேச செயலர் எஸ்.சிறீஸ்கந்தகுமார், சிரேஷ்ட விரிவுரையாளர் மகிந்தன் ஆகியோர் அடங்கிய ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், நிறுவனத்துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணா, நிறுவன நிதிப் பொறுப்பாளர் பொ.இந்திரன், நிறுவனத்திட்டமிடல் அலுவலர் சி.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(எ-352-204)




# கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 700 பேருக்கு அ.அட்டைகள்

ஆழிப்பேரலை காரணமாக ஆள் அடையாள அட்டைகளை இழந்த கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஆயிரத்து 700 பேருக்கான அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேற்படிப் பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த 2 ஆயிரத்து 200 பேர் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்திருந்தனர் என்றும் - இவர்களில் ஒரு தொகுதியினருக்கான அடையாள அட்டைகள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளன என்றும்- கண்டாவளைப் பிரதேச செயலர் சீ.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தேசிய ஆள்பதிவுத் திணைக்களத்தினர் கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்கு வருகைதந்து ஆள் அடையாள அட்டைகள் தொலைந்தவர்களுக்கான விண்ணப்பங்கள் மற்றும் புதிதாக அடையாள அட்டைகளைப் பெறவுள்ளவர்களுக்கான விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றிருந்தனர்.

தற்போது கிடைக்கப் பெற்றுள்ள அடையாள அட்டைகளை கிராம சேவகர்களின் உதவியுடன் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு உரியவர்களுக்கு வழங்கப்படும் - என்றார்.

(எ-352-203)




# முல்லைத்தீவு - முகமாலை இடையிலான பஸ் சேவைக்குப் புதிய நேர அட்டவணை

## நாளை முதல் நடைமுறைக்கு வருகிறது

கிளிநொச்சி,மே 9

தமிழீழப் போக்குவரத்துக் கழகம் முகமாலையில் இருந்து முல்லைத்தீவிற்கும் - முல்லைத்தீவிலிருந்து முகமாலைக்கும் இடையிலான பஸ் சேவைக்கான புதிய நேர அட்டவணையைத் தயாரித்துள்ளனர்.

இந்தப் புதிய நேர அட்டவணை நாளை செவ்வாய்க்கிழமையிலிருந்து நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நேர அட்டவணை வருமாறு:-

முல்லைத்தீவிலிருந்து முறையே காலை 5.30, 6.00, 7.00, 7.30, 8.00, 8.30, 9.00 மற்றும் முற்பகல் 9.30, 10.00, 10.30, 11.00, 11.30, 12.00, 12.45 மணிக்கு பஸ்கள் புறப்படும். இவை முறையே 8.40, 9.10, 10.10, 10.40, 11.10, 11.40, 12.10, 12.40, 1.10, 1.40, 2.10, 2.40, 3.10, 4.00 மணி ஆகிய நேரங்களில் முகமாலையை வந்தடையும்.

இதேவேளை - முகமாலையிலிருந்து தினமும் காலை 8.30, 9.00, 9.30, முற்பகல் 10.00, 10,30, 11.00, 11.30, 12.30, 1.00, 1.30, 2.15, 3.00, 4.15, 5.30 மணிக்கு பஸ்கள் முல்லைத்தீவு நோக்கிப்புறப்படும்.

இவை முறையே 11.45, 12.15, 12.45, 1.15, 1.45, 2.15, 2.45, 3.45, 4.15, 4.45, 5.30, 6.15, 7.30, 8.45 மணிக்கு முல்லைத்தீவைச் சென்றடையும்.

மேற்படி புதிய நேர அட்டவணை அரச அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-203)

# விசுவமடு - சுண்டிக்குளம் வீதி போராளிகளின் உதவியுடன் புனரமைப்பு

பரந்தன்,மே 9

விசுவமடுச் சந்தியிலிருந்து சுண்டிக்குளம் செல்லும் வீதி பொதுமக்கள், போராளிகளின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வீதியைப் புனரமைப்புச் செய்து தருவதாக சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் வாக்குறுதியளித்திருந்தனர் என்றும் - எனினும் தாம் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற குறித்த திணைக்களம் தவறிவிட்டது என்றும் கூறப்பட்டது.

இதனால் விசனமடைந்த மக்கள் போராளிகளுடன் இணைந்து சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வீதிப்புனரமைப்பில் இறங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட வீதியால் பயணம் செய்பவர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட நிதியே வீதிப் புனரமைப்புப் பணிக்குப் பயன்படுத்தப்பட்டது எனக்கூறப்பட்டது.

(எ-352-203)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ஐஸ்கிறீம் வான்கள், ஐஸ்கிறீம், ஐஸ்பழம் முதலியவை தயாரிக்கும் இயந்திரங்கள் (Bபாத்), குளிர்சாதனப் பெட்டி (டிப்பிறிச்), மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) போன்றவை விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 021 226 3325, 0777 515035. (45105)

நல்ல நிலையில் உள்ள 11ஶ்ரீXXX தொடர் இலக்கமுடைய "கொறலா E50" கார் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0777 519440. (45120)

வீட்டுத் தளபாடங்கள், கராஜ் நடத்துவதற்கு ஏற்ற ஆயுதங்கள் ROLLERJACK, JACKS, STAND மற்றும் சைக்கிள் (றலி) என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு: க.சுந்தரலிங்கம் (மெக்கானிக்), 137/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (45141)

## தவறிவிட்டது

தருமலிங்கம் புஸ்பராஜ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (832054232V) கடந்த 20-04-2005 மானிப்பாய் லக்கி கிறீம் ஹவுஸ்"க்கும் மருதடி விநாயகர் ஆலயத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முருகன் பொன்னம்மா, நவாலி தெற்கு, அரசடி வீதி, மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (45098)

பரமசிவம் கமலா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (635301490V) முகமாலைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் 06-05-2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கமலா, தியேட்டரடி, சங்கானை. T.P.: 0776102527 எனற முகவரியில் தொடர்புகொள்ளவும். (45107)

37/44, அநுராதபுர றோட், புத்தளம் என்ற முகவரியையுடைய இராஜமூர்த்தி மதன்ராஜ் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 863090806) முகமாலைக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. தயது செய்து கண்டெடுத்தவர்கள் இராசமூர்த்தி, ஸ்ரேசன் றோட், கோண்டாவில் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (45132)

NPGQ 9442 மோட்டார் சைக்கிளுக்குரிய அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம் ஆகியன யாழ. நகருக்கும் கொழும்புத்துறைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 077 6176644, 077 - 617684, 0777 - 114180 தொடர்புகொள்ளவும். (45147)

## வீடு விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, அத்தியடியில் வீடும் வீட்டிற்குத் தேவையான தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சுந்தரலிங்கம் (மெக்கானிக்), 137/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (தரகர் தேவையில்லை). (45140)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் தொழில்புரியும், 39 வயது, ஆங்கில உயர்நிலைப் பட்டதாரிக்கு M.A.(Eng.Lit), 29-33 வயதிற்கு உட்பட்ட, படித்த மணப்பெண் வேண்டும். 7இல் செவ்வாய், சத்யம், உயரம் 5'7" ஜாதகம், சீதனம் முக்கியம் இல்லை. தொடர்பு: தங்கமணி சின்னையாபிள்ளை, கேணியடி வீதி, மீசாலை மேற்கு. T.P.077 9084848, 0776102559. (45014)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்.போன்சொப்**

10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம.

## கோழி விற்பனைக்கு

சொந்தப் பண்ணை வளர்ப்புக்கென பராமரிக்கப்பட்டதும் 50 நாள் வளர்ச்சி கொண்டதுமான "பிறிமா" முட்டை இடும் இனக்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஞான அபிராமி, "அபிராமி மகால்", அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. தொலைபேசி: 021 2263403. (45103)

## தேவை

வடமராட்சியில் பிரதான வீதிக்கு அண்மையில் கடை அமைப்பதற்குரிய நிலம் தேவை. நிலம் விற்க விரும்புபவர்கள் 021 226 3325, 0777 515035 என்னும் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்புகொள்ளவும். (45106)

**வாழிக்கையாளர்களே...**

பாஸ்போட், அடையாள அட்டை படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்து பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

**மூர்த்தி ஸ்ருடியோ அன் டிஜிற்ல் கலர் லாப்**

வ/ப. ஸ்ரான்லி வீதி. (பழைய தபால் கந்தோர் ஒழுங்கை.) யாழ்ப்பாணம். 0714168475

யாழ். வீதி. மானிப்பாய். T.P: 021-222 2884

E.mail: moorthylazer@yahoo.com

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே9

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9மணிக்கு கல்லூரியின் அமரர் சிவபாதசுந்தரம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முன்னாள் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினத்திற்கு சேவைநலன் பாராட்டும் புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவிற்கு வரவேற்பும் நடத்தப்படவுள்ளது.

பொதுக்கூட்டம் தொடர்பான பிரேரணைகள் இருப்பின் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னதாகச் சங்கச் செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ப-203)

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக!



**லண்டன் மாநகரிலிருந்து**
**யாழ். – திருநெல்வேலி**
**ஸ்ரீ பத்திரகாளி**
**அம்மனுக்குப் பாமாலை**
**'சிற்பிகள் நாயகி பாமாலை' – பாகம் I**

## இசைத்தட்டு வெளியீட்டு விழா

காலம் :09–05–2005 திங்கட்கிழமை [இன்று]
நேரம்: பிற்பகல் 3.30 மணி
இடம்: ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயம், திருநெல்வேலி.

பாடல் - ஆக்கம் - தயாரிப்பு: திரு.சண்முகம் சண்முகபாலன் (பொறியியலாளர் - லண்டன்)
வெளியீடு: சுவாதி ஓடியோ – இங்கிலாந்து
மங்கல விளக்கேற்றல்: சிவஸ்ரீ க.மகாகணபதீஸ்வரக் குருக்கள் (தேவஸ்தான பிரதம குருக்கள்)
வரவேற்பும் தலைமையுரையும்: திரு.இரத்தினம் நித்தியானந்தன் (கலாசார உத்தியோகத்தர்)
சிறப்புரை: திரு.இரத்தினம் அச்சுதபாகன் (பொருளாளர், அ.இ.விஷ்வகுல சங்கம்)
வெளியீடும், வெளியீட்டுரையும்: திரு.சண்முகம் சண்முகபாலன் (பொறியியலாளர், லண்டன்)
மதிப்பீட்டுரை: பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா (தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்).
நன்றியுரை: செல்வன் தர்மகுமார் அருண்குமார் (யாழ்.இந்துக் கல்லூரி மாணவன்)
முதற்பிரதி பெறுபவர்: திரு.வல்லிபுரம் செல்லத்துரை (பரிபாலனசபைத் தலைவர்)
சிறப்புப் பிரதிகள் வழங்கல்:

இசைத்தட்டு வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'சுவாதி இல்லம்',
அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு.
யாழ்ப்பாணம். (சி-42738)(26-14-17)

திரு.திருமதி சண்முகம் சண்முகபாலன்,
குடும்பத்தினர்.

---

## இன்று முதல்

**வர்த்தகப் பெருமக்களே!**
**ஆசிரியப் பெருந்தகைகளே!**
**மாணவ மணிகளே!**

**மாபெரும் மலிவு விற்பனை**

பாலர் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரையான பாடப்புத்தகங்களுக்கு 20% – 50% வரையான கழிவும் உபகரணங்களுக்கு 10% கழிவும் இந்தியப் புத்தகங்களுக்கு 20% கழிவும் வழங்கப்படும்.

**இச்சலுகை ஜூன் 9 வரை மட்டுமே.**

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 5542

(சி-427739) (46-14-45-26)

---

## ஆறாம் மாத ஆறாத கண்ணீரஞ்சலி

தாயின் மடியில் 25 - 12 - 1953



இறைவன் அடியில் 10 - 11 - 2004

காலஞ்சென்ற நடராஜா - அன்னபாக்கியம் தம்பதிகளின் அருமைப் புதல்வி

### திருமதி கமலினி குகதாசன்

அன்னையைப்போல் அன்பு காட்டிய எங்கள்
அன்புச் சகோதரியே! எமைவிட்டு நீங்கள்
மறைந்து ஆறுமாதங்கள் ஓடிவிட்டனவா?
எத்தனை காலம் சென்றாலும் எங்கள் மனம் ஆறாது!
என்றென்றும் எங்கள் மனதில் வாழ்ந்து
கொண்டே இருப்பீர்கள்! எங்கள் மனங்களில்
இருந்து உங்களை நீக்க முடியாது...

உங்கள் ஆத்மா சாந்தியடைய நயினை அம்பாளை வேண்டி நிற்கும்:

உங்கள் அன்பு மறவாத லிபியாவில் இருந்து கண்ணீருடன உங்கள் தம்பி மற்றும் மச்சாள், பிள்ளைகள் மற்றும் அக்கா குடும்பத்தினர், தம்பி குடும்பத்தினர், தங்கை வசந்தி, கண்ணீருடன் ஜேர்மனியில் இருந்து அன்புத் தங்கை சுபி குடும்பத்தினர்.

ந.சாந்தகுமார்,
அரசடி லேன்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(45110) (26-14-17)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 09 - 08 - 1939



மறைவு 09 - 04 - 2005

### திருமதி மரியமலர் மலக்கியாஸ்

சூரியனாய் உமது குடும்பத்திற்கும் மக்களுக்கும்
ஒளியேற்றி வழிகாட்டி நின்றீர்
தென்றலாய் எல்லோரையும் அரவணைத்து நின்றீர்
நொடிப்பொழுதில் எங்கு சென்றீரோ?
திக் என்று மனம் பதைத்ததம்மா!
கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
அலறி, பதறி துடித்தனரம்மா
விதியின் வசம் இறைவனிடம் சென்றீர் என்று மனதை ஆறுதல்
படுத்துகின்றோம் தாயே! முப்பத்தொராம் நாள் உம்மை நினைதது
இறைவனிடம் உமது ஆத்மா சாந்தியடைய
தினமும் மன்றாடுகின்றோம் அம்மா!

யோ.கிறிஸ்ரியன்
(குடும்பம்).

யாழ்ப்பாணம். (45118)(16-14-17-26)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



274, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

திருமதி

### கமலாம்பிகை ஆறுமுகம்தம்பி

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை)

தோற்றம் 23 - 05 - 1921 | மறைவு 09 - 05 - 2002

"அம்மா!
அணைந்தும் அணையாத தீபமே!
எம் நெஞ்சில் அணையாதிருந்து
வழி நடத்தும் உம்மை
மறவோம் நாம்
மூன்றாம் வருட நினைவு நாளில்.."

உங்கள் நினைவுடன்,
ராகுலன் (அம்பி - Swiss),
கங்காதரன் ராகினி (அம்மணி).

(45119)(46-26-14-17)

# சுன்னாகம் பரிவர்த்தனை நிலையம் ஒன்பது மாதகாலத்தினுள் இயங்கும்

## 'கோப்' திட்டப்பணிப்பாளர் குசும் ஜெயதிலக தகவல்

வலி.வடக்கு,மே9

யாழ்.ரெலிக்கொம் நிறுவனத்தின் சுன்னாகம் பிரதேச பரிவர்த்தனை நிலையம் இன்னும் 9 மாத காலத்திற்குள் இயங்க ஆரம்பிக்கும்



கலந்துகொண்ட ரெலிக்கொம் அதிகாரிகள்.

(படங்கள்: நேசன்

என்று சுன்னாகம் பரிவர்த்தனை நிலைய 'கோப்' திட்டப் பொறுப்பாளர் திருமதி குசும் ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சுன்னாகம் பரிவர்த்தனை நிலைய அங்குரார்ப்பண நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

சுன்னாகம் பரிவர்த்தனை நிலையுத்தின் சுற்றாடலில் - 6 கிலோ மீற்றருக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கம் 2 ஆயிரம் பேருக்கு முதற்கட்டமாக தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படும்.

பின்னர் வேலைகள் அனைத்தும் பூர்த்தியடைந்ததும் மேலும் 2 ஆயிரத்து 500 பேருக்கு இணைப்பு வழங்கப்படும்.

தொலைபேசி இணைப்புகளைப் பொருத்தும் கேபிள்களுக்கு மட்டும் 250 மில லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய தேவைகளுக்கான நிதி இதற்குப் புறம்பாக ஒதுக்கப்பட்டுள்ளது.

கட்டங்கட்டமாக வேலைகள் பூர்த்தியடையத் தொலைபேசி இணைப்புகள் தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

இதற்கான உப பரிவர்த்தனை நிலையங்கள், உடுவில் பிரதேசத்திற்கானது- மானிப்பாய் கிறீன் தனியார் வைத்தியசாலைப் பகுதியிலும், உரும்பிராய்ப் பகுதிக்கு - மருதனார் மடம் பகுதியிலும், மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டிப் பகுதிகளுக்கு சுன்னாகம் பிரதான பரிவர்த்தனை நிலையத்திற்கு அருகிலும் அமைக்கப்படவுள்ளன - என்றார்.

இந்நிகழ்வில், வடபிராந்திய ரெலிக்கொம் நிறுவனத்தலைவர் வி.யோககேந்திரன், பிராந்



கோப் திட்டப்பணிப்பாளர் தேங்காய் உடைத்து நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றார்.

திய முகாமையாளர் எஸ்.சரவணபவன், வெளிக்களப் பரிபாலன முகாமையாளர் எஸ்.அன்ரனி ராஜன், வடமாகாண பரிவர்த்தனைப் பொறுப்பாளர் பொறியியலாளர் எஸ்.சிவானந்தன், வட பகுதித் தகவல் பரிமாற்றத்திட்டப் பொறியியலாளர் நா.நவநீதன், வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் கெ.சிறீனிவாசன், சீரா பிரதானவலை அமைப்புத்திட்ட முகாமையாளர் எஸ்.பாலேந்திரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-86-203)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே9

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் பஞ்சகுண்டப்பட்ஷ மகா சகஸ்த்திர சங்காபிஷேகமும் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

முற்பகல் 10 மணிக்கு அம்பிகைக்கு 1008 சங்குகளால் அபிஷேகம் நடைபெற்றுத் தொடர்ந்து விசேட தீபாராதனை, நவசக்தி அர்ச்சனை என்பன நடைபெற்று அம்பாள் வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும்.

தொடர்ந்து அம்பாளின் திருவூஞ்சல் பாட்டு நிகழ்வும் கும்பாபிஷேக மலர் வெளியீடும் இடம்பெறும்.

பிரதமகுரு சிவஸ்ரீ க.வீரபத்திரக்குருக்கள் மலரை வெளியிட்டுவைக்க மலர் வெளியீட்டுரையை அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தைச் சேர்ந்தவரான அருட்கவி கலாநிதி சீ.விநாசித்தம்பி நிகழ்த்துவார். (எ-203)

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய கும்பாபிஷேக மண்டல மஞ்சன பூர்த்தி தின பஞ்சகுண்டபஷ நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு நவிண்டில் குலனையம்பதி விநாயகர் ஆலயத்திலிருந்து உறுமி மேள உடுக்கு இசையுடன் ஆனந்தக் காவடி ஆரம்பமாகும்.

தொடர்ந்து 7 மணிக்கு சுப்பிரமணியப் பெருமானுக்கு 1009 சங்காபிஷேகமும் ஐந்து பரிவார மூர்த்திகளுக்கும் ஸ்தாபன அபிஷேகமும் விசேட பூசையும் இடம்பெறும்.

மாலை 4 மணிக்கு திருக்கல்யாண வைவபமும இரவு 8 மணிக்கு தவில் நாதஸ்வர இசைக் கச்சேரியும் இடம்பெறும். (எ-203)

## பாணுக்குள் பல்லி

யாழ்ப்பாணம்,மே9

காலை உணவிற்கென வாங்கிய பாணுக்குள் பல்லி ஒன்று இறந்த நிலையில் காணப்பட்டது.

யாழ்.கச்சேரி கிழக்கு, அரியாலைப் பகுதியில் இயங்கும் வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்றுக்காலை வாங்கிய பாணில் இறந்த நிலையில் பல்லி காணப்பட்டுள்ளது.

பாணுக்குள் பல்லியைக் கண்டவர்கள் அச்சம் காரணமாக மருத்துவ உதவியை நாடியுள்ளனர்.

இது விடயமாக பாணை வாங்கியவர் வர்த்தக நிலைய உரிமையாளரிடம் சென்று முறையிட்டுள்ளார். இதற்கு வர்த்தக நிலைய உரிமையாளர்.

கச்சேரி கிழக்கு, அரியாலை பகுதிக்குச் சமீபமாகவுள்ள பேக்கறி ஒன்று இந்தப் பாணை விற்பனைக்கென தமக்கு வழங்கியது என்று தெரிவித்தார். - எனக்கூறப்பட்டது. (எ)

# ஆஸ்பத்திரியில் விபத்துச் சிகிச்சைப் பிரிவை உடனடியாக அமைக்குமாறு வேண்டுகோள்!

யாழ்ப்பாணம்,மே9

யாழ்.போதனா வைத்தியசாலையில் விபத்துச் சேவைப் பிரிவு ஒன்றைத் தனியாக ஆரம்பிக்கவேண்டும்.

- இவ்வாறு வைத்தியசாலை நிர்வாகம் யாழ்.அரச அதிபரிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

கடந்த 4 ஆம் திகதி யாழ்.செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் இடம்பெற்ற வீதிவிபத்துத் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

குடாநாட்டில் வீதிவிபத்துக்கள் அதிகரித்த வண்ணமுள்ளன. இந்த நிலையில் விபத்துக்குள்ளாகுவோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்குரிய சிகிச்சைகளை உரியமுறையில் உரியநேரத்தில் மேற்கொள்ளமுடியாமல் உள்ளது.

விபத்தில் சிக்கிய ஒருவரை வெளிநோயாளர் பிரிவிலுள்ள வைத்தியர் பார்வையிட்டதன் பின்னரே அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்படுகின்றார். வெளிநோயாளர் பிரிவுக்கும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கும் இடையே நீண்டதூர இடைவெளி காணப்படுகின்றது.

இதனால், விபத்துக்குள்ளாகின்றவர்கள் இரத்தத்தை அதிகமாக இழக்க நேரிடுகின்றது.

இதனைத் தடுக்கும் விதத்தில் விபத்துச் சேவைக்கென உடனடியாக சிகிச்சை நிலையமொன்று வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு அண்மையில் அமைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு அமைக்கப்படும் பட்சத்தில் விபத்துச் சம்பவத்தில் காயப்படும் நபருக்கு உடனடிச் சிகிச்சையை உரியநேரத்தில் மேற்கொண்டு பின்னர் 24 ஆம் விடுதிக்கு (வார்ட்) அவரை அனுமதிக்கமுடியும்.

விபத்துச் சேவை அமைக்கப்படும் பட்சத்தில் அதில் எக்ஸ்ரே கருவிகள், இரத்த வழங்கிக் கருவிகள் போன்ற சகல வசதிகளும் பொருத்தப்பட்டிருக்கவேண்டும்.

- இவ்வாறு அங்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-13)

# பட்டதாரி பயிலுநர் நிரந்தர நியமனத்துக்கு பரீட்சையை விட ஆண்டு மூப்பே பொருத்தம்

நாடளாவிய ரீதியில் 41 ஆயிரம் பட்டதாரி பயிலுநர்களுக்கு பல்வெறு பதவிப் பெயர்களில் நிரந்தர நியமனம் 1-6-2005 முதல் வழங்கப்படவுள்ளது.

நியமனங்களுக்கான நடவடிக்கைகளை மாகாண அரச சேவை ஆணைக்கு (PPSC) மற்றும் சகல அமைச்சுகளும் துரித கதியில் மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் 20 ஆயிரம் பட்டதாரி பயிலுநர்கள் ஆசிரியர் சேவையில் 3-I இல் நேரடியாக பரீட்சை மூலம் உள்வாங்கப்படவுள்ளனர்.

ஏனையோர் மாகாண அரச சேவைகளுக்கு கீழ் உள்ள அரச திணைக்களங்களுக்குள்ளும் அமைச்சுகளுக்கு (ministries) கீழ்வரும் அரச திணைக்களங்களுக்குள்ளும் நிர்வாகம் மற்றும் திட்டமிடல் துறைகளில் நியமனம் பெறவுள்ளனர்.

இதில் வடக்கு-கிழக்கு மாகாண பட்டதாரி பயிலுநர்களின் நிலை பல்வேறுபட்ட நியமன ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டுவரவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண அரச சேவை ஆணைக்குழு 22 துறைகளில் பட்டதாரி பயிலுநர்களை நிர்வாகம் மற்றும் திட்டமிடல் துறைகளில் ஆளணி வெற்றிடங்களை உருவாக்கி நியமனம் வழங்கவுள்ளது.

இதில் வடக்கு - கிழக்கில் உள்ள பட்டதாரி பயிலுநர் ஒருவர் ஒன்று முதல் 3 வரையிலான பதவிகளுக்கு விண்ணப்பம் செய்துள்ளனர்.

1997, 1998 இல் பட்டம்பெற்றவர்கள் முதல் 2005 இல் பட்டம் பெற்றவர்கள்வரை விண்ணப்பம் செய்துள்ளனர்.

இவர்களை விட கீழ் உழைப்பில் உள்ள பட்டதாரிகளும் (under employment) மேற்படி பதவிகளில் தங்களையும் உள்வாங்கக்கோரி விண்ணப்பம் செய்துள்ளனர்.

இதனைவிட மேலாக பட்டதாரி பயில்நர் திட்டத்திலும், கீழ் உழைப்பிலும் உள்வாங்கப்படாத பூச்சிய வேலையற்ற பட்டதாரிகளும் (zero unemployment) உள்ளனர்.

மேற்படி மூன்று வகுதிகளிலும் உள்ளவர்கள் பட்டதாரி நியமனத்திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டால் மட்டுமே அவர்களால் நிலைத்திருக்க கூடிய (Sustainable Development) பேண்தகு நிலையை எதிர்காலத்தில் அடையலாம்.

ஆனால், சகல அமைச்சுக்களும் சகல பட்டதாரிகளை நியமனம் செய்வதற்கான ஆட்சேர்ப்பு விளம்பரங்களை பத்திரிகை வாயிலாக வெளியிட்டிருந்தன. இதற்கு அமைவாக 41 ஆயிரம் பட்டதாரி பயிலுநர்களும் சகல அமைச்சுக்களுக்கும் பல்வேறு பதவிகளுக்கு (varies Jobs) விண்ணப்பித்துள்ளனர்.

ஆனால், ஒவ்வொரு அமைச்சுக்களும் ஆகக்கூடியது 100 முதல் 150 வரையிலான பதவி வெற்றிடங்களுக்கே ஆள்களை தெரிவு செய்து பட்டதாரி ஆள்சேர்ப்பு வேதனத் திட்டத்தில் உள்வாங்கவுள்ளன.

இந்த நிலையில் சகல பட்டதாரிகளையும் உள்வாங்கும் முழுப்பொறுப்பினையும் மாகாண அரச சேவை ஆணைக்குழுவே (NEP) பொறுப்பேற்று வேலை வழங்கவேண்டும்.

மேலும் மேலதிகமாகவுள்ள ஆளணி வெற்றிடங்களுக்கு ஏற்ப கீழ் உழைப்பில் உள்ள பட்டதாரிகளையும் உள்வாங்கவேண்டும்.

1999 இல் 10 ஆயிரம் பட்டதாரி ஆள்சேர்ப்பு திட்டத்திற்கு கீழ் பயிலுநர்களாக உள்வாங்கப்பட்டவர்களுக்கு அந்தந்தத் துறைகளில் நிபுணத்துவம் சம்பந்தமான பரீட்சை நடத்தப்பட்டே நிரந்தர பதவிகளில் உள்வாங்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், 10ஆயிரம் பட்டதாரி பயிலுநர்களும் ஒரே நேரத்தில் அரசுக்கு எதிராக எழுப்பிய கோஷத்தை அடுத்து பரீட்சை நடத்தப்படாது. மாகாண பொதுநிர்வாக அமைச்சு செயலாளரினால் நேர்முகப் பரீட்சை (Interview) நடத்தப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

நிரந்தர நியமனம் வழங்கும் பட்டங்களின் தன்மை வகுப்பு, பட்டம் பெற்ற மொழி, பட்டப்பின் டிப்ளோமா, ஆங்கிலத்தில் உள்ள அதியுயர் சித்தி, கணனி அறிவு, மொழியாற்றல் பட்டத்தின் ஆண்டு மூப்பு என்பன கவனத்தில் கொள்ளப்பட்டன.

அதேபோன்று இன்றும் 1997 இல் பட்டம் பெற்றவர்கள் முதல் 2005 இல் பட்டம் பெற்று சான்றிதழ் உள்ளவர்களும் வேலையற்ற பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

எனவே, மாகாண அரச பொதுச்சேவை ஆணைக்குழு அதிகாரிகள் ஒரு விடயத்தில் மட்டும் பொறுப்பான கடப்பாடு உடையவர்களாக இருந்தால் நடைபெறப்போகும் நியமனத்தில் எவ்வித சிக்கல் தன்மையும் ஏற்படாது.

அதாவது 'ஆண்டு மூப்பின் அடிப்படையில்' நியமனம் வழங்குவது சாலச்சிறந்த ஒன்றாகும்.

மாகாண அரச சேவை ஆணைக்குழு (PPSC) ஆசிரியர் மற்றும் நிர்வாகத் திட்டமிடல் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கு 250 ரூபா கட்டணத்துடன் 'நுண்ணறிவு' பரீட்சை மூலம் ஆள்சேர்ப்பு செய்யவுள்ளது என அறிவித்துள்ளது.

இந்த நடைமுறையானது பட்டதாரி ஆள் சேர்ப்பில் வினைத்திறனான செயலாற்றல் முறையாகக் கருதப்படமாட்டாது.

ஏனெனில், 1997 முதல் 2005 வரையான காலப்பகுதியில் பட்டம்பெற்றவர்களில் கலை, வர்த்தகம், கணனி, நுண்கலை, கணிதம், விஞ்ஞானம், பொறியியல் மற்றும் பட்டம்பெற்றவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

இந்தநிலையில் 'நுண்ணறிவு பரீட்சை' மட்டும் நடத்தி ஆள்தெரிவு இடம்பெற்றால் பட்டம்பெற்றவர்களில் ஒருசாரார் மட்டுமே இலகுவாக சித்தியடைந்து ஆள்தெரிவில் முதன்மை பெறுவர்.

எனவே, நுண்ணறிவுப் பரீட்சையை விடுத்து ஆண்டுமூப்பின் அடிப்படையில் (1997, 1998, 1999, 2000, 2001, 2002, 2003, 2004, 2005) நேர்முகப் பரீட்சை நடத்தி, பட்டத்தின் தன்மை, வகுப்பு. பட்டத்தின் மொழி, பட்டப்பின் டிப்ளோமா, ஆங்கிலத்தில் உள்ள அதியுயர் சித்தி, கணனி பட்டம், டிப்ளோமா, பயிலுநர் முன் பயிற்சி சான்றிதழ் ஏனைய தகைமைகள் அடிப்படையில் பரீட்சிக்கவேண்டும்.

இல்லாவிடில் நுண்ணறிவுப் பரீட்சையின் அடிப்படையில் ஆண்டு மூப்பும் ஏனைய தகுதி விதிகளையும் ஆளணி வெற்றிடங்களையும் கருதி ஆள்சேர்ப்பு செய்யவேண்டும்.

எது எவ்வாறாக இருந்த போதிலும் 41 ஆயிரம் பட்டதாரி திட்டத்தின் கீழ்சகல வேலை

**நவாலியூர்**
**செ.ரமேஷ் (எம்.ஏ)**

யற்ற பட்டதாரிகளும், பூச்சிய பட்டதாரிகளும் மற்றும் கீழ் உழைப்பு பட்டதாரிகளும் உள்வாங்கப்பட்டால் வடக்கு - கிழக்கு பிரதேச அரச நிர்வாகம் நிறைதொழில் (Full employment) மட்டத்தினை அடையும்.

இந்தச் சந்தர்ப்பத்தினை எமது பிரதம செயலாளரும் மாகாண அரச சேவை ஆணைக்குழு அதிகாரிகளும் மாகாண பொதுநிர்வாக அதிகாரிகளும் கைநழுவவிட்டால் எமது தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு அது பேரிடராக (Tricledown) மாறும்.

மேலும் புதிய வேலையற்ற பட்டதாரி சங்கங்களும், கீழ் உழைப்பு பட்டதாரி சங்கங்களும் மேலதிகமாக உருவாகாமல் இருக்க எமது பகுதி அரச இயந்திர உயர் அதிகாரிகள் பொறுப்புடன் செயலாற்றவேண்டும். ★

# இருவேறு விபத்துக்களில் இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,மே9

நேற்று இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்.நாச்சிமார் கோயில் பகுதியில் இடம்பெற்ற மினிபஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற கோண்டாவிலைச்சேர்ந்த வீ.பிரதீபன் (வயது-22) என்பவர் படுகாயமடைந்தார். இவரது வலது பக்க முழங்காலின் கீழ்ப்பகுதி சிதைவடைந்தது.

கோண்டாவிலில் வடக்குப்பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த சிறுவன் ஒருவனை அந்த வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த பதினொரு வயதுடைய குணரட்ணம் கபில் என்ற சிறுவன் தலைப் பகுதியில் படுகாயமடைந்துள்ளார். (எ-7)


## இதோ விற்பனைக்கு !

### புதிய தமிழ் Fonts CDகள்

நீங்கள் வழமையாக ரைப் செய்யும் முறையிலேயே (பாமினி கீபோட்) ரைப் செய்யமுடியும். சீடி யுடன் எழுத்துக்களின் வடிவங்கள் அடங்கிய புத்தகம் இலவசம்.

20.05.2005ம் திகதிவரை விஷேட விலைக்கழிவு வழங்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளுங்கள் 077 7703239

Nandas Creations — Innovating Solution In Graphics

# 450, K.K.S. Road, Jaffna.

கணனி இயக்குனர் தேவை

தகமைகள்: Adobe Photoshop, Adobe PageMaker, Corel DRAW

அனுபவங்களுடன் நேரில் வரவும்

நந்தாஸ் கிரியேசன்ஸ்

450, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



## பெண்கள் உடன் தேவை

தொலைத்தொடர்பு நிலையத்திலும் வீடியோ நிலையத்திலும் பணிபுரிவதற்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை. கணனி அறிவும் INTER NET,CD WRITING, CD RECORDING தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. பழக வேலை செய்பவர்களும் விண்ணப்பிக்கலாம். (முழு நேரம்).

★(பகுதி நேர வேலைக்கு ஆண்கள் தேவை. 6.00 p.m. To 10.00 p.m. NEW TIME) உடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

மொடேன் நெற்,

125, ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(45143)(46) (நல்லூர் பிரதேசசபை நூல் நிலையம் முன்பாக)



## மலேசியாவில் மேற்படிப்பினைத் தொடர அரிய வாய்ப்பு

★ Multimedia Design ★ Graphic Design
★ Information Technology ★ Interior Design

ஆகிய துறைகளில் மேற்படிப்பினைத் தொடர்வதற்கு மலேசியாவில் இயங்கிவரும் பிரபல கல்லூரியான SAITO COLLEGE யாழ். மாணவர்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்கான ஓர் அரிய வாய்ப்பினை வழங்க முன்வந்துள்ளது.

இக்கல்லூரியில் கல்வி பயின்ற பின்னர் U.K, Australia, New Zealand ஆகிய நாடுகளில் உள்ள பிரபல பல்கலைக்கழகங்களில் மேற்படிப்பினைத் தொடர்வதற்கான அனுமதியினை உடனடியாகவே இக்கல்லூரியானது பெற்றுத்தருகின்றது.

இது தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை நிகழ்த்துவதற்காக இக்கல்லூரியின் அதிபர் இங்கு வருகைதந்துள்ளார். அனைத்து மாணவர்களையும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு இதுதொடர்பான மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு: இக்கல்லூரிக்கான அனுமதிகள் கருத்தரங்கின் முடிவில் வழங்கப்படவுள்ளதால் சமுகந்தரும் மாணவர்கள் தயவுசெய்து கல்விச்சான்றிதழ்களையும் எடுத்து வரவும்.

இக்கல்லூரியின் அனுமதிக்கான ஆகக்குறைந்த தகைமை G.C.E. O/Level 6 பாடங்களில் சித்தி.

இடம்: இராமநாதன் கல்லூரி மண்டபம், மருதனார்மடம்

காலம்: 09.05.2005 திங்கட்கிழமை

நேரம்: மாலை 3.30மணி

தொடர்புகளுக்கு: இல. 6, இந்து மகளிர் கல்லூரி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ. இலக்கம்: 0773068811, 0776093351

www.saito - college.edu.my

கல்லூரி அதிபர் Saito college.

(45151)(35-14-17-26)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 676 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 06-5-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5401706-5415933 |

லக்கினம் மீனம்

வெற்றி இலக்கங்கள்

09 21 32 41

ஜக்பொட் பரிசு ரூபா.17,43,500/- வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 24,42,300/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,12,865 | 10/- | 31,28,650/- |
| 2.இலக்கங்கள் | 28,792 | 20/- | 5,75,840/- |
| 1.இல லக்கினம் | 28,417 | 30/- | 8,52,510/- |
| 2.இல லக்கினம் | 2,578 | 100/- | 2,57,800/- |
| 3.இலக்கங்கள் | 771 | 500/- | 3,85,500/- |
| 3.இல லக்கினம் | 64 | 5,000/- | 3,05,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 17,43,500/- | - |
| மொத்தம் | 3,73,439 | - | 69,57,550/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 69,57,550/- தொடர் இல. 4467719 க்கு மேற்பட்ட நீலம் நிற டிக்கட்டுக்கள் 2005 மே 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5412682-0-95
5403306-8-78
5404747-0-93
5414726-8-61
5415375-6-34


## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

பேரன்புடையீர்!

இன்று (09.05.2005) திங்கட்கிழமை முற்பகல் 11.54 மணிமுதல் 1.24 மணி வரையுள்ள சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

ஸ்ரீ துர்க்கா ரெலிக்கொம்

SRI DURKKA TELE.COM.

என்னும் தொலைத்தொடர்பு நிலையத்தை இல.40, றக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C/42722)(52-16-24)

40, றக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர் B.ஜெயந்தி.


## கலாசாரப் போட்டிக்கு விண்ணப்பம்

செம்பியன்பற்று,மே9

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் பற்றிய அமைச்சின் அனுசரணையுடன் மருதங்கேணிப் பிரதேசத்தில் நடத்தப்படவுள்ள கலை இலக்கியப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைவாக மருதங்கேணி பிரதேச மட்டத்திலான பல்வேறு போட்டிகளில் பங்கு கொள்ளவிரும்புவோர் தங்களது ஆக்கங்களை வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனைக்கு அனுப்பி வைககுமாறு உதவி அரச அதிபர் கேட்டுள்ளார்.

போட்டி பற்றிய ஏனைய விவரங்களைத் தாம் சார்ந்த கிராமசேவகரிடமோ அல்லது மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையிலோ பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-36)

## டெங்கு ஒழிப்புக் குறித்து செயலகத்தில் இன்று கூட்டம்

தென்மராட்சி,மே9

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்புவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

டெங்கு நோய் ஒழிப்பு சம்பந்தமான செயற்றிட்டம் பற்றிய ஆலோசனைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

டெங்குக் காய்ச்சல் அதிக அளவில் பரவி வருவதை முன்னிட்டு இந்த நோய்க்கட்டுப்பாட்டுக்கு பரந்துபட்ட மக்களின் பங்களிப்பு அவசியம் என்றும் -

இது தொடர்புடைய திணைக்களத் தலைவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரை இக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறும் யாழ. அரச அதிபர் க.கணேஸ் கேட்டுள்ளார்.(எ-117)

## கால்நடைத் தீவன விற்பனை நிலைய திறப்பு விழா

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் கால்நடைகளுக்கான தீவனம், மருந்து விற்பனை நிலையம் இன்று திங்கட்கிழமை 11மணிக்கு ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது. கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அ.இரகுநாதன் தலைமையில் நடைபெறும் விற்பனை நிலையத் திறப்பு விழாவில் பண்ணையாளர்களுக்கு சுழற்சி முறைக்கடனும் வழங்கப்படவுள்ளது. (8-161)

## எவரெஸ்ட் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் 19 வயதிற்கு உட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்திவரும் எவரெஸ்ட் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாம் சுற்றுப்போட்டி இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் அணி எதிர் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி. (எ-190)


வெளிவாரிப் பட்டப்படிப்பு அலகும் கணனி கற்கைப் பிரிவும்

தம்பசிட்டி, பருத்தித்துறை

GAQ (2006ஆம்) ஆண்டுக்கான புதிய கலை/ வர்த்தக பிரிவு

ஆரம்பம்: 14-05-2005 (சனி)

காலை 10.00மணி.

(45145) - நிர்வாகம்.



உ

முருகன் துணை

## நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய உற்சவ விநாயகர் (ஸலபேர) பஞ்சகுண்டபக்ஷ மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கந்தன் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்த புண்ணிய பூமியாம் வடமராட்சிப் பகுதியில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலித்துக்கொண்டிருக்கும் வள்ளி தேவசேன சமேத சுப்பிரமணியப் பெருமான் சந்நிதியில் பார்த்திப வருடம் வைகாசி மாதம் 22ஆம் நாள் 05-05-2005 வியாழக்கிழமை துவாதசித் திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் கூடிய அமிர்தசித்த யோகமும் கூடிய புண்ணிய சுபதினத்தில் காலை 6.30 மணி முதல் 8.28 மணிக்குள் வரும் இடபலக்ன சுபமுகூர்த்த வேளையில் உற்சவ மூர்த்தி விநாயகப் பெருமானுக்கு (ஸலபேர) மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேகக் குருமார் விவரம்

1. சர்வபோதகாச்சாரியார் "சிவாகம கிரியாதத்துவநிதி" ஸ்ரீவிஷ்ணு ஸ்ரீ.க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்
2. பிரதிஷ்டா பிரதமகுரு "வேதாகம கிரியாஜோதி" பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய கௌரிபாலக்குருக்கள்
3. சர்வசாதகாச்சாரியார் "ஆகம கலாசூரி" பிரம்மஸ்ரீ S.பிரசாந்த சர்மா (வட்டுக்கோட்டை)

மங்கள வாத்தியம் ஆஸ்தான வித்துவான் B.T.சுந்தரேசன் குழுவினர்.

ஏனைய சிவாச்சாரியார்கள்

வேதாகமபூசணம் - பிரம்மஸ்ரீ ச.சுந்தரக்குருக்கள் (யாழ்ப்பாணம்)
காரியா தத்துவநிதி - பிரம்மஸ்ரீ க.சிவதாஸக்குருக்கள் (கொக்குவில்)
சிவாகம கிரியா ஞானபூபதி - செ.பரமானந்தக்குருக்கள் (கல்வயல்)
கிரியாபூஷணம் - ப.குருநாதக்குருக்கள் (கோப்பாய்)
உற்சவமூர்த்தி விநாயகர் உபயம்
பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய கௌரிபாலக்குருக்கள் (ஆலய பிரதமகுரு)

கும்பாபிஷேக கிரியைகள் சிறப்புற நிகழ்த்திய அனைவருக்கும் விநாயகப்பெருமான் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆலய பரிபாலன சபையினர்.

(சி-42741)(26-14-17)


## மரண அறிவித்தல்கள்

### மேரி யோசேப்பின் சிந்துஜா (சிந்து, ராசாத்தி)



மாதகலைச் சேர்ந்த மேரி யோசேப்பின் சிந்துஜா அவர்கள் நேற்று (08-05-2005) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் பருத்தித்துறை நியூஅஜஸ்மின் படகுதொழிற்சாலை உரிமையாளர் அ.அன்ரனி தேவகுமார் மேரி மரியநாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும். (இறுதிக்கிரியைகள் மாதகலில் இடம்பெறும்)

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல்.
(45150) (26-14-17)

தகவல்: அந்தோனிப்பிள்ளை (லச்சம்)

### நாகேந்திரம் நவரத்தினம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் நீர்வேலி தெற்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் நவரத்தினம் அவர்கள் 06-05-2005 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற பூபதியின் அன்புக் கணவரும் இரட்ணாநந்தன் (LONDON), கிருபாநந்தன் (DENMARK), சச்சிதாநந்தன் (CANADA), பரமாநந்தன் (ITALY), பிரேமாநந்தன் (ITALY), சுபாநந்தன் (ITALY) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தி, புவனேஸ்வரி, லதா, சுதா, காயத்திரி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, சுப்பிரமணியம், சுந்தரம் மற்றும் சரஸ்வதி (NORWAY) ஆகியோரின் சகோதரரும் நிருஷிகா, பிரதீபன், தனுஷா, பிரதாப், பிரகாஷ், நிகாஷின் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-05-2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 12.30 மணியளவில் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (45149) (26-14-17)

தகவல்: S.சுரேஸ், S.சுதாகர் (மருமக்கள்).



# உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள தந்தை செல்வா வாழ்ந்த மண்ணை மீட்டெடுக்கப் போராடுவோம்

## மாவை சேனாதிராசா அழைக்கிறார்

நல்லூர்,மே9

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் தந்தை செல்வா வாழ்ந்த இல்லம், வளவுகள் என்பனவும் அடங்குகின்றன. இதனை மீட்டெடுக்கப் போராடுவோம் என நாங்கள் உறுதியெடுப்போம்.

- இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அறைகூவல் விடுத்தார்.

தந்தை செல்வாவின் 107ஆவது பிறந்த நாள் நினைவுதினம் அன்னாரது நினைவாலயத்தில் தந்தை செல்வா அறங்காவல் சபையினால் நடத்தப்பட்டது.

அறங்காவல் சபைத் தலைவர் யாழ். தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அருட்திரு. எஸ்.ஜெபநேசன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவை சேனாதிராசா மேலும் பேசும்போது கூறியதாவது:-

எமது தமிழ்த் தேசிய இனத்தின், மண்ணின் விடுதலை, அவர் எமக்காக விட்டுச்சென்ற சொத்து, அந்த இலட்சியத்தை அடைய நாம் போராட வேண்டும். இன்றைய சூழலில் தந்தை 50 ஆண்டுகளுக்கு முன் தொடக்கிவைத்த போராட்ட வேர் உறுதியானது. தியாகத்தில் தொடங்கிய எமது போராட்டம் இன்று சர்வதேசம் வரை கொண்டு செல்லப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் 30 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்புக் கொண்ட மண் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ளது. அரசு இந்த நிலத்தைச் சுவீகரிக்க முயற்சிப்பதாகச் செய்திகள் கிடைத்துள்ளன. எமது மண்ணை மீட்க நாங்கள் எந்த வகையான போராட்டத்திற்கும் தயாராகவுள்ளோம். இன்று இடம்பெற்றுவரும் போராட்டத்திற்கு அனைவரும் ஒன்றுதிரண்டு ஆதரவு நல்குவோம். நாம் அவரது கோட்பாடுகளை நிறைவேற்ற எம்மை அர்ப்பணிப்பதே அவருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும். தமிழ்த்தேச மண்ணை மீட்க குறிப்பாக, அவர் வாழ்ந்த மண்ணை மீட்கவேண்டிய போராட்டத்தைத் தொடருவோம் - என்றார்.

பேராயர் எஸ்.ஜெபநேசன் அடிகளார் தனது தலைமையுரையில்:-

தீர்க்க தரிசனம்மிக்க அவர் சமஷ்டி முறையில் இனப்பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என அன்று கூறியதை இன்று பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அந்தப் பணியினைத் தொடர எவ்வகையான போராட்டங்களிலும் இணைந்து கொள்ள நாம் திடசங்கற்பம் கொள்ளவேண்டும் - என்றார்.

முன்னதாக தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் இடம்பெற்றன.(ப-111-204)

# சின்னத்திரை மாயையிலிருந்து விடுபடும்வரை மாணவர் கல்வித்தரம் மேம்பாடடையாது

## அனலைதீவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தெரிவிப்பு

ஊர்காவற்றுறை,மே9

பெற்றோர்கள் சின்னத்திரை மாயையில் இருந்து விழிப்புப் பெறும்போதுதான் பிள்ளைகளின் கல்வித்தரம் மேம்பாடடையும்.

- இவ்வாறு அனலைதீவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.பரத்துவாசன் தெரிவித்தார்.

அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்ட அனலைதீவு பிரதேச சபை உப அலுவலக நூல் நிலையத்தைத் திறந்துவைத்து உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

வீட்டுக்கு வீடு தொலைக்காட்சிகள் பெருகிக்கொண்டு வருகின்றன. பல பெற்றோர்கள் தமது பெரும்பாலான நேரத்தைச் சின்னத்திரையைப் பார்ப்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றனர்.

இது கிராமங்களைக்கூட விட்டுவைக்கவில்லை. இதனால், பரீட்சைப் பெறுபேறுகளில் முதன்மை வகிக்கும் கிராமப்புறப் பாடசாலைகளின் கல்வித் தரம்கூட காலப்போக்கில் வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பெற்றோர்கள், பிள்ளைகள் மத்தியில் பொழுதுபோக்கு அம்சங்கள் அதிகரித்துவிட்ட நிலையில் நூலகங்களின் பயன்பாடு குறைவடைந்து வருகிறது. இதனால் வாசிப்புத்திறன் மாணவர்கள் மத்தியில் மட்டுமன்றி பெற்றோர்கள் மத்தியிலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

எனவே, வீண்பொழுதுபோக்கு அம்சங்களைத் தவிர்த்து, நூலகங்கள் பக்கம் மாணவர்கள் தமது கவனத்தைத் திசைதிருப்புவதற்கு ஏற்ற வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும் - என்றார்.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை, அனலைதீவு உப அலுவலக வைத் ப அதிகாரி திருமதி ஜீசுகுமாறன் உரையாற்றுகையில் கூறியதாவது:-

நூலகங்கள், அவை அமைந்துள்ள பிரதேசத்தின் அறிவாலயங்கள். அவை பல ஏழை மாணவர்களின் அரும்பெரும் சொத்தாக விளங்குகின்றன. புலம்பெயர்ந்தவர்கள் பலர் ஆலயத் திருவிழாக்களுக்குப் போட்டிபோட்டுப் பணத்தைச் செலவழிக்கின்றனர். தமது பிரதேசங்களிலுள்ள நூலகங்கள் பல வசதிவாய்ப்புகள் இன்றி உள்ளன. இவற்றிற்கு அவர்கள் உதவி செய்வதன்மூலம் பலரின் அறிவுக்கண்ணைத் திறப்பதற்குப் பேருதவி செய்யமுடியும்.

தீவுப் பகுதியிலே மிகச் சிறந்த நூலகமாக விளங்கும் அனலைதீவு பிரதேச சபை நூல் நிலையத்திற்கு அதன் வாசகர்வட்டம் பல வழிகளிலும் அதன் வளர்ச்சிக்கு உதவி புரிந்து வருவது பாராட்டத்தக்கது - என்றார்.(ப-16-204)

# சைவப்புலவர்கள் சமயநிகழ்வுகளில் பங்குபற்றி அறநெறிக் கருத்துக்களைப் புகட்டவேண்டும்

## பட்டமளிப்பு விழாவில் அறிவுரை



நல்லூர், மே9

சைவப்புலவர்கள் எதிர்காலச் சந்ததியினரின் வழிகாட்டிகளாக விளங்க வேண்டும். தங்களைச் சூழவுள்ள இடங்களில் நடைபெறும சமயநிகழ்வுகளில் பங்குபற்றி எமது சமயத்தின் நன்நெறிகளை மக்களுக்குப் புகட்ட வேண்டும்.

சைவப்புலவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் பட்டங்களை வழங்கிப் பேசிய சைவப் புலவர் வ.கந்தசாமி இவ்வாறு கூறினார்.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 45 ஆவது ஆண்டு சைவப்புலவர் பட்டமளிப்பு விழா வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் சங்கத்தின் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

சைவப்புலவர் கந்தசாமி மேலும் பேசும் போது கூறியதாவது:

தொண்டு அடிப்படையில் செய்யும் சேவை எமக்கு மகிழ்ச்சியைத் தரும். நாம் பெற்ற பட்டத்தால் எமது நாட்டிற்கு, சமயத்திற்கு எந்த அடிப்படையில் தொண்டு செய்யலாம் என்பது பற்றிச் சிந்திக்கவேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும். உங்களது கடமைகளுடன் ஆலயப் பணிகளையும் செய்யவேண்டும். இத்தகைய செயல்களைச் செய்யும்போது அது சமுதாயத்திற்கு வழிகாட்டியாக அமையும். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா தெரியாமல் எத்தனையோ ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு எமது சமய நெறிகளைப் புகட்ட முன்வரவேண்டும். எமது சமய பண்பாடுகளைப் பேணும் கடமைகளில் இருந்து ஒதுங்கிக் கொண்டு, மக்கள் மதம் மாறி இருக்கிறார்கள் என்று சொல்வது அர்த்தமற்றது. வெறுமனே 'சைவப்புலவர்கள்' என்ற பட்டத்தைச் சுமந்து கொண்டிருக்காது சமய வளர்ச்சிக்கான செயற்பாடுகளில் உங்களை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும்- என்றார்.

சைவப்புலவர் திருஞானசம்பந்தபிள்ளை தமது தலைமை யுரையில் கூறியதாவது:-

எங்களது சமயக்கிரியை வழிபாடுகள் முறை பற்றிய அறிவு எமது மக்களிடம் குறைவு. பிறந்ததின விழாக்களைக்கூட கிறிஸ்தவப் பிள்ளைகளைப் போன்று ஒளியை அணைத்துக் கொண்டாடுகிறார்கள். இது குறித்து பத்திரிகைகள் கூட அறிவுரைகளை வெளியிட்டிருக்கின்றன. சிறிய விடயங்களுக்குள் கூட பெரிய உண்மைகள் அடங்குகின்றன. இவற்றைத் தெரிந்துகொள்ள மக்கள் மத்தியில் நீங்கள் எமது சமயம் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். பன்னிரு திருமுறைகளையும் சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கையும் கற்கவேண்டியது சைவர்களின் கடமையாகும். இவற்றில் சொல்லப்படும் வழிமுறைகள் நிறைவான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றன. மூத்தோர் காட்டும் பாதையில் தொடர்ந்து சென்று அவர்களது பணிகளை முன்னெடுக்க வேண்டியது இளையவர்களான உங்களது கடமையாகும். தமிழுக்கும் சமயத்திற்கும் பணியாற்றியதில் சைவப்புலவர்கள் எவ்வளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருக்கின்றார்கள் என்பதை உங்கள் பணிகளின் மூலம் உணர்த்துங்கள்- என்றார் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பராமாசாரிய சுவாமிகள்.

செல்வி சிவாஜினி கந்தையா, சைவப்புலவர் க.செல்லத்துரை, சைவப்புலவர் சி.வேலாயுதம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

2004 இல் சைவப்புலவர், இளஞ் சைவப் புலவர் தேர்வுகளில் சித்தியடைந்து பட்டம் பெற்றவர்களான சான்றிதழ்களை புலவர் வ.கந்தசாமியும் புராணபடனப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும் வழங்கினார்கள்.

சைவப்புலவர் செல்லத்துரையின் தலைமையில் கவியரங்கும் கமலநாதன் குழுவினரின் "மெய்கண்டார்" என்னும் வில்லிசையும் நடைபெற்றது.

# திராவிட கலாசாரத்தை பிரதிபலிப்ப[...]ய் புதிய கலாசார மண்டபம் அமையும்

## மாநகர ஆணையாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம் மாநகர சபையினால் அமைக்கப்படவுள்ள கலாசார மண்டபம் திராவிடகலாசார பண்பாடுகளைப் பிரதிபலிப்பனவாக அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் எமது பண்பாடு கலாசாரம் பேணப்படும்.

மேற்கண்டவாறு யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா குறிப்பிட்டார்.

'யுனெஸ்கோ' நிறுவனத்தினால் நடமாடும் நூலக சேவைக்கான பஸ்வண்டி கையளிப்பு நிகழ்வு யாழ்.பொது நூலகத்தில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் இடம்பெற்றது.

தனது தலைமை உரையின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.நகரப் பகுதியில் கலாசார மண்டபம் அமைக்கப்படவேண்டும் என்பதில் அரச அதிபர் அதிகம் அக்கறையாக இருக்கின்றார். அவரின் வேண்டுகோளுக்கமைய அமைக்கப்படுகின்ற கலாசார மண்டபத்திற்கு வேண்டிய ஒளி, ஒலி வசதிகளை 'யுனைஸ்கோ' நிறுவனம் செய்து தரவுள்ளது.

1981ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்நூல் நிலையம் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. மீண்டும் இந்நூல்நிலையம் இம்மண்ணில் தலை நிமிர்ந்து நிற்பதற்கு 'யுனைஸ்கோ' நிறுவனத்தின் பங்களிப்பு சுட்டிக்காட்டக்கூடியதாகும்.

நூல் நிலையம் கணனி மயப்படுத்தலுக்கென 30 கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. சர்வதேசத்துடனான வலைப்பின்னல் அமைப்பை உருவாக்கித் தந்தும் இதற்கான ஊழியர் கொடுப்பனவும் கூட 'யுனெஸ்கோ' நிறுவனம் வழங்கி வருகின்றது. இந்த வகையில் பொறுப்பாளர் ஆர்.பி.பெரேராவின் பங்களிப்பு என்பது பெரும் பங்களிப்பாகும்.

தற்போது கூட வாசகர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்கு வசதியாக மூன்று போட்டஸ்ரட் இயந்திரங்களைக் கூட இந்நிகழ்விலும் வழங்கியுள்ளார். நாம் கடந்த ஆண்டுகளில் பல்வேறு சிரமத்தின் மத்தியில் பழைய போட்டோ ஸ்ரட் இயந்திரத்தையே பயன்படுத்தி வந்துள்ளோம்.

மற்றும் நூலகத் தேவைக்கான தொலைநகல், தொலைக்காட்சிப் பெட்டி, ஒலிபெருக்கி சாதனங்கள் மற்றும் ஊழியர்களுக்கான பயிற்சிகள் என பல்வேறு வழிகளிலும் 'யுனெஸ்கோ'




உதவிகளை வழங்கியுள்ளது. முக்கியமான வெளிநாட்டுச் சஞ்சிகைகளுக்கான கொடுப்பனவுகளைக்கூட இவர்களே வழங்கிவருகின்றார்கள்.

நூலகத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு இறுவட்டுக்கள் கொள்வனவுக்கு 14 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதுடன், 20 லட்சம் ரூபாவை மொத்தமாக நூலகத்தின் தேவைக்கும் அபிவிருத்திக்குமென ஒதுக்கியுள்ளார்கள். ஆர.பி.பெரேராவைப் பொறுத்தவரையில் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்கள் போல் இல்லை.

இவர் (ஆர்.பி.பெரேரா) நூல்கள் அனுப்பும் திட்டங்களில் ஏதேனும் பிழைகள் காணப்பட்டாலும் கூட அவைகளைத் திருத்தவேண்டிய நிதி உதவிகளைத் தந்து உதவி செய்கின்ற மனப்பான்மை கொண்டவர் எனவும் குறிப்பிட்டார்.

அரச அதிபர் க.கணேஷ் உரையாற்றும் போது:-

நடமாடும் நூலக சேவைக்கென பஸ்வண்டியையும் நூல்களையும் 'யுனெஸ்கோ' நிறுவனம் வழங்கியதன் மூலம் பொதுநூலகம் மேலும் ஒருபடி முன்னுக்குச் சென்றுள்ளது. யாழ்.மாவட்டத்தினுடைய பெரும்பேறாக இருக்கும் இந்நூல் நிலையம் கடந்த காலத்தில் இடம்பெற்ற அனர்த்தத்தின்போது அழிக்கப்பட்டு மீண்டும் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது.

கலாசாரம், பண்பாடு, கல்வி, சமயம் போன்ற முக்கியமான இடங்களை அரசுடன் இணைந்து பாதுகாக்கவேண்டும். இந்தவகையில், வடக்கில் உள்ள சமய ஸ்தலங்களான கீரிமலை நகுலேஸ்வரம் திருக்கேதீஸ்வரம் திருக்கோணேஸ்வரம் போன்ற சமயத் தலங்களைக்கூட 'யுனெஸ்கோ' நிறுவனம் அரசுடன் இணைந்து பாதுகாக்க முன்வரவேண்டும் எனவும் வேண்டிக்கொண்டார். (ப-86)

# ஒழுக்கமும் கட்டுப்பாடும்தான் சிறந்த வீரனை உருவாக்கும்

## விளையாட்டு விழாவில் வலி.மேற்குப் பிரதேச செயலர்



வலி.மேற்கு,மே9

ஒரு விளையாட்டு வீரனின் வளர்ச்சிக்கு ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவசியம் தேவை. இவைகள் இருந்தால் தான் சிறந்த வீரனாக மிளிரமுடியும்.

-இவ்வாறு வலி. மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேசத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி அண்மையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றது.

வலி.மேற்குப் பிரதேச உதவிப் பிரதேச செயலர் திருமதி பா.தேவநந்தினி தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் சீ.ஏ.மோகன்றாஸ் மேலும் கூறியதாவது:-

விளையாட்டில் வெற்றியும் தோல்வியும் சகஜம், அதனை இலகுவாக ஏற்றுக்கொள்வதே ஒரு வீரனுக்கு அழகு. அதற்கு ஒழுக்கமும் கட்டுப்பாடும் இன்றியமையாததாக விளங்குகின்றன.

பிரதேச மட்டத்தில் நடத்தப்படும் இந்த விளையாட்டுப் போட்டிகள் மூலம் சிறந்த வீரர்கள் இனங்காணப்பட்டு அவர்களது திறமைகள் வெளிக்கொணரப்படுகின்றன.

விளையாட்டுக் கழகங்களிடையே வெற்றியையும் தோல்வியையும் ஏற்றுக்கொள்கின்ற மனப்பக்குவம் வளர்க்கப்படவேண்டும். சரியான பயிற்சிகளைப் பெறுவதன் மூலம்தான் சிறந்த வெற்றியாளனாக உருவாகமுடியும்.

இன்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்ட வீரர்களுக்குச் சரியான முறையில் பயிற்சிகள் வழங்கப்படவில்லை என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இந்நிலை மாற்றியமைக்கப்படவேண்டும். சிறந்த பயிற்சிகளும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்த விளையாட்டு வீரர்களை எம் பிரதேசத்தில் உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி றோகான் இராஜசிங்கம், பொதுமக்கள், விளையாட்டுவீரர், வீராங்கனைகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ப-175-204)

# பதவி வெற்றிடம்

**சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.**

பதவி: பொது முகாமையாளர்
பதவிக் குறியீடு: 101/8
சம்பளத்திட்டம்: 5250 - 7750 (31/99 சுற்று நிருபப்படி)
120x10 - 130x10

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கமைவாக 1250/-, 2500/- சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும்.

வயது: 18 - 45
(சங்கப் பணியாளர்களிற்கு மேற்குறிப்பிட்ட வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது).
பால்: ஆண்/பெண்
கல்வித்தகைமை:

அ. கூட்டுறவுப் பணியின் 9 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

*அல்லது*

10ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

*அல்லது*

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டத்துடன் அல்லது இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

*அல்லது*

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் உயர்தரம் சித்தி க.பொ.த. உயர்தரம் 3 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 28-05-2005**

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும்
அனுப்பவேண்டிய முகவரி: **தலைவர்,**
**சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.**

குறிப்பு: கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்களினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

(சி-42728)(26-14-45) **க.சந்திரவதனா, பதில்பொதுமுகாமையாளர்.**

# மே 7 முதல்

**பாடநூல் வெளியீட்டிலும் நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும் கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்**

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும்

## மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு, வெளிநாட்டு (ஆங்கில, தமிழ்) பாடநூல்களும் அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல...

இடம்: யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்
காலம்: 2005 மே மாதம் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை
நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை (புதிய நேரம்)
(வார இறுதி நாள்களும் விடுமுறை நாள்களும் உட்பட)

*சிறப்பு விலைக் கழிவு*

தொடர்புகளுக்கு:
தலைவர், வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
(சி 42629)

# வாழ்த்தி மகிழ்கின்றோம்

உ



சுன்னாகம் - மயிலணி மனோன்மணி சமேத அண்ணமகேஸ்வரப் பெருமான் திருக்கோயிலில் 05.05.2005 வியாழக்கிழமை அன்று ஏகதசருத்திர ஹோமப் பெருவிழாவை முதல்முறையாக அதிவிசேடமாக நிகழ்த்திய பெருமதிப்புக்குரிய **தாணு வாசுவேதக்குருக்கள்** அவர்களையும் கடந்த ஏழு ஆண்டு காலமாக எங்கள் ஆலயத்தை விதிமுறை தவறாது உற்சவங்கள் மற்றும் நித்திய நைமித்திய கருமங்களையும் சைவ ஆகம முறைப்படி நடாத்திவருகின்ற தாணு வாசுதேவக்குருக்கள் அவர்களின் மகனாகிய **வா.விஷ்ணுவர்தனசர்மா** அவர்களையும் பல்லாண்டுகாலம் வாழ்ந்து இறை பணியைச் சிறப்புற செய்துவர எம்பெருமான் அண்ணமகேஸ்வரரை வேண்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.



- சுபம் -

மயிலணி. சுன்னாகம். **ஆலய பரிபாலன சபையினர்**

Muthu Chunnakam.

உ
சிவமயம்

# விவாக சோபன சுபமுகூர்த்த அழைப்பு

அநேக நமஸ்காரம், ஆசீர்வாதம், உபயகுசலோபரி
ஸ்வஸ்திஶ்ரீ நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் சித்திரை மாதம் 28ஆம் நாள் (11-05-2005) புதன்கிழமை காலை 6.14 மணி முதல் 8.05 மணி வரையுள்ள (பழைய நேரம்) மிருகசீரிட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய இடப லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோயில்
முன்னாள் பிரதமகுரு **பிரம்மஸ்ரீ வெங்கடேச இரத்தினசாமிக்குருக்கள் சீதாலெட்சுமி**
தம்பதிகளின் பௌத்திரனும்
**பிரம்மஸ்ரீ இ.இராமசாமி ஐயர் (மணி) சுந்தரலட்சுமி** தம்பதிகளின் ஜேஷ்ட
புத்திரனுமான
**சிரஞ்சீவி வாசுதேவசர்மாவுக்கு**
*(ஆசிரியர், யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)*



சாவகச்சேரி இந்துக் கல்லூரி
முன்னாள் ஆசிரியர்
**பிரம்மஸ்ரீ ச.தியாகராஜ ஐயர்**
அவர்களின் பௌத்திரியும்
நகை வியாபார நிலைய
முன்னாள் கணக்காளர்
**பிரம்மஸ்ரீ தி.இலட்சுமிகாந்தம் ஐயர்**
அவர்களின் கனிஷ்ட புத்திரியும் ஆகிய
**சௌபாக்கியவதி தேஜோவதனியை**

**மானிப்பாய் அருள்மிகு மருதடி விநாயகர், சங்கத்தானை மீனாட்சி அம்மன் திருவருள் துணைகொண்டு, கன்னிகாதான பாணிக்கிரகண திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் நல்லூர் சிவன் கோயிலில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் பந்துமித்திர சகிதம் வந்து தம்பதிகளை ஆசீர்வதித்துச் சபையைச் சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.**

சமாவர்த்தனம் காலை 5.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்
வதூவர கிருகப்பிரவேசம் 11.05.2005 புதன் மாலை 5.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.
வரவேற்பு உபசாரம் மணமகன் இல்லத்தில் 12-05-2005 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும்.

நங்கள் நல்வரவை நாடும்:

பிரம்மஸ்ரீ இ. இராமசாமி ஐயர்
இ.சுந்தரலட்சுமி தம்பதிகள்,
இ.வாமதேவசர்மா,
**உடுவில் வீதி, மானிப்பாய்.**
T.P.: 077 3222813.



இருவீட்டார் அழைப்பு

ஸ்ரீமதி காயத்ரிதேவி இலட்சுமிகாந்தம் ஐயர் குடும்பத்தினர்
(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை),
சிவஸ்ரீ இ.வேதரூபக்குருக்கள் குடும்பத்தினர் (லண்டன்).
சிவஸ்ரீ தியாகராஜக்குருக்கள் குடும்பத்தினர் (லண்டன்)
**அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.**
T.P.: 077 6279671.

(45111)(26-14-45)

# வேலையாள்கள் தேவை

**பேக்கரித் தொழிலில் அனுபவமுள்ளவர்களும் விற்பனையாளர்களும் ஐசிங் தெரிந்தவர்களும் உடன் தேவை. நாளை 10.05.2005 நேரில்வரவும். (இருபாலாரும்).**

தொடர்பு: **றொலெக்ஸ் பேக்கரி,**
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(45094)

# இவரைக் காணவில்லை



கொக்குவில், தாவடி,
கே.கே.எஸ்.வீதியைச்
சேர்ந்த
**மகாலிங்கம் விஜயகாந்**
**(விச்சு)**

என்பவரைக் கடந்த 30-04-2005 சனிக்கிழமை முதல் காணவில்லை. இவர் கடைசியாகக் காணப்பட்டபோது நீல நிற அரைக்கை சேட் அணிந்திருந்தார். இவரைக் காணாமல் பெற்றோர் மிகுந்த வேதனையுடன் இருக்கின்றனர். கண்டவர்கள் உடனே கீழ்க்காணும் முகவரிக்கு தகவல் தாருங்கள்.

**திரு.க.சுந்தரலிங்கம்,**
**தாவடி, கே.கே.எஸ்.வீதி,**
T.P.: 077 6016267, 3532.
(45121)(26-14-45)

# SAAMSTECH இன்
## ஆங்கிலப் பயிற்சிநெறி

ஆங்கிலத்தினைக் கதைப்பதற்கான இலகுவான பாடநெறி இதுவே. இப்பாடநெறியானது நான்கு விடயங்களை அடிப்படையாகக் கொண்டது.

1. கதைத்தலுக்கான அடித்தளம்
2. சொல்வள விருத்தியாக்கம்
3. பழக்கப்படுத்தல்.
4. கதைப்பதற்கான சூழல்

**100% ஆங்கிலத்தில் கதைத்தல் மூலமான வகுப்புகள்**

- ❑ முதல் வகுப்பிலேயே கதைத்தலுக்கான முழுமையான அடித்தளம்.
- ❑ முதலாவது வகுப்பிலிருந்து 100% கதைத்தல் மூலமான பயிற்சி.
- ❑ முதல் 10 நாள்களிலேயே ஆங்கிலத்தில் கதைக்க உத்தரவாதம்.
- ❑ நேர்முகத்தேர்வுகளிலும் தூதரகங்களிலும் பதிலளிக்கமுடியும்.
- ❑ வயது, தரத்துக்கேற்ப தனித்தனிப் பிரிவுகள்

**காலம் : 3 மாதங்கள்**

**5 பேருக்கு மேல் சேரும் பல்கலைக்கழக மாணவர்கள், அலுவலக ஊழியர்களுக்கு ரூபா 3000/- மட்டும்**

(45124)

## SAAMSTECH

841, HOSPITAL Rd., CHUNDIKULI, JAFFNA. 021-4591571

## பண்ணையாளர் தெரிவுக்கு விண்ணப்பிக்கலாம்

வட்டுக்கோட்டை,மே9

வட்டுக்கோட்டை கால்நடை வைத்தியர் பணிமனைப் பிரிவுக்குட்பட்ட பண்ணையாளர்களில் இருந்து சிறந்த பண்ணையாளர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை கால்நடை வைத்தியர் பிரிவின்கீழ் உள்ள பண்ணையாளர்கள் வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அலுவலர் பணிமனையில் இம் மாதம் 31ஆம் திகதிக்குள் அலுவலக நேரத்தில் விண்ணப்பத்தைப் பெற்று விணணப்பிக்க முடியும் எனக் கால்நடை வைத்திய அதிகாரி ஜி.இரகுநாதன் தெரிவித்துள்ளார்.

(8-161)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

**எமது பாடசாலையில் நீண்ட காலமாக உப அதிபராகக் கடமை புரிந்து தற்போது அதிபர் கடமையைப் பொறுப்பேற்றுள்ள**

**செல்வி சிவமலர் சிவராசா**

*B.A., Dip. in Ed., M.Ed., Sc. Trd.* **அவர்கள் மேலும் பல உயர்வுகளைப் பெற்றுச் சிறப்புற வாழப் பாராட்டி வாழ்த்துகிறோம்.**

**மூளாய், சுழிபுரம்.** (c/42717)(46-11-45)

***பாடசாலைச் சமூகம், யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.***

# மோசமான நிலையில் வீதி

செம்பியன்பற்று,மே9

பருத்தித்துறை - சாவகச்சேரி வீதியிலிருந்து புற்றளைப்பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் இரு வீதிகளை இணைக்கும் வீதி நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாது மிகமோசமான நிலையில் காணப்படுகிறது.

இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்தும் எந்தப் பயனும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மழைகாலங்களில் இவ்வீதி வெள்ளவாய்க்காலாக மாறுவதாகவும் இதனால், இப்பகுதி மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-36)

## ஓராண்டு நினைவலைகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 - 05 - 1959 |  | 20 - 04 - 2004 |

### திருமதி விமலாதேவி நடராசா

**ஆண்டொன்று ஆனதுவோ அம்மா**
**நீங்கள் எமை விட்டுப்பிரிந்து – இன்று**
**ஆறாத துயரம் கொண்டு வாடுகின்றோம்**
**நீங்களற்ற இவ்வுலகில் என்றும்**
**மாறாதம்மா எம் துன்பம்.**

காளி கோவில் வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (45162) (53-11-12-29)

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### இராசதுரை கணநாதன்

(இளைப்பாறிய பரிசோதகர், மீன்பிடித் திணைக்களம்)



நல்லூரைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் தற்பொழுது லண்டனில் வசித்தவருமான இராசதுரை கணநாதன் 7.5.2005 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - தில்லையம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் குணரத்தினம்மாவின் அன்புக் கணவரும் பகீரதன், சுதாகரன், வாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தி, கங்கா, நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபாங்கி, பிரியாங்கி, அருசாந், ஐஸ்வினி, அபிசான், மதுரா, அபிரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.திருஞானம் (மைத்துனர்- Retired P.W.D. Overseer),
செ.வாலைஆனந்தம் (சகலன்).
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

5,Lake side crecent
East Barnet,
Herto EN4 8QH, U.K.
00442083648789 (45162) (53-11-12-29)

### கந்தையா தவச்செல்வம் (செல்வா)

கைதடி நுணாவிலைச் சேர்ந்த கந்தையா தவச்செல்வம் (செல்வா) 5.2005 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் லோகரஞ்சினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா - ராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - புவனேந்திரதேவி தம்பதிகளின் மருமகனும் புவனேஸ்வரி, கோமளேஸ்வரி, தனலட்சுமி ஆகியோரின் சகோதரனும் அற்புதராசா, நாகராசா, சிதம்பரப்பிள்ளை, திருவாசரூபி, நளாயினி, கிருபாசொரூபன், சதானந்தன் (இத்தாலி) ஶ்ரீஸ்வரன், கருணாகரன், பார்வதி, இன்பதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2005) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் குச்சப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*கைதடி நுணாவில்,*
*சாவகச்சேரி.* (45160) (53-11-12-29)

தகவல்:
சு.ஶ்ரீஸ்வரன் (மைத்துனர்).

### திருமதி குமாரசாமி சாந்தநாயகி

(பெரியதோட்டம், புத்தூர்)

புத்தூரைப் பிறப்பிடமாகவும் நல்லூர் பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி சாந்தநாயகி அவர்கள் நேற்று (08.05.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா குமாரசாமியின் அன்பு மனைவியும் கு. விக்கினேஸ்வரன் (சட்டத்தரணி), Dr. கு.மகேசன் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தில்லை ஈஸ்வரியின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, வேல்நம்பி (புத்தூர்), தாமோதரம்பிள்ளை சரஸ்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr. V. நல்லைநாதன் (கொழும்பு பெரியாஸ்பத்திரி), மஞ்சுளா சுதர்சன் (கனடா), Dr. ந. அருட்செல்வி (கொழும்பு பெரியாஸ்பத்திரி), Dr. சுதர்சன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் செந்தூரன், அபிராமி, அஞ்சனா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2005) திங்கட்கிழமை நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*21, பண்டாரிக்குளம் வீதி,*
*நல்லூர் வடக்கு, நல்லூர்.*
*T.P.: 021-222 3377* (45153) (54-11-12-29)

தகவல்:
க. குமாரசாமி (கணவன்),
கு. விக்கினேஸ்வரன் (மகன்),
கு. மகேசன் (மகன்).

# மந்திகை ஆலடிச்சந்தையில் மரக்கறிகள் திருட்டு

செம்பியன்பற்று,மே9

பருத்தித்துறை மந்திகை ஆலடிச் சந்தையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற திருட்டுச் சம்பவமொன்றில் மரக்கறி வியாபாரிகளின் கரட், உருளைக்கிழங்கு உட்பட 5 ஆயிரம் ரூபா பெறுமதியான மரக்கறிகள் திருட்டுப்போயுள்ளன.

இரவு நேரக்காவலாளி, இச்சந்தையை நிர்வகிக்கும் பருத்தித்துறைப் பிரதேச சபையினரால் நியமிக்கப்படாமையால்தான் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றதாக வியாபாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-36)


## விற்பனைக்கு

2 சிறி 35 இலக்க போட்பிரிபெக் கார் விற்பனைக்கு.
ராஜா தியேட்டரில் பார்வையிடலாம்.
(சி-427745)

## BARATHY சித்தன்கேணி

O/L DAY CLASS

90 பேருடன் பிரிவு I இற்கு அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

மீண்டும் ஒரு புதிய பிரிவு

ஆரம்பம்:
09.05.2005 திங்கள் காலை 8 மணி
அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்

A/L 2007

கலை, வர்த்தகப் பிரிவுகள்
புதிய பிரிவு நடைபெறுகின்றன.
யாழ்.ஆசிரியர் குழுவினால்
(45158)(29-12-11)


## கண்ணீர் அஞ்சலி

ஆசிரியர் நா.அம்பி அவர்களது அன்பு மனைவி

### திருமதி அ. ஜெயசுதா



அவர்களின் திடீர் மரணச்செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவேண்டி, அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள்,
பொருளியற் கல்லூரி,
யாழ்ப்பாணம் - இணுவில்.
BARATHY-சித்தன்கேணி.
(45157)(29-12-11)


## ராஜா யாழ்ப்பாணம்

மாதவன், ஜோதிகா, ஶ்ரீதேவி, மணிவண்ணன், சுந்தர்ராஜன் நடித்த
பிரியமானதோழி (ரீவ்ஸ்)
கா. நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
13 முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு பிரகாஸ்ராஜ் மற்றும் புதுமுகங்கள் நடிக்கும் அறிந்தும் அறியாமலும் (பு.நே.)

## நாதன்ஸ் சினிமா

ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

ஜெய் ஆகாஷ், மீரா, ராஜ்கிரண், செந்தில், ராதாரவி நடித்த
செவ்வேல் (ரீவ்ஸ்)



கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

## மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.
சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த

காட்சி நேரம்: 10.30a.m., 2.30.p.m., 6.30p.m., 9.30 p.m.

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

மூன்றாவது இனத்திரள் வாரம்
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த



காட்சிகள்: 11.00. 3.00. 7.00 10.00. (பு.நே.)
(ரீவ்ஸ்)


# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிற்றுண்டிச்சாலை இயங்கும்

தென்மராட்சி,மே9

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வளவில் சிற்றுண்டிச்சாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் இந்த சிற்றுண்டிச் சாலையை அமைக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி மீள இயங்கத் தொடங்கி மூன்று வருடங்களாகியும் அங்கு சிற்றுண்டிச்சாலை இல்லாததால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.(த-117)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுசாமி கனகசிங்கம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுசாமி கனகசிங்கம் அவர்கள் (07.05.2005) சனிக்கிழமை தலவாக்கலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுசாமி - மீனாட்சி தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி - அருந்தவநாயகி தம்பதியினரின் அருமை மருமகனும் கமலநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சதாசிவம், திருமதி ஆபரஞ்சோதி பரமயோகராஜசிங்கம், அம்பிகாபதி ஆகியோரின் சகோதரனும் உமாசங்கர்(விரிவுரையாளர், விவசாயபீடம், யாழ்.பல்கலைக் கழகம்), உமாதர்ஷினி (ஆசிரியை, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, தலவாக்கலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், லதா (உதவி நூலகர், யாழ்.பல்கலைக்கழகம்), கருணைராசன் (மிருக வைத்திய அதிகாரி, நுவரெலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் வரஜித், மகரதன் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2005) செவ்வாய்க்கிழமை 10 மணியளவில் அவரின் பருத்தித்துறை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர்மடம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பத்திரகாளி கோயில் ஒழுங்கை,*
*பருத்தித்துறை.* (45161)(29-12-11)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### சரவணமுத்து வினாயகமூர்த்தி

(மீசாலை மரக்கறிக் கடை)



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து வினாயகமூர்த்தி 07.05.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சரவணமுத்து (அமரர்) - காசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சாவித்திரியின் பாசமிகு கணவரும் வினோதன், ஊர்மிளா (சுவிஸ்), சர்மிளா (சுவிஸ்), பிலோமினா (புவனா), விஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் குணசேகர் (சுவிஸ்), அசோகதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிலாஸ் (சுவிஸ்), அஸ்வினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் இராசலச்சுமி (பூநகரி), பரமநாதன் அன்னலச்சுமி (குவைத்), புவனேஸ்வரி, கணேசமூர்த்தி, இதயகுமாரி, கேதீஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ரூபசிங்கம், கமலாதேவி, பாலச்சந்திரன், மல்லிகாதேவி (மல்லாவி), சரஸ்வதி (நுணாவில்), பரமேஸ்வரி (சுவிஸ்), விமலாதேவி (சுவிஸ்), விஜயரத்தினம் (சுவிஸ்), ஜெயச்சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2005) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.* (45154)(29-12-11)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தெய்வானை ஆழ்வாப்பிள்ளை

(பாக்கியம்)



துன்னாலை மத்தி, கோவிற்கடவையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானை ஆழ்வாப்பிள்ளை 07.05.2005 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை -சதேவிப்பிள்ளை ஆகியோரின் மகளும் இராமு ஆழ்வாப்பிள்ளை (குமாரசாமி)யின் அன்பு மனைவியும் இராமச்சந்திரன், புஸ்பராணி, புஸ்பலோஜினி, புஸ்பரஞ்சினி, புஸ்பறிட்டா, இராமசேது ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற தங்கவேலு, நவரத்தினம், காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் லீலாவதி, காலஞ்சென்ற தவரட்ணம் மற்றும் கருணாகரன், விக்கினேஸ்வரராஜா, ஆறுமுகதாஸ், அந்தோனி ஆகியோரின் மாமியாரும் நிஷாந்தன், நிமலன், சுதாகர், சுதர்ஸன், சுமணன், மிருதுளா, தீபனா, கபிலன், காலஞ்சென்ற நிரஞ்சன், விபுட்ஷன், நிவஜன், கௌதமன், கௌசிகா, ரம்மியா, சரண்யா, திவ்வியா, ஆரணி, போதினி, மேதினி, மோனிஸ், ரசனிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆதிஸ், அக்ஷை, பரனிசா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2005) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேரோண்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நெடிலி ஒழுங்கை,*
*கோவிற்கடவை,*
*துன்னாலை மத்தி,*
*கரவெட்டி* (45152)(29-12-11)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.



விடுதலைப் புலிகளின் போர்ப் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட 10 ஆம் ஆண்டு நிறைவையொட்டி போராளிகளுக்கிடையில் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் நடத்தப்பட்டன. நேற்றுக்காலை 6 மணியளவில் பரந்தன் சந்தியிலிருந்து ஆரம்பமான போட்டிகள் முல்லைத்தீவு நகரில் நிறைவடைந்தன.

போட்டியின் ஆரம்பத்தில் பெண்களுக்கான போட்டியில் கலந்துகொண்டவர்களுக்கு மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷாவும் ஆண்களுக்கான போட்டியில் கலந்துகொண்டவர்களுக்குப் போர்ப் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர் ஆதவனும் கைலாகுகொடுத்து உற்சாகப்படுத்துவதைப் படங்களில் காணலாம்.

## புலிகளுடைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாட்டை - தமது விமானத்தளத்துக்குப் புலிகள் பொருத்தியுள்ளனர் என்பது தற்போது ஊர்ஜிதமாகியிருப்பதாக அத்தாஸ் கூறுகின்றார்.

நிலத்திலிருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணைகள் ஒரு விமானத்தை இலக்கு வைத்துத் தன்னைத் தயார்படுத்தும்போது அதனை உணர்ந்து விமானத்துக்குரிய பாதுகாப்பு முன்னேற்பாடுகளைச் செய்துகொள்ளும் கருவிகளை இலங்கை விமானப்படை தனது ஹெலிகொப்டர்கள் உட்பட அனைத்து வான் கலங்களுக்கும் பொருத்தியுள்ளது.

இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்டர்கள் இரணைமடுவில் உள்ள புலிகளின் விமானத்தளப் பிரதேசத்தை நெருங்கியபோது - இரண்டு தடவைகள் இவ்வாறு அந்த ஹெலிக்கொப்டர்களில் உள்ள விமானஇலக்கு ஏவுகணைகளுக்கு எதிரான எச்சரிக்கைக் கருவிகள் தாமாகவே இயங்கியிருக்கின்றன. இதன் மூலம் புலிகள் தமது விமானத்தளத்துக்கு வான் வழிப்பாதுகாப்புக்கான ஏவுகணைகளைப்பொருத்தித்தமது விமானத்தளத்தைப் பாதுகாக்கின்றார்கள் என்ற விடயம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருப்பதாக அத்தாஸ் குறிப்பிடுகின்றார்.

கடந்த திங்களன்று புலிகளின் திருகோணமலைத் தளபதி சொர்ணத்தையும் திருகோணமலை அரசியல் பொறுப்பாளர் எழிலனையும் திருகோணமலையிலிருந்து கிளிநொச்சிக்கு ஏற்றிவந்த ஹெலிகொப்டரும் இவ்வாறு விமான எதிர்ப்பு ஏவுகணையின் இலக்குக்கு உள்ளாகியது என்றும் -

ஹெலிகொப்டரிலிருந்து எச்சரிக்கைக் கருவிகள் உடன் இயங்கி ஆபத்தை வெளிப்படுத்தின என்றும்-

நிலத்திலிருந்து ஏவப்படக்கூடிய ஏவுகணைகளின் இலக்கிலிருந்து ஹெலிகொப்டரைக் காப்பாற்றுவதற்காக, அந்த ஏவுகணைகளின் வழித்தடத்தை திசைதிருப்பிவிடக்கூடிய வெப்ப பாலூன்களை ஹெலிகொப்படரின் எச்சரிக்கை கருவி அடுத்தடுத்து நாலாபுறமும் வெளித்தள்ளியது என்றும்-

அத்தாஸ் தமது கட்டுரையில் மேலும் தெரிவிக்கின்றார். (க-3)

IIS CITY CAMPUS
MBA
விரிவுரைகள் ஆரம்பம்
Sikkim Manipal பல்கலைக்கழகத்தின் கல்வியாண்டு 2005/2006 இற்கான விரிவுரைகள் 14.05.2005 முதல் ஆரம்பமாகவுள்ளன. மேற்படி கற்கை நெறிக்குப் பதிவினை மேற்கொண்ட மாணவர்கள் 12ம் திகதிக்கு முன் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.
கற்கைநெறியில் இணைந்து கொள்ள விரும்பும் புதிய மாணவர்களும் 12.05.2005 வரை பதிவினை மேற்கொள்ளமுடியும்
Director
IIS City Campus,
# 181, Navalar Road, Jaffna.
☎021 222 8060

அதிரடி சலுகைகள்
அழைப்பிதழ்கள், விசிற்றிங்காட், வாழ்த்து அட்டைகள், கசற், CD கவர் போன்றவற்றை ஒரே தடவையில் பெருமளவு பிரதியாக்கம் செய்வோருக்கு
ரூ. 9/= மட்டுமே
மூர்த்தி ஸ்ருடியோ அன் டிஜிரல் கலர் லாப்
ஸ்ரான்லி வீதி (பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை), யாழ்ப்பாணம். 0714-168475
(C-42721)(51)
யாழ். வீதி, மானிப்பாய். 021-222 2884

## கணனிக் கல்வி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்தொடர்ந்த துப்பாக்கிதாரி யொருவர் இவர் மீது 9 எம்.எம்.ரக கைத் துப்பாக்கியால் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் கடும் காயமுற்ற மேற்படி இளைஞர் களுபோவிலை வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டு பின்னர் மேலதிக அவசர சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். நேற்று அதிகாலை 4.30 மணியளவில் அங்கு அவர் மரணமானார்.

இவரது கொலைக்கும் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கும் இடையில் தொடர்புகள் எவையுமுண்டா என்பது குறித்துப் பொலீஸார் விசாரணை நடத்திவருகின்றனர். (க-3)

## பள்ளிமுனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துவிட்டுச் சென்றிருக்கலாம் எனவும் பொலீஸார் நம்புகின்றனர்.

இதேவேளை, தியத்தலாவ இராணுவப் பயிற்சி முகாமை அண்டிய பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டொன்றும் ரீ-56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் ஒருதொகை ரவைகளும் பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

பண்டாரவளைப் பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றை அடுத்தே பொலீஸார் பற்றைக்குள்ளிருந்து இவற்றை மீட்டனர். (க-3)

## வெறும் வாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லூல்னேவ வாவிக்கருகில் நேற்று ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியைச் சேர்ந்தவர்களான விவசாய காணி அமைச்சர் அனுரகுமார திஸாநயக்கா, அமைச்சர் கே.டி. லால்காந்த உட்படப் பலர் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இரு தசாப்தகால யுத்தம் இப்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கின்றது. நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணப்படவேண்டும். கொழும்பில் சொகுசு வாழ்க்கை வாழ்பவர்களின் பிள்ளைகளோ மற்றும் அமைச்சர்மார், எம்.பிக்களின் பிள்ளைகளோ யுத்தத்தில் உயிரிழப்பதில்லை. இந்நிலையில் ஏழைமக்களின் பிள்ளைகள் பலியாவது நிறுத்தப்படவேண்டும். அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

நாட்டைத் தாரைவார்க்காமல் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தீர்வொன்றைக் காண முடியாதெனக் கூறிக்கூறி தீர்வுக்கான முயற்சிகளை ஒத்திப்போடமுடியாது. வார்த்தைக்கு வார்த்தை தவறு கண்டுபிடித்துக் கொண்டு இங்கு செயற்பட முடியாது.

அரசாங்கத்தில் ஒன்பது கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்துவங்கள் இருக்கின்றன. ஜே.வி.பிக்கும் எமக்கும் கொள்கை முரண்பாடு இருந்தாலும் நாம் நாட்டுக்காக ஒன்று சேர்ந்தோம். எனவே, அமைதி முயற்சிகளுக்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். வெறும் வாய்ப்பேச்சு இப்போது அவசியமில்லை. அமைதித் தீர்வே அவசியம்.

நாட்டில் விலைவாசி அதிகரித்துள்ளது. எரிபொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. மிகக் குறுகிய காலத்தில் இவ்வாறு விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாம் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த நடவடிக்கை எடுத்தால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் - இவ்வாறு ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (க-3)

## இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அயல் நாடுகளையோ வேறு எந்தவொரு நாட்டையுமோ அச்சுறுத்தும் நோக்கோடு தமிழ் மக்கள் ஆயுதங்களை வைத்திருக்கவில்லை. இது குறித்து இந்தியாவோ வேறு எந்த ஒரு நாடுமோ அச்சப்படத் தேவையில்லை - என்றார் தமிழ்ச்செல்வன்.

புலிகள் ஜனநாயக நீரோட்டத்திலும் இணைந்தவர்களாகவே இருக்கிறார்கள் என்றும் எனவே, இந்தியா உட்பட எந்தவொரு நாடும் பயப்படத் தேவையில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (கு-12)

## உண்ணாவிரதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினர்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, பா. அரியநேந்திரன், தங்கேஸ்வரி கதிர்காமன் ஆகியோர் நேற்று சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைச் சந்தித்தனர்.

தங்களுக்கு பிணை வழங்குவது தொடர்பாக சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கைதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் அளித்த உறுதிமொழியையடுத்து கைதிகள் உண்ணாவிரதத்தை கைவிட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீராகாரம் வழங்கி கைதிகளின் உண்ணாவிரதத்தை முடித்துவைத்தனர். (கு-12)

## சிவராமைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றிருக்கலாம் அவரைக் கடத்தி இவ்வளவு தூரம் கொண்டுவந்து சுட்டுப் போடத் தேவையில்லை.

எங்கோ ஒருவர் முன் அவரைக் கொண்டு செல்வதற்காகத்தான் அவர் கடத்தப்பட்டார். சிவராமை மடக்கிய இடத்துக்கு - அந்த நடவடிக்கைக்கு - நேரடியாக வரமுடியாத இக்கட்டில் அல்லது பாதுகாப்பான இடத்தில் இந்த சூத்திரதாரி நபர் இருந்ததால்தான் அவரது இடத்துக்கு சிவராமைக் கடத்திக்கொண்டு சென்றிருக்கிறார்கள். அந்த சூத்திரதாரி நபர் வேறு யாருமல்லர் கருணாவாகவே இருக்கலாம்.

தம்மோடு சேர்ந்து செயற்பட்டு விட்டுத் தமக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தவர் சிவராம் என்று ஆத்திரம் கொண்டிருந்தார் கருணா.

புலிகள் இயக்கத்திலிருந்து கருணா பிரிந்தபோது அதுவரை அவருடன் சேர்ந்து இயங்கி வந்த சிவராம் அதன் பின் கருணாவை மோசமாக விமர்சித்து வந்தார்.

சிவராம் மீது அதிக கோபம் கொண்டிருந்த கருணா சிவராம் தனது கையால் கொல்லப்பட வேண்டும் என்பதால் அதுவரை சிவராமுக்கு ஊறு ஏதும் விளைவிக்கவேண்டாம் எனத் தமது ஆள்களுக்குக் கூறியிருந்தார் என கிழக்குத் தகவல்கள் கூறுகின்றன.

சிவராமை கொழும்பில் வைத்துக்கொல்வதாயின் கருணா அதை எப்போதே செய்திருக்கலாம். கொழும்பில் பாதுகாப்பு ஏதுமின்றி பஸ்ஸில் திரியும் சிவராமைக் கொல்வது கருணாவுக்கு அப்படி ஒன்றும் சிரமமான காரியம் அல்ல. ஆனால் அதற்குக் கருணாவுக்கு அனுமதி முன்னர் வழங்கப்பட்டிருக்கவில்லை.

குற்றப் புலனாய்வு இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம் காணாமல்போய், அவரைக் கடத்தியவர்கள் புலிகளே என்று சந்தேகம் எழுந்த பின்னணியிலேயே கருணாவுக்கு சிவராமைக் கொல்லும் வேலைக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அதற்கான ஏற்பாட்டு வசதிகளை புலனாய்வுப் பிரிவு வழங்கி உதவியது.

டி.பி.எஸ்.ஜெயராஜின் கட்டுரையில் இந்தக் சாரப்படக் கருத்துகள் இடம்பெற்றுள்ளன. (க-3)

## இளைஞனின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மே 9

காரைநகர் கடலில் நீந்திக்கொண்டிருந்த சமயம் சுழியில் அகப்பட்டு உயிரிழந்தார் என்று தெரிவித்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றிரவு 11 மணியளவில் ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்தவரான வைரமுத்து மதிமுகராஜா (வயது 23) என்ற இளைஞரின் சடலமே ஒப்படைக்கப்பட்டதாகும்.

இவர் ஒரு கார்ச்சாரதி என்றும் - காரைநகர் கடலுக்கு நீந்தச்சென்ற சிலர் இவரது காரை வாடகைக்கு அமர்த்திச் சென்றனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

சடலம் பிரதே பரிசோதனை மற்றும் மரண விசாரணையின் பொருட்டு பிரதே அறையில் வைக்கப்பட்டுள்ளது. (கு-12)

## மூதூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுப் பகுதிக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையில் உள்ள பாலத்தில் நின்றவாறு தமது காவலரண் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று புலிகள் கூறினர்.

தாக்குதல் நடத்தியவர்களை தமது போராளிகள் துரத்திச் சென்றபோதும் அவர்கள் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை தத்தமது நிலைகள் மீது எதிர்த் தரப்பினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று இராணுவத்தினரும் புலிகளும் பரஸ்பரம் முறைப்பாடுகளைச் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு-க)

## கொல்லப்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட அரசியல் போராளிகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இராசலிங்கம் - சங்கருடைய சடலத்தை உறவினர்கள் பொறுப்பேற்றுச் சென்றுள்ளனர்.

மற்றைய சடலம் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக புலிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என வழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமடியாமடு பிரதேசத்தில் கருணா அணியினருக்கும் புலிகள் இயக்கத்தினருக்குமிடையில் இடம்பெற்ற மோதலின்போதே இவர்கள் இருவரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (கு-க-12)

கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
14.05.2005
16.05.2005 } பகல் 10 மணி
அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வாரஇறுதிப் பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.
இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(சி-42735)(29-11-12)

உ
ஓம் விராட் விஸ்வ பிரம்ம நம
மஹோற்சவகால வில்லிசை தொடர்
யாழ். திருநெல்வேலி பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு
இன்று 09.05.2005 முதல் 23.05.2005 வரை
தினமும் இரவு 9 மணிக்கு
வில்லிசைப் புலவர் கலாபூசணம்
க.நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி) குழுவினர் வழங்கும்
'ராமகாதை' என்ற பொருளிலான தொடர் வில்லிசை
(C/42746)(29-11-12)
அனுசரணை:
செ.பாலச்சந்திரன் ஆச்சாரியார்
காளிகா சிற்பாலயம்
திருநெல்வேலி - புத்தூர்.
- அம்பிகை அடியார்கள

## மரண அறிவித்தல்

### செல்லையா முத்துவேலு

(இளைப்பாறிய உத்தியோகத்தர், புகையிரதப் பகுதி)

ஆசிரியர் வீதி, பெரிய அரசடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா முத்துவேலு அவர்கள் நேற்று (08.05.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மு.உதயகுமார் (மகன்)
(சாலை முகாமையாளர். வ.பி.போ. சபை, கோண்டாவில்)
ஆசிரியர் வீதி,
பெரிய அரசடி, சாவகச்சேரி.
(45165)(29-11-12)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.